# நவராத்திரிப் பரிசு

சரோஜா ராமமூர்த்தி

உரிமை பதிவு]
கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை
[விலை ரூ.

Navayuga Prachuralayam,
TRIPLICANE, MADRAS.

முதற் பதிப்பு : 1947.

*Printed at the Madras Law Journal Press, Mylapore, Madras*
*MS. 76—15th September, 1947—2000 c.*

**சமர்ப்பணம்**

என் அன்னையின்

ஞாபகார்த்தம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நவராத்திரிப் பரிசு | ... 1 |
| 2. | விதியின் விளையாட்டு | ... 9 |
| 3. | பகவான் செயல் | ... 16 |
| 4. | வரப் பிரசாதம் | ... 20 |
| 5. | கற்பனைக் கணவன் | ... 28 |
| 6. | மனைவி | ... 35 |
| 7. | தெய்வ சங்கல்பம் | ... 41 |
| 8. | துரையின் யோசனை | ... 49 |
| 9. | ராசு மணி | ... 56 |
| 10. | ராதையின் கானம் | ... 62 |
| 11. | மீனாக்ஷியின் வீணை | ... 71 |
| 12. | பார்வதி | ... 78 |
| 13. | மூன்று உள்ளங்கள் | ... 86 |
| 14. | முத்து மாலை | ... 97 |
| 15. | பாகீரதி | ... 105 |
| 16. | சிலாபோகம் | ... 113 |
| 17. | அவர் வந்தார் ! | ... 121 |
| 18. | [illegible] | ... 128 |
| 19. | சிதைந்த காதல் | ... 135 |
| 20. | கல்யாணி | ... 147 |
| 21. | [illegible] | ... 153 |
| 22. | [illegible] | ... 160 |

# முகவுரை

ஒரு பத்து வருஷத்துக்குள் தமிழ் இலக்கியத்தில் சிறு கதைக்கு நிரந்தரமான ஸ்தானம் ஏற்பட்டு விட்டது. சிறுகதையின் அமைப்பில் உள்ள ரகசியந்தான் இதற்குக் காரணம் என்று சொல்லவேண்டியதில்லை.

கதை கேட்கும் ஆர்வம், மனிதனுக்குக் குழந்தைப் பருவத்திலிருந்தே இயற்கையாக ஏற்பட்டுள்ள சுபாவங்களில் ஒன்று. கவிதையிலும் தத்துவத்திலும் இருப்பதைவிட, வாசகர்களுக்கு நாவல் படிப்பதில் அதிகமாக உள்ள மோகத்துக்குக் காரணம் இதுதான். நாவல் வாசிப்பதற்குச் சிறிது பொறுமையும் வேண்டும். சிறுகதையோ நம் பொறுமையைக்கூடச் சோதிப்பதில்லை. சுமார் பத்துப் பக்கங்களில், ஆரம்பமும் முடிவும் கொண்ட ஒரு கதையே அடங்கிவிடுகிறது.

சிறுகதை, இலக்கியம் மட்டும் அல்ல. அது கலையுந்தான். சிறுகதையில் வாழ்க்கையே பிரதிபலிக்கிறது. அதன் மூலம் தத்துவ விசாரணை நடத்தலாம். கற்பனையின் சிகரத்தையே எட்டிப் பிடிக்கலாம். கதா சுவாரஸ்யத்தையும் தூண்டலாம்.

நாவலாசிரியனைவிடச் சிறுகதை ஆசிரியன் கைதேர்ந்த சிற்பி ஆவான். எழுத்துக்கு எழுத்து, சுவாரஸ்யம் குன்றாமல் கதையை நிர்மாணிக்கக்கூடிய திறமை அவனுக்கு இன்றியமையாதது. சிறுகதையின் ஒவ்வொரு வாக்கியமும் நாவலில் உள்ள ஓர் அத்தியாயத்தைப் போன்றதாகும். கோலமிடும் கை சரசரவென்று பொட்டுக்களை வைத்துக்கொண்டே போகிறது. அடுத்தபடியாகக் கோடுகளை இழுத்துப்

பொட்டுக்களை ஒன்று சேர்த்ததும், கண்ணைக் கவரும் உருவம் தோன்றுகிறது. சிறுகதை எழுதுகிறவனும் இந்த மாதிரி ஜால வித்தையில் கைதேர்ந்த கவிஞனாக இருக்க வேண்டும்.

இந்தத் தொகுதியில் உள்ள கதைகளைப் படிக்கிறவர்கள், மேலே சொன்னதை உரைகல்லாக வைத்துக் கொண்டு அவற்றை மதிப்பிட முயலக் கூடும்.

இக் கதைகளில் பல, அவை பத்திரிகையில் வெளியாவதற்கு முன்பே, எழுத்துப் பிரதியிலேயே நான் படித்தவை. பத்திரிகையில் வெளியான போது படித்தது இரண்டாவது தடவை. இப்பொழுது முகவுரை எழுதுவதற்காக மூன்றாவது தடவையாகப் படிக்கும்போதும் அவை சுவை குன்றாமல் இருக்கின்றன என்று நான் உறுதியாகக் கூறக் கூடும்.

மனிதர்களின் ஆசா பாசங்களையும், விருப்பு வெறுப்புக்களையும், வாழ்க்கையின் சிக்கல்களையும் 'நவராத்திரிப் பரிசு', 'கற்பனைக் கணவன்', 'பாகீரதி' 'மீனாக்ஷி' முதலிய கதைகள் எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுகின்றன! கலைக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணம் செய்த பரமபக்தனின் கதையைச் சொல்லும் 'வரப் பிரசாதம்', 'ஓடக்காரி', 'சிலா போகம்' முதலிய கதைகள் சிறந்த கதை அமைப்புக்கு உதாரணங்கள். 'சிலா போக'த்தைப் படித்து முடித்ததும் உயர்ந்த கவிதையைப் படித்த பிரமையே மனதில் உண்டாகிறது. கவிதைக்குரிய கம்பீரமும், சொல் நயமும், பொருள் நயமும் அதில் துள்ளுகின்றன.

" திருச்சியில் மேலச் சிந்தாமணியில் ஒரு சுப்பிரமணிய ஸ்வாமியின் கோவில். அது அந்தப் பக்கத்துக்கே மிகுந்த சோபையைக் கொடுத்து வந்தது. கோவில் சிறியதுதான். ஆனால், அதில் இருந்த மூர்த்தி மட்டும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று சொன்னார்

கள். கோவிலைச் சுற்றி அழகிய தோட்டம். அதில் ரோஜா மல்லிகை மொக்குகள் மலர்ந்து கண்ணைச் சிமிட்டி மின்னின. அமைதியாகப் பவனி வந்த காவேரி ஆறும், கம்பீரக் கோயிலும் பார்க்கத் தெவிட்டாத காட்சியாக அமைந்தன." - இப்படி ஆரம்பிக்கிறது ஒரு கதை.

"கபில தீர்த்தம், அதன் சுற்றுப்புறம் எல்லாம் பாகீரதியின் கதையைக் கவனித்துக் கேட்பதுபோல் அமைதியாக இருந்தன. 'மாயனை மன்னு வட மதுரை மைந்தனை' என்று பாகீரதி குளத்தில் ஸ்நானம் செய்ய ஆரம்பித்தாள்.

"நானும் குளிருக்குப் பயந்து நடுங்கிக்கொண்டே மெதுவாகத் தண்ணீரில் காலை வைத்தேன்."

என்ன அழகான முடிவு! ஒரு விநாடி கண்ணை மூடிக்கொண்டால், கபில தீர்த்தம் நம் கண் எதிரே தோன்றுகிறது. குளிரினால் நம் உடலும் உள்ளமுங் கூடச் சிலிர்க்கின்றன. தமிழ் வசனத்திலே எவ்வளவு அற்புதமான சொற் சித்திரங்களைத் தீட்ட முடிகிறது? நாம் எல்லோரும் பெருமைப் படக்கூடிய விஷயந் தான் இது.

து. ரா.

# 1

# நவராத்திரிப் பரிசு

நவராத்திரிக்குப் பத்துத் தினங்களுக்கு முன்னிருந்தே கௌரி என்னைத் தொந்தரவு செய்துகொண்டிருந்தாள். அவள் தொந்தரவு பொறுக்கமுடியாததாய் இருந்தது. 'இந்தப் பெண்ணோடு போய் ஏன் சிநேகம் வைத்துக் கொண்டோம்?' என்றும் சில சமயம் நான் நினைத்ததுண்டு. கௌரி எதிரகத்துப் பெண்; பத்து வயதிருக்கும். முப்பது ரூபாய் சம்பளத்தில் ஏழு ஜீவன்கள் பிழைக்கவேண்டும். மகாலட்சுமி - கௌரியின் தாயார் - இந்தக் காலத்து ஸ்திரீகளின் கோஷ்டியில் சேராதவள். ஊரில் எத்தனை 'பாஷன்' தலை விரித்து ஆட்டட்டும்; அந்த அம்மாளின் கொசாம் புடைவையும், தலை முடிச்சும், நெற்றியில் மதுரைக் குங்குமமும் சிறிதாவது மாறுதல் அடைய வேண்டுமே! கௌரி நல்ல சிவப்பு; தந்தம் மாதிரி உடம்பு; தலை நிறைய மயிர். பொதுவாக லட்சணமாக இருப்பாள். குணம் சௌஜன்யமானது. நவராத்திரி வருகிறதென்றால் அவளுக்கு மிகக் குதூகலம். அவர்கள் வீட்டிலும் கொலு வைப்பார்கள். மகாலட்சுமிக்கு அவள் பிறந்தகத்தில் வாங்கிக்கொடுத்த பொம்மைகள் வர்ணம் போயும் உடைந்தும் இருந்தன. ஒரு நாள் அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தபோது, "நவராத்திரி வருகிறதே, ஒன்றும் ஏற்பாடு செய்யவில்லையா?" என்றேன்.

"என்ன செய்கிறது? பொம்மைகளெல்லாம் மூளியாகக் கிடக்கின்றன. பொறுக்கி எடுத்தால் இருபது பொம்மை கூடத் தேறுதுபோல் இருக்கே" என்றாள் மகாலட்சுமி.

"அதற்காகக் கொலுவைக்காமல் இருப்பதா? இருப்பதைக்கொண்டு குறைக்காமல் செய்யவேண்டியதுதான். பராசக்தி பூஜையாயிற்றே!"

"கௌரி சதா தொந்தரவு செய்கிறாள். 'இந்த வருஷம் புதுப் பொம்மை வாங்கம்மா; பழசு வச்சா நான்

யாராத்துக்கும் போய்க் கூப்பிடமாட்டேன்' என்று மூன்று நாளாக ரகளை. நான் என்ன பண்ண அம்மா? தங்கமான குழந்தையை அடையக் கொடுத்துவைத்தும் தரித்திரமாய் இருக்கிறேன்'' என்று கவலைப்பட்டாள் மகாலட்சுமி.

கௌரி எங்கோ போயிருந்தவள் ஓடிவந்தாள். வந்தவள் என்னைக் கவனிக்காமல், ''கோபியாத்துக் கூடத்திலே குளம் மாதிரிச் சின்னதா வெட்டரு. 'என்னத்துக்கடி?' என்று பங்கஜத்தைக் கேட்டா, 'அதுமேலே ஜலம் விட்டு மீன் மாதிரி பொம்மை இருக்கு பார், அதைவிட்டா மிதக்கும். சுத்திச் செடிபோட்டால் குளத்தங்கரை மாதிரி இருக்குமடி' என்றாள். நம்மாத்திலே ஒண்ணும் இல்லையாம்மா?'' என்றாள். அதற்கு மகாலட்சுமி பதில் சொல்லாமல், ''உன் பின்னால் யார் வந்திருக்கா பார்'' என்றதும் என்னைப் பார்த்துவிட்டு, ''நீங்கள் கொலு வைக்கப்போறதில்லையா மாமி?'' என்றாள் கௌரி.

''இன்னும் இருக்கிறதே; இப்பொழுதுமுதல் என்ன அவசரம்?'' என்றேன்.

''போன வருஷம் உங்காத்துப் பொம்மையிலே அந்த மகிஷாசுரமர்த்தனி ஒண்ணுதான் எனக்குப் பிடிச்சிது. அது இருக்கா மாமி?'' என்றாள்.

''இல்லாமல் என்ன? இருக்கிறது.''

''இந்த வருஷங்கூடப் போன வருஷம் மாதிரி தினம் ஒரு அலங்காரம் பண்ணுவேளோ?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''செய்கிறது'' என்றேன் நான்.

''அந்த மாதிரிப் பொம்மை இந்த ஊரில் யாராத்துலேயும் இல்லை'' என்று அவள் தானே சொல்லிக்கொண்டாள்.

நாங்கள் இந்த ஊருக்கு வந்து இரண்டு வருஷத்துக்கு மேல் ஆகிறது. போன நவராத்திரியின்போது ஊருக்கு நான் புதிது. எதிரகத்துக் கௌரியைத்தான் தெரியும். கொலு வைத்தேனே ஒழிய அவள்தான் ஊரழைக்கப் போவாள். என்னிடம் இருந்த பொம்மையில் மகிஷாசுர

மர்த்தனி ஒன்றுதான் பெரியது. சுமார் மூன்று அடி உயரம் இருக்கும்; சர்வலக்ஷணமும் பொருந்தியிருக்கும்.

தினம் ஓர் அலங்காரம் செய்யும்போது கௌரி என் பக்கத்திலேயே இருப்பாள்.

"மாமி, இந்தப் பொம்மை எங்கே வாங்கினேள்?"

"நான் வாங்கவில்லை அம்மா. என் தாயார் இறந்து போவதற்குமுன் வாங்கிக் கொடுத்தாள். அவள் ஞாபகப் பொருள் இது" என்றேன்.

"இந்த மாதிரிப் பொம்மை கிடைக்காதா மாமி?"

"என் கண்ணில் அகப்படவில்லை. இது வாங்கி எட்டு வருஷம் ஆகிவிட்டது" என்றேன்.

கௌரி நாள் தவறாமல் அந்தப் பொம்மையை ஒரு மணி நேரமாவது நின்று பார்க்காமல் இருக்கமாட்டாள். மஹிஷாசுர மர்த்தனி அவள் மனத்தைக் கவர்ந்துவிட்டாளோ என்னவோ?

* * *

நவராத்திரிக்கு முதல் நாள்.

பொம்மைப் பெட்டியைக் கிளறிக்கொண்டிருந்தேன். கௌரி என்னோடு அலைந்துகொண்டிருந்தாள். அவளகத்துப் பொம்மைகளிடம் மதிப்பு இல்லை அவளுக்கு.

"மாமி, மாமி, இந்த நாயைப் பார்த்தேளோ? உங்காத்துக் 'குண்டு' மாதிரியே இருக்கே. ஐயையோ! அந்தச் சிப்பாயைப் பாருங்களேன்" என்று குதித்துக் கொண்டிருந்தாள். நான் மஹிஷாசுர மர்த்தனியை வெளியில் எடுத்ததுதான் தாமதம். கையிலிருந்த அத்தனை பொம்மைகளையும் வைத்துவிட்டு என்னிடம் ஓடிவந்துவிட்டாள்.

"நாளைக்கு என்ன மாதிரி அலங்காரம் பண்ணப் போறேள்?" என்று கேட்டாள்.

"நீதான் சொல்லேன்."

"அந்த வெள்ளைப் புடைவையைக் கட்டி ஸரஸ்வதி அலங்காரம் பண்ணலாமே."

ஸரஸ்வதிபூஜை அன்றுதானே அப்படிச் செய்ய வேண்டும்? இன்று சயன அலங்காரம் செய்யலாம்'' என்றேன் நான்.

''ஹூம்...... சரி'' என்று ஆமோதித்தாள் கௌரி. அன்று பூராவும் மஹிஷாசுரமர்த்தனியை இடுப்பிலே வைத்துக்கொண்டு சுற்றிக்கொண்டிருந்தாள்.

''அடி அம்மா! அவளிடம் இப்படி அந்தப் பொம்மையைக் கொடுத்திருக்கையே. நாளும் கிழமையுமா உடைச்சு வைக்கப் போறாளே!'' என்று எச்சரித்தாள் மகாலட்சுமி.

''நான் ஒண்ணும் உடைக்கமாட்டேன் போ'' என்று அம்மாவை விழித்துப்பார்த்தாள் கௌரி.

மறு நாள் அவளிடமிருந்து அந்தப் பொம்மையை வாங்கப்பட்டபாடு தெய்வமறிந்து போயிற்று. அவளுக்கே கொடுத்துவிடுவேன் என்று நினைத்துக் கொண்டிருந்தாள். பொம்மை ஒன்றும் பிரமாதமில்லை. ஆனால் இறந்த என் அன்னையின் பரிசானதால் அதைக் கொடுக்க எனக்கு மனம் வரவில்லை.

முதல் நாள் கொலு முடிந்ததும் கௌரி என்னிடம் வந்து, ''மாமி, நான் ஒன்று கேட்கிறேன் தருவேளோ?'' என்றாள்.

''என்ன வேணும் சொல்லு?''

மஹிஷாசுரமர்த்தனி மாதிரி ஒண்ணு வாங்கிக் கொடுங்களேன். இதைக் கேட்கலை நான். வேறே சின்னதா இருந்தாலும் தேவலை'' என்றாள்.

''உனக்கு அந்தப் பொம்மை வாங்கித்தரவேண்டும் என்று போன வருஷமே கடையெல்லாம் தேடிப் பார்த்தேன். கடைக்காரனைக் கேட்டால், 'ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு மாதிரி வரும்; இப்பொழுது இல்லையே' என்று சொல்லிவிட்டான். உனக்கு வேறே ஏதாவது நல்லதாக வாங்கித் தரேன்.''

அதற்கு அவள் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

கௌரிக்கு என்னிடம் மிகுந்த விசுவாசம். பொம்மைக்கு அலங்காரம் செய்வதற்குப் பகல் ஒரு மணியில் இருந்தே தொந்தரவு செய்ய ஆரம்பித்துவிடுவாள்.

"என்ன மாமி, பேசாமல் இருக்கேளே. நாழி ஆகலையா? சாவியைக் கொடுங்கோ. எல்லாவற்றையும் எடுத்து வெளியில் வைக்கிறேன்" என்று நச்சரிப்பாள்.

அவள் தொந்தரவு பொறுக்காமல் சாவியைக் கொடுத்துவிடுவேன். அதை வாங்கிக்கொண்டாவது பேசாமல் இருப்பாளா?

"நீங்களும் வாங்கோ மாமி" என்று என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு கூடத்துக்குப் போவாள்.

"இது என்னடி தொந்தரவு?" என்று நான் கடிந்துகொண்டால்கூட - பாவம் - அவளுக்குக் கோபமே வருவதில்லை.

"இப்படி நம்மிடம் ஆசையாக இருக்கிறதே இந்தப் பெண். அந்தப் பொம்மையைக் கொடுத்துவிடுவோமே" என்று அடிக்கடி நினைப்பதுண்டு. ஆனால் அம்மாவின் நினைவு வந்தால் அந்த எண்ணம் மறைந்து போகும். 'நல்லதாக வேறு வாங்கித் தந்தால் போகிறது' என்று நினைப்பேன். மறுநாள் அவளுக்காக இரண்டு பொம்மைகள் வாங்கிக் கொடுத்தேன். முதலில் வாங்கிக்கொண்டு போனவள் சிறிது நேரத்திற்கெல்லாம் அவைகளைக் கொண்டுவந்து வைத்துவிட்டு, 'எனக்கு வேண்டாம் மாமி; அம்மா வையறா" என்றாள்.

மகாலட்சுமி அந்த மாதிரி மனுஷி இல்லை. எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

நான் மாலையில் மகாலட்சுமியைப் பார்த்ததும், "என்ன மாமி! கௌரியை வைதீர்களாமே. நான் அவ்வளவு செய்யக்கூடாதா அவளுக்கு?" என்றேன்.

"இதென்னடி வெட்கக் கேடு!" என்று ஆச்சரியப் பட்டாள் மாமி.

"நான் ஒண்ணும் சொல்லலையே. பொம்மையைக் கொண்டுவந்தவள் திரும்பவும் எடுத்துக்கொண்டு போய் விட்டாள்."

"கௌரி! பொய் சொல்ல எத்தனை நாளாகப் பழக்கம்?" என்றேன் நான்.

கௌரி பேசாமல் கண்ணில் நீர் துளும்பப் போய் விட்டாள்.

* *

அன்று ஸரஸ்வதி பூஜை. கௌரிக்குத் தெரியாமல் பொம்மைகளைக் கொண்டு போய் அவள் அம்மாவிடம் கொடுத்தேன். இரண்டு நாட்களாய் அவள் என் வீட்டுப் பக்கமே வரவில்லை. காரணம் தெரிந்ததுதானே! கௌரியின் கோபம் தணியவேண்டுமானால் மகிஷாசுரமர்த்தனி அவள் வீட்டுக்குப் போகவேண்டும்!

"கௌரி, இன்று ஸரஸ்வதி வேஷம் போட்டிருக்கேன்; நீ வரமாட்டயா?" என்று கூப்பிட்டேன்.

"நான் வரலே மாமி" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

நான் மனத்திற்குள் சிரித்துக்கொண்டேன்.

"இந்தக் குழந்தைகள், தாங்கள் கோரும் வஸ்து கிடைக்காவிட்டால் என்ன ரகளை பண்ணுகிறதுகள்! அடே அப்பா! கௌரியின் கோபந்தான் என்ன? பிரமாதமாக இருக்கிறதே" என்றேன், மகாலட்சுமியைப் பார்த்து.

"அவள் கிடக்கிறாள். வராமல் போகிறாளா என்ன?" என்றாள் மகாலட்சுமி.

விளக்கு ஏற்றினதும் கௌரி தன் ஆவலை அடக்க முடியாததனாலோ என்னவோ ஓடி வந்து தூரத்தில் நின்று பொம்மையைப் பார்த்துவிட்டு ஓடிப் போய்விட்டாள்.

"கௌரி, கௌரி!" என்று இரண்டு தரம் கூப்பிட்டேன். அவள் வாசற்படி இறங்கியதும் என்னைத் திரும்பிப் பார்த்த பார்வை என் மனத்தைக் கலக்கிவிட்டது.

"சீ என்ன காரியம் செய்துவிட்டோம்? அப்படி என்ன பிரமாதம் இது? பொம்மையைக் கொடுத்துவிட்

டால்தான் என்ன?''........ஆனால் அம்மாவின் ஞாபகம் மறைந்துவிடுமே'' என்று ஒரு வழியும் தோன்றாமல் திகைத்தேன்.

நவராத்திரி கழித்து மூன்று நாள் வரையில் கௌரி எங்கள் வீட்டுப்பக்கமே வரவில்லை. வீட்டில் அனைவரும், ''கௌரி ஊரில் இல்லையா என்ன?'' என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

''போய்ப் பார்த்துவிட்டு வருவோம்'' என்று கௌரியின் வீட்டுக்குப் போனேன். கூடத்தில் படுத்துக்கொண்டிருந்தாள்.

''கௌரிக்கு என்ன உடம்பு?'' என்று கேட்டேன்.

''ஜுரம்'' என்றாள் மகாலட்சுமி.

கௌரி கண்ணைத் திறந்து பார்த்துவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டாள்.

''கௌரி! உடம்புக்கு என்னம்மா?'' என்றேன்.

''ஜுரம் மாமி'' என்றாள் கௌரி.

''ஸரஸ்வதி பூஜையன்று ராத்திரிப் படுத்தவள்தான்'' என்றாள் மகாலட்சுமி.

என் மனத்தை என்னவோ செய்தது.

'ஒருவேளை அந்தப் பொம்மை அவளை இப்படிச் செய்துவிட்டதோ?' அன்று அவள் என்னைப் பார்த்த பார்வை மறுபடியும் என் கண் எதிரில் தோன்றி மறைந்தது. அங்கிருந்து வீட்டுக்குப் போனதும் பொம்மையைப் பெட்டியிலிருந்து எடுத்து வெளியில் வைத்தபிறகுதான் என் மனம் நிம்மதியடைந்தது.

மறுநாள் காலை கௌரியிடம் பொம்மையைக் கொடுத்தேன். அவள் ஆவலோடு, ''ஏது மாமி, எனக்காக வாங்கினீர்களா?'' என்றாள்.

''இல்லை; என் பொம்மைதான்.''

"உனக்கு வேண்டாமாடி அம்மா? இந்த அசடு கேட்கிறதென்று கொடுத்துவிட்டு நிக்கறயே" என்றாள் மகாலட்சுமி.

"பரவாயில்லை; அவள்தான் வைத்துக்கொள்ளட்டும்" என்றேன் நான்.

"இது எனக்கு நவராத்திரிப் 'பிரைஸ்' இல்லையா மாமி" என்றாள் கௌரி.

"ஆமாம் நவராத்திரிப் பரிசுதான்" என்றேன்.

கௌரி என்னைச் சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

இந்த வருஷம் மஹிஷாசுரமர்த்தனிக்கு அலங்காரம் பண்ணக் கௌரியின் வீட்டுக்குப் போகாமல் இருக்க முடியவில்லை.

## 2

# விதியின் விளையாட்டு

இருளைப் பிய்த்துக்கொண்டு, பளீரென்றது ஒரு மின்னல். வானம் டமடம என்று இடித்தது. ஆகாயத்தில் பொத்தல் விழுந்துவிட்டமாதிரி தடதட என்று மழை கொட்டிக்கொண்டிருந்தது. திடீரென்று மழையின் வேகத்தை அமுக்கியவாறு, "மைதிலி! நீ எங்கே போய் விட்டாய்?" என்ற தீனமான குரல் ஒன்று எழுந்தது. நடுத் தெருவில் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டே. ஒரு ஸ்திரீ ஓடினாள். இந்தச் சம்பவத்தை நான் அடிக்கடி பார்த்திருப்பதால் எனக்கு இது ஒன்றும் அதிசயமாகத் தோன்றவில்லை. எங்கள் குடும்ப சிநேகிதர் ஒருவர் வந்திருந்தார். ஏதோ பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த அவர் மூக்குக் கண்ணாடியைத் தூக்கிவிட்டுக்கொண்டு ஜன்னல் அருகில் போய் நின்று அவளைப் பார்த்துவிட்டு, "என்ன இது இந்த மழையில்?" என்றார்.

"பைத்தியம்" என்றேன் நான்.

"பைத்தியமா, இவளுக்கா? ஏன் அப்படி?" என்று கேள்விகள் கேட்க ஆரம்பித்துவிட்டார்.

"விதி சில சமயம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையை கோரமாய் மாற்றிவிடுகிறதே. அந்த மாதிரி இவளும் விதியின் விளையாட்டில் அகப்பட்டுக்கொண்டாள்."

"இந்தத் தத்துவம் எனக்குத் தெரியும். கதையைச் சொல் பார்க்கலாம்" என்றார் நண்பர்.

உண்மையிலேயே அந்தக் கதை கொஞ்சம் கோரமானதுதான்.

* * *

ராமநாதன் கொஞ்ச நாள் வரையில் ஏதோ உத்தியோகத்தில் இருந்துவிட்டு, சொந்த ஊருக்கு வந்துசேர்ந்து

விட்டான். சிறு வயதிலிருந்து தன்போக்காக இருந்தவனை இறந்துபோன அவன் தகப்பனார் ஒரு வேலையில் நாலு பேரைப்போல் பிணைத்துவைத்தார். அது ராமநாதனுக்குச் சரிப்படவில்லை. ஊரில் நிலத்தில் கிடைக்கும் வரும்படியை வைத்துக்கொண்டு பஜனைமடத்தில் கதைபண்ணிக் கொண்டு காலத்தைக் கழித்தவனுக்கு இது கட்டிப் போட்ட மாதிரி இருந்தது. காலணாக் கடுதாசியைத் துரையிடம் நீட்டிவிட்டுப் பேசாமல் வந்துவிட்டான். ஊரில் பொழுது போவதற்கு இரண்டு மூன்று வீடுகளில் சங்கீத சிக்ஷை வைத்துக்கொண்டான். மற்ற நேரங்களில் இருக்கவே இருக்கிறாள் கோமதி. கோமதியும் ராமநாதனும் சதா சிரித்து விளையாடிக்கொண்டே இருப்பார்கள். மாமியார் நாத்தனார் என்று பயப்படுவதற்கு வீட்டில் யாரும் இல்லை.

ராமநாதனுக்கு அப்படி அபாரமான சிக்ஷை ஒன்றும் இல்லாவிட்டாலும், பாடினால் கேட்பதற்கு இன்பமாய் இருக்கும்; ரவை புரளும் கண்டம்; அந்த ஊருக்குப் பெரிய சங்கீத வித்வான் மாதிரி! நிலத்தில் வரும் வரும்படியை வைத்துக்கொண்டு சந்தோஷமாகக் குடித்தனம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் மைதிலி பிறந்தாள். குழந்தை 'குறு குறு'வென்று லக்ஷணமாக இருந்தது. குழந்தையைப்பற்றி அளவுக்கு மீறிப் பெருமைப்பட்டான் ராமநாதன். "நகரங்களில் ரேடியோவில் பாடும் வித்வான்களைப்போல் இவளையும் நாம் விருத்திக்குக் கொண்டுவரவேண்டும்" என்றெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தான். மைதிலியும் அவ்வளவு புத்திசாலியாக இருந்தாள். ஒரு தடவை ஐப்பசிமாதத்து மழையில் ஆற்றில் குளித்துவிட்டுவரப் போனான். காவேரி ததும்பி வழிந்துகொண்டிருந்தாள். செக்கச் செவேலென்று போய்க்கொண்டிருந்தவள் ராமநாதனைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு போய்விட்டாள். ஆற்றோரத்தில் இருந்த இடைப்பையன்கள். 'ஐயோ'வென்று அவன் கத்தினதாக மாத்திரம் கோமதியிடம் தகவல் தெரிவித்தார்கள்.

கோமதி முட்டிக்கொண்டு கதறினாள். மைதிலிக்குத் துக்கம் தெரியாவிட்டாலும், 'ஏதோ ஒன்றை நாம் இழந்துவிட்டோம்' என்றுமாத்திரம் தெரிந்திருந்தது.

கோமதியின் கண்களில் வழியும் நீரைத் தன் சொக் காயால் துடைத்துவிட்டு அவள் கழுத்தைச் சேர்த்துக் கட்டிக்கொள்வாள் மைதிலி. அப்பொழுது அவளுக்கு வயது ஐந்திருக்கலாம்.

ராமநாதன் இறந்துபோய் ஒரு வருஷம் ஆனதும் மைதிலி பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தாள். ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது நன்றாக இருட்டி விட்டது. விக்கி விக்கி அழுதுகொண்டே வந்தாள். கை யெல்லாம் அடித் தழும்புகள். கோமதியின் மனம் பதைத்துப் போயிற்று.

"எந்தப் பாவிக்குத்தான் குழந்தையை இப்படி அடிக்க மனம் வந்ததோ தெரியவில்லையே. குழந்தை துடித்துப் போகிறாளே" என்று மாய்ந்துபோனாள்.

"கோபியாத்து நாணுவின் சிலேட்டை உடைச்சுட் டேன் அம்மா. அவன் என்னை வாத்தியார்கிட்டே சொல்லி அடி வாங்கி வைச்சான்" என்று கோமதி சொன்னாள்.

கோமதிக்கு ஒரே கோபமாக வந்தது.

"பாழாய்ப் போன சிலேட்டுக்கு என் குழந்தையை இப்படியா அடிக்கிறது? அந்த வாத்தியார்தான் என்ன மடையா? இல்லை அந்தப் பையனுக்குத்தான் என்ன துஷ்டத் தனம்" என்று நினைத்துக்கொண்டு அவளைச் சமாதானப் படுத்தினாள். மறுநாள் அவளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவில்லை. மத்தியான்னம் பள்ளிக்கூடத்திலிருந்து ஒரு பையன் ஓடிவந்தான். மைதிலி அவனைப் பார்த்து விட்டு, "நேத்திக்கி வாத்தியார்கிட்டே சொல்லி அடி வாங்கி வச்சானே அவன் வந்துவிட்டான் அம்மா" என்று கத்திக்கொண்டே உள்ளே ஓடினாள். கோமதி ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "மகாராஜா உன் சிலேட்டுக்குப் பதில் நூறு சிலேட் வாங்கிக் கொடுக்க அவள் அப்பா பணம் வைத்திருக்கிறாரடா. என் குழந்தையை அநியாய மாக அடித்துக் கொன்றுவிட்டீர்களே. இப்ப எதுக்காக வந்தே?" என்றாள்.

நாராயணன் தலையைக் குனிந்துகொண்டே, "மாமி! மைதிலி இல்லாமல் எனக்குப் பள்ளிக்கூடம் போகப் பிடிக்கலை" என்றான்.

"ஆமாம்; அதனால்தான் அவளுக்கு அடிவாங்கி வைத்தாயாக்கும்" என்றாள் கோமதி.

"நீங்களே சொல்லுங்க மாமி; புது சிலேட்டை உடைச்சா யாருக்குத்தான் கோவம் வராதுன்னு?"

"அதுக்கோசரம் என்னை இப்படி அடிக்கிறதோ?" என்றாள் மைதிலி.

நாராயணன் எட்டி அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

"என்ன மாமி, பிரமாதப் படுத்துகிறீர்கள்" என்றவாறு அவளைப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துக்கொண்டு போனான்.

நாராயணனுக்கு உண்மையிலேயே மைதிலியின் பேரில் அன்பிருந்தாலும், 'பள்ளிக்கூடத்தில் போடப் போகும் டிராமாவுக்கு மைதிலி இல்லாமல் முடியாது. அவளை எப்படியாவது சமாதானப் படுத்தி அழைத்துக் கொண்டு வரவேண்டும்' என்று வாத்தியார் சொல்லியிருந்ததனால்தான் மைதிலியைத் தேடிக்கொண்டு வந்தான் அவன். இல்லாவிட்டால் ஆண்பிள்ளையான அவனுக்கு இருக்காதா?

* * *

பள்ளிக்கூடத்தில் நாட்டியத்துக்காக வந்திருந்த புது வாத்தியாரம்மாவுக்கு மைதிலியை நிரம்பப் பிடித்துப் போயிற்று. அவளுடைய களை பொருந்திய முகத்தில் வசீகர சக்தியிருந்தது. சாயங்காலம் வழிநெடுக அவளும் நாராயணனும் நாட்டியத்தைப்பற்றியே பேசிக்கொண்டு வந்தனர்.

"அந்த வாத்தியாரம்மா இன்னும் கொஞ்சம் ஒல்லியாக இருக்கக்கூடாதா? அவள் ஆடச்சே எனக்கு ஒரே சிரிப்பாய் வந்தது" என்றான் நராயணன்.

"போடா! என் எதிரில் நின்றுகொண்டு சிரிப்பு மூட்டுகிறாய். நாளைக்கு நான் ஆடச்சே நீ ஒண்ணும் வரவேண்டாம் போ" என்றாள் மைதிலி.

கோமதிக்கு இதையெல்லாம் கேட்கச் சிரிப்பு வந்தது. இந்த மாதிரித் தங்கமான குழந்தையைப் பெறக் கொடுத்துவைத்தும், பார்த்துச் சந்தோஷப்படாமல் போய்விட்டாரே " என்று வருத்தப்படுவாள்.

மைதிலியும் தினம் ஒன்று புதுசாய்க் கற்றுக் கொண்டு வந்து ஆடிக் காண்பிப்பாள். கோமதியின் இருளடைந்த வாழ்க்கையில் மின்னும் ஒரு மின்னல் கொடிபோல் இருந்தாள் மைதிலி.

அந்த ஊரில் அவர்கள் அத்தனை நல்ல டிராமாவை ஒரு தடவைகூடப் பார்த்ததில்லை. ஈசுவரன்கோவில் மண்டபத்துக்கு எதிரில் பெரிய பந்தல் போட்டு ஆட்டம் ஆடினார்கள். முதலில் மைதிலியின் நாட்டியம் ஆரம்பமாயிற்று. சபையில் இருந்தவர்கள் எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

" இந்தக் குழந்தையா இப்படி ஆடுகிறது? உடம்பு தான் என்ன வளைச்சல் வளைகிறது" என்று பேசிக் கொண்டார்கள். கோமதிக்கு ஆனந்தத்தால் கண்களில் நீர் வழிந்தது. "என் செல்லத்திற்குத் திருஷ்டிப்படாமல் இருக்கவேண்டுமே என்று பகவானை வேண்டிக்கொண்டாள். இந்தமாதிரி நிம்மதியாகக் கழிந்துகொண்டிருந்த அவள் வாழ்க்கையில் புயல் ஒன்று ஏற்பட்டது. பிரதி வருஷமும் வரும் ஆடிமாதத்தைப்போலவே அந்த வருஷமும் ஆடி மாதம் வந்தது. நதியில் புது வெள்ளம். ஊரில் எல்லோரும் காவேரிக்குக் கிளம்பினார்கள், மைதிலியும் போவதாகக் கோமதியைக் கேட்டாள். அன்று அவளுக்கு மனம் நிம்மதியாக இல்லை.

" ஆற்றங்கரைக்கா? அந்தப் பாழாய்ப்போன ஆற்றுக்குப் போகவேண்டாமடீ. உன் அப்பாவை வாயில் போட்டுக்கொண்டாள் அந்தக் காவேரி" என்றாள் கோமதி.

" நானும் போகணும் அம்மா. எல்லாரும் போறாளே" என்று பிடிவாதம் பிடித்தாள் மைதிலி.

"நம் விதிக்குக் குழந்தையின் ஆசையைக் கெடுப்பா னேன். அவருக்குக் காலம் முடிந்துவிட்டது" என்று தேற்றிக்கொண்டு மைதிலியை அனுப்பினாள்.

ஆற்று மணலில் மைதிலி தன் தோழிகளுக்கு நாட்டிய மாடிக் காண்பித்தாள். பொங்கிப் பிரவாகத்துடன் போகும் நதியில் ஜலம் திரட்டுகிறமாதிரி ஆடினாள். எல் லோரும் இரைச்சல் போட்டுக்கொண்டு அவள் பின்னால் ஓடினார்கள். மைதிலி கால் சறுக்கித் 'தடா' ரென்று விழுந்தாள். ஜலம் ஒரு சுழற்றுச் சுழற்றி அவளை அடித் துக்கொண்டு போய்விட்டது.

ஜலமட்டத்திற்குமேல் இரண்டு தடவை தலைப் பின்னல் தெரிந்தது. பிறகு அதுகூட இல்லை. கூட இருந்த பெண்கள் பயந்துபோய் ஓடிவிட்டார்கள்.

நாராயணன்மாத்திரம் இரைக்க இரைக்க ஓடி வந்தான். கோமதி தெருவில் நின்றுகொண் டிருந்தாள். "மாமி!" என்று நிறுத்தினான் அவன்.

"எங்கேடா மைதிலி?"

"மைதிலி..." என்று தடுமாறினான்.

"அவளுக்கு என்னடா வந்துவிட்டது?"

"மைதிலி ஆற்றோடே போயிட்டாள் மாமி. ஜலம் அடிச்சிண்டு போயிடுத்து. அப்பாடா! நெனச்சாலே பயமாயிருக்கு மாமி" என்று கண்ணை மூடிக்கொண்டான்.

"அடி, காவேரி! இவளையுமா உன் வாயில் போட் டுக்கொண்டாய்? ஐயோ விதியே" என்று வீடு அதி ரும்படி ஒரு சிரிப்புச் சிரித்தாள் கோமதி.

"மைதிலி! என் கண்ணு" என்று தலையில் மோதிக் கொண்டாள்.

"பாவம், பைத்தியம் பிடித்துவிட்டது" என்று நிறுத்தினேன்.

திரும்பவும் அதே பிதற்றல்.

"மைதிலி! அந்தச் சனியன் பிடித்த ஆற்றுக்கா போகணும்?" என்று கத்திக்கொண்டே திரும்பவும் ஓடி வந்தாள் கோமதி.

"இந்தா உன் மைதிலி" என்று ஒரு பொம்மையைக் கொடுத்தேன்.

அதை வாங்கிக்கொண்டு என்னைப் பார்த்துச் சிரித்த வாறே அதற்கு ஒரு முத்தம் கொடுத்தாள் கோமதி. பாவம்! அதில் ஒரு திருப்தி.

# 3

## பகவான் செயல்

அந்த வருடம் கோடை மிகவும் கடினமாக இருந்தது. விடுமுறை நாட்களைக் கழிக்கத் தகுந்த இடம் எது என்று எனக்குப் புலப்படவில்லை. எத்தனை நாளைக்கு இந்தப் பட்டணத்து ரோட்டில் தார் உருகும் காட்சியைக் கண்டு அனுபவிப்பது?

அனல் காற்று வீசிக்கொண்டிருந்தது. "போஸ்ட்" என்ற சத்தம் கேட்டுத் தெருக்கதவைத் திறந்தேன். நெற்றியில் வேர்வை சொட்ட, தபால்காரன் கடிதத்தை நீட்டினான். அவன் என்னை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. அவன் நாலைந்து வீடுகள் தாண்டிப் போயிருப்பான். அப்புறந்தான் என் சுய உணர்வை அடைந்தேன்.

உள்ளே சென்று கடிதத்தை உடைத்துப் படிக்க ஆரம்பித்தேன். பூமாடத்திலிருந்த என் அத்தை என்னை வரும்படி எழுதியிருந்தாள். பூமாடத்தைப்பற்றி நான் முன்னமேயே கேள்விப்பட்டதுண்டு. அழகிய கிராமம். தோப்பும் துரவுமாக இருக்கும். பொதுவாகப் பட்டணம் மாதிரி வெயில் கொளுத்தாது.

மறுநாள் பகல்வண்டிக்குப் புறப்பட்டேன்; பூமாடத்திற்குப் போக. குன்னேரி என்ற ரெயில்ஸ்டேஷனில் இறங்கி, இரண்டு மைல் போகவேண்டும். தயாராக மாட்டுவண்டியை ரெயிலடிக்கு அனுப்பியிருந்தாள் அத்தை. வண்டிக்காரன் தெம்மாங்கு பாடிக்கொண்டு வண்டியை ஓட்டினான். ஜல், ஜல்லென்று சலங்கை ஒலிக்க, வண்டி கட கடவென்று ஓடியது.

மாலை 6-மணிக்குக் கிராமத்து எல்லையை வண்டி அடைந்தது. சூரியன் தக தகவென்று தங்கம்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தான். அந்தத் தங்க மயமான ஒளியில் பூமாடமே அமிழ்ந்திருந்தது. பெரிய மனிதர்

யாரையோ எதிர்பார்ப்பவர்கள்போல் அந்தத் தெருவிலிருந்த அத்தனை பேரும் என் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

வண்டியை விட்டு இறங்கியதும், அத்தை பெண் காமு ஓடிவந்து என் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். எதிர் வீட்டுத் திண்ணையிலிருந்த சிறுமியின் கண்கள் சுழலமிட்டு என்னை நோக்கியவண்ணம் இருந்தன. என்ன குறுகுறுப்பான கண்கள்! களை சொட்டும் முகம். ஒரு நிமிஷத்தில் அவள் என் இருதயத்தின் ஒரு சிறு பகுதியில் இடம் பெற்றுவிட்டாள். அந்த ஊரில் அவள்தான் காமுவின் அந்தரங்க சிநேகிதி என்று பிறகு தெரிந்தது.

அத்தையும் நானும் கூடத்து விசுப்பலகையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

"காமு!" என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். எதிர்வீட்டுப் பெண் நின்றுகொண்டிருந்தாள்.

"காமு! உன் சிநேகிதி கூப்பிடுகிறாள்" என்றேன்.

"சிநேகிதியுமாச்சு! சனியனுமாச்சு! வேலை கீலை இல்லையா? என்ன விளையாட்டு வேண்டிக் கிடக்கு?" என்ற கடூரப் பழிமொழிகள் அத்தை வாயினின்றும் உதிர்ந்தன. சிறுமியின் முகம் சுண்டிவிட்டது. அவள் பேசாமல் போய்விட்டாள்.

* * *

பூமாடத்து ஸ்திரீ ரத்தினங்களுக்கு என்னைக் கண்டால் அதிசயம்! அந்தக் கிராமத்து எழிலை அவர்கள் அனுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை. அதனால் அவர்களை மூடர்களென்று சொல்லமுடியாது. பட்டணவாச நாகரிகத்தைப் பாராதவர்களுக்கு என்னைக் கண்டால் ஆச்சரியமாக இருந்தது அதிசயமில்லை.

நான் பூமாடம் போன ஒருவாரம் கழித்து நானும் காமுவும் அருகிலிருந்த மலை அருவிக்குப் போகப் புறப்பட்டோம். தெருக்கோடியைக் கடந்ததும், எதிர்வீட்டுப் பெண் எங்கள் எதிரில் வந்தாள். அவள் வதனத்தில் புன்னகை அரும்பியது. "மாமி! நானும் வரட்டுமா?

நீங்களும் காமு அம்மாவாட்டம் கோவிச்சுக்கமாட்ட யளே ?"

"இவ்வளவு சமத்தான பெண்ணை அத்தை ஏன் கடிந்துகொள்கிருள் ?" என்று நான் நினைத்தேன்.

"வாயேன், தாராளமாய் வரலாம்" என்றேன்.

"என் பேர் தெரியுமா, மாமி ?"

"தெரியாதே."

"கமலா! ரொம்ப நல்ல பேராக்கும். எங்கம்மா கமலா என்பாள். அப்பா கமுலு என்பார். உங்களுக்கு எது இஷ்டமோ அப்படிக் கூப்பிடலாம்."

மூவருமாய் மலை அருவிக்கு வந்துவிட்டோம். அவளுக்கு அங்கே பார்த்த ஒவ்வொரு பொருளும் ஆச்சரியமளித்தது. மாலைச் சூரியன் மேற்குத் திசையில் மறைந்தான். சரத் சந்திரன் உதய திசையில் தோன்றினன். அதற்குமேல் நாங்கள் அங்கே இருக்கக் கூடாதென்று, சுழன்று சுழன்று காற்று அடித்தது.

மறு தினத்திலிருந்து கமுலுவும் நானும் இணைபிரியாத் தோழிகள் ஆகிவிட்டோம். அத்தைமாத்திரம் வெடு வெடு என்பாள். அதை நான் பொருட்படுத்தவில்லை. கமுலுவிடம் அவள் அதிகத் துவேஷம் காட்டினுள் என்று சொல்வதற்கில்லை. அந்தக் காலத்து மனுஷர்களுக்கே கலகலப்பாய் இருந்தால் பிடிக்காது. கமுலுவின் குழந்தை உள்ளமும் கபடமற்ற தன்மையும் அத்தைக்குப் பிடிக்கவில்லை. அது சிலரின் இயற்கைக் குணம்.

இந்தக் கிராமத்திற்கு வந்து தங்கிய ஒரு மாதம் ஒரு நாளைப்போல் கழிந்துவிட்டது. அத்தையின் பிள்ளை கோபு காலேஜ் 'லீவ்'விட்டதும் அங்கே வரவில்லை. நந்திமலைக்குச் சிநேகிதர்களுடன் சென்றுவிட்டானும். அந்த வருடம் கமுலுவால்தான் எனக்குப் பொழுதுபோயிற்று என்று சொல்லவேண்டும்.

பட்டணத்துத் தார் ரோட் மனமுருகி என்னை மறுபடியும் அழைத்தது. நானும், அதன் வேண்டுகோளுக்கு இணங்கி ஊருக்குக் கிளம்பினேன். கமுலு கண்ணீர்

கொடுத்தாள். ''மாமி, என்னை மறந்துடாதிங்கோ'' என்று விக்கிக்கொண்டே சொன்னாள்.

கடக் கடக் என்று வண்டி தெருவைத் தாண்டிப் போய்விட்டது. கமுலுவின் கண்ணீர்வதனமும் மறைந்தது.

* * *

அத்தையின் ஊரைவிட்டு வந்து நான்கு வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. கமுலுவைப்பற்றி இடையில் காதால் அறிந்துகொண்டேன்.

அன்று மப்பும் மந்தாரமுமாக இருந்தது. ''போஸ்ட்'' என்ற சத்தம் கேட்டது. தபால்காரன் புன்னகையுடன், ''அம்மாவுக்குக் கல்யாணக் கடுதாசி வந்திருக்கு'' என்று கடிதத்தை நீட்டினான். அது பூமாடத்திலிருந்து வந்த கடிதம்.

''சிரஞ்சீவி கோபுவுக்குச் சௌபாக்கியவதி கமலாவைப் பாணிக்கிரகணம் செய்து கொடுப்பதாய்'' என்று வாசித்துக்கொண்டே போனேன். ''பாணிக்கிரகணம் பெரியவர்கள் நிச்சயம் பண்ணியிருக்க மாட்டார்கள்; கடவுளாவது அல்லது தம்பதிகளாவதுதான் நிச்சயம் பண்ணியிருக்கவேண்டும்! இல்லாவிட்டால் அத்தைக்கு முன்பு இருந்த துவேஷம் எங்கே, இப்பொழுது இருக்கிற சமரசம் எங்கே?'' என்று தீர்மானித்தேன்.

பூமாடத்துப் பழைய தெரு வழியாக என் வண்டி ஓடிற்று. வண்டிக்காரன் தெம்மாங்கு பாடவில்லை. கல்யாணச் சாப்பாட்டைப்பற்றி அவனுக்கு நினைவு. கமுலுவுக்கு அத்தை தலைவாரிப் பின்னிக்கொண்டிருந்தாள்.

''என்ன அத்தை, கமுலுவை உனக்குப் பிடிக்கிறதா?'' என்றேன்.

''பிடிக்காமல் என்ன? அந்தப் பிள்ளை ஒரே அடியாக, 'அவளைத்தான் பண்ணிக்குவேன்' என்றால், நான் என்ன செய்யமுடியும்? எப்படியாவது அவா நன்னா இருந்தாப் போதும். எல்லாம் பகவான் செயல்!'' என்றாள்.

கமுலுவை நான் வாரி அணைத்து ஆசீர்வதித்தேன்.

# 4

# வரப் பிரசாதம்

ஐந்தாறு வருஷங்களுக்குமுன் சில விஷயமாகப் பூந் தோட்டம் சென்ற என் தந்தையுடன் நானும் போயிருந்தேன். உத்தியோக அலுவல்களால் என் தந்தை காவிரி தீரத்தைவிட்டுச் சென்னைக்கு வந்துவிட்டமை யால், காவிரியோடு நெருங்கிப் பழகும் பாக்கியத்தை நாங் கள் சிறு வயதிலேயே இழந்துவிட்டோம். எங்கள் கிரா மமே எனக்கு மறந்துபோயிருந்தது. ஊரில் அல்லி மலர் கள் நிறைந்த குளமும், சிவாலயமும் தெருக்களும் ஏதோ கனவு கண்டவைபோல் என்முன் திட்டுத் திட்டாகச் சில சமயம் வருவதுண்டு. கனவில் கண்டு களிக்கும் தோற்றத் தைப்போல் இருக்கும். அவைகளை நேரில் காண அப்பா வுடன் பிடிவாதமும் பிடிக்கவேண்டி இருந்தது. பூந்தோட் டத்தில் சுப்பராம சாஸ்திரிகள் அகத்தில் இருக்கும் ஒரு திவ்வியமான ராமபட்டாபிஷேக படத்தைப்பற்றி வாய்க்கு வாய் அப்பா சொல்லிக்கொண் டிருப்பார்.

"அந்தமாதிரி ஒரு படத்தைப் பாரதபூமி பூராவும் தேடினுல்கூடக் கிடைக்காதம்மா! அவ்வளவு வரப்பிர சாதத்துடன் அமைந்த சித்திரம் அது" என்று மெய்ம் மறந்து அவர் சொல்லும்போதெல்லாம் 'இப்பொழுதே பூந்தோட்டம் போய் அந்தச் சித்திரத்தைப் பார்த்துவிட மாட்டோமா' என்ற ஆவல் கங்கு கரையில்லாமல் எழும். உண்மையாகவே பூந்தோட்டத்தை அடைந்தபோது, எங்கே பார்த்தாலும் ராம படங்களாகவே என் கண்முன் மின்னி மறைந்தன.

என் தொந்தரவு - ஆசைகூட - பொறுக்க முடியா மல் மற்ற அலுவல்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டு அப்பா என்னைச் சுப்பராம சாஸ்திரிகள் அகத்துக்கு அழைத்துக்கொண்டு போனார். அப்பொழுது உதயம் ஆக வில்லை. இன்னும் சிறிது நேரத்திற்குள் உதயம் ஆகிவிடும்

என்பதற்கு அறிகுறியாக அபூர்வ ஒளி ஒன்று இருளைக் கழிகொண்டு விரட்டிக்கொண்டிருந்தது. சிவாலயத்தில் இருந்து பிராதக்காலப் பூஜையின் மணி ஓசை கேட்டது. பசுக்களும் கன்றுகளுமாக இடையர்கள் தெருவில் போய்க் கொண்டிருந்தார்கள். ஸ்திரீகள் முத்து முத்தாகக் கோலம் போட்டுக்கொண்டிருந்தார்கள். தூங்கி வழிகிற ஒரு ஜீவனையும் அங்கே காணோம்.

சுப்பராம சாஸ்திரிகளின் அகத்து வாயிற்படியில் காலை வைத்ததும் 'கண கண' வென்ற மணியோசை எங்களை உள்ளே வரும்படி அழைத்தது. "சாஸ்திரிகள் பூஜை செய்கிறார்" என்று அப்பா பயபக்தியோடு மேல்வேஷ்டியை எடுத்து இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

பால ரவியின் ஒளி அறை முழுதும் பரவ, பல புஷ்பங்களின் வாசனையோடு அந்தப் பூஜை அறை காணப்பட்டது. என் தந்தை என் மனத்துள் கனவு அலைகளை எழுப்பி வந்த ஸ்ரீ ராம படம் மந்தஹாஸத்தில் காணப்பட்டது. படத்தின் தேஜஸை எடுத்துக் காட்ட அங்கே மின்சார விளக்கு இல்லைதான். ஆனாலும் குத்துவிளக்குச் சுடரே வெட்கிப் போகும்படியாக அதன் தேஜஸ் அந்த அறை பூராவும் வியாபித்திருந்தது. சாஸ்திரிகள் கண்ணை மூடித் தியானத்தில் இருந்தார். அநுபவத்தால் முதிர்ந்ததோடு வயதிலும் முதிர்ந்த சரீரம். ஸ்ரீ ராமனிடம் கொண்டிருந்த அளவற்ற பிரேமையால் அவர் முகம் காந்தி பெற்று விளங்கியது. மௌனமே குடிகொண்டிருந்த அவ்வறையில் சிறிது நேரம் நாங்கள் மெய்ம்மறந்து நின்றிருந்தோம். சாஸ்திரிகள் கண்விழித்துச் சாஷ்டாங்கமாக ஸ்ரீராகவனை நமஸ்கரித்துவிட்டு நிமிர்ந்து என் தந்தையை நோக்கினார்.

"வா அப்பா! ராமசந்திரா" என்று அன்பையெல்லாம் திரட்டி அழைத்தார். பகவானுக்கும் அவருக்கும் நமஸ்காரம் செய்துவிட்டு அப்பா நிமிர்ந்தபோது அவர், "இவள்தான் உன் பெண்ணோ?" என்று கேட்டார்.

"ஆமாம், உங்கள் படத்தைப் பார்க்கவேண்டும்

என்று தொந்தரவு செய்ததன்பேரில் அழைத்து வந்தேன்.''

"அருகில் போய்ப் பாரம்மா! சிறு வயதிலேயே பக்தி ஏற்படுவது நல்லது. ஸ்ரீ ராமன் அருள் பெற்றுத் தீர்க்க சுமங்கலியாய் இரு'' என்று ஆசீர்வதித்தார். சாஸ்திரிகள் மனம் பக்தியால் டக்குவம் அடைந்திருக்கிறது என்பதை அவர் பேச்சும் வினயமும் காண்பித்துவிட்டன.

"இந்த ராம சித்திரம் உருவான வரலாற்றைச் சொல்லவேணும்'' என்று அப்பா கேட்டுக்கொண்டதன் பேரில் சாஸ்திரிகள் ஆரம்பித்தார்.

* * *

"ஏறக்குறைய ஐம்பது வருஷங்களுக்குமுன் என் அத்தான் கிருஷ்ணசாஸ்திரிகள் எழுதிய படம் இது. கிருஷ்ணன் என்னைவிடப் பத்து வயது மூத்தவன். சிறுவயதிலிருந்தே படங்கள் எழுதுவதில் நல்ல ஆஸ்தை உண்டு அவனுக்கு. அவனுக்குப் பதினைந்து வயது நிரம்பியதும், இந்த ஊர்ச் சிவாலய உத்ஸவமூர்த்தியை ரிஷபவாகனரூடராய் எழுதிப் பெரிய மகான்களின் ஆசியைப் பெற்றவன். சிறு வயதிலிருந்தே கவிதை, ஓவியம் இரண்டிலுமே மனத்தை லயிக்கவிட்டுக் காவியத்தை அவனால் ரசிக்க முடிந்ததே தவிரக் கவிதை எழுத வரவில்லை. ஒரு நாள் கம்பனின் பாடல் ஒன்றை ஊன்றி ஊன்றிப் படித்தான். திடீரென்று என்ன தோன்றியதோ? ராமன் விஸ்வாமித்திரனுடன் தாடகை சம்ஹாரத்துக்குப் போகும் காட்சியைக் கவிதையை வைத்துக்கொண்டே சித்திரமாக எழுதிவிட்டான். இளஞ் சூரியன்போல் விளங்கும் சூரிய குல சிங்கங்களைத் தன் சித்திரத்தில் பார்த்துப் பார்த்து அன்று பூராவும் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தான். அவனிடம் ஒரு விசேஷ குணமும் உண்டு. தன்னைவிடப் பெரியவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்களிடம் தன் வித்தையைக் காண்பித்துப் பெருமையடையத் தான் எந்த விதத்திலும் ஏற்றவன் அல்ல என்பதுதான் அந்த எண்ணம். சித்திரம் எழுதுவதும் தனிமையில்தான். இந்த அறை ஒதுக்குப்புறமாகத்தானே இருக்கிறது? இது பூஜைக்கு

லாயக்கு இல்லேதான். ஆனுல்...இருக்கட்டும். பூராவையும் விஷயம் சொல்லிவிட்டு அறையைப் பற்றிச் சொல்ல வேணும் உனக்கு'' என்று சாஸ்திரிகள் தொடர்ந்து ஆரம்பித்தார்.

''அவன் தான் எழுதிய சித்திரத்தைக் கண்டு மனம் களிப்பதும் தனிமையில்தான். கூட நான் இருப்பதுண்டு. என்னை மட்டும் தன்னுடன் இருக்க அனுமதித்தான்.

''கம்பன் கவிதைகளேப் படிப்பதும் உடனே சித்திரம் எழுதுவதும், அவைகளேப் பார்த்துக் கண்ணீர் பெருக்கி மெய்ம்மறந்து போவதுமே அவன் தினசரித் தொழில்களாகப் போய்விட்டன. அகத்தில் பெரியவர்கள் எங்கள் இருவரையும் கடிந்துகொள்வார்கள்.

'' 'ஊரிலே ஒரு வேலைக்கும் துப்புக் கிடையாது. வீட்டுக்குள்ளேயே நீயும் உக்காந்திண்டு என்னடா செய்யறே சுப்பராமா?' என்று என் அத்தை கோபித்துக் கொள்வாள். அறைக்கதவைக் கிருஷ்ணன் திறந்தால் தானே?

'' 'நீ வேண்டுமானுல் போடா, என்னுல் இப்போது வர முடியாது' என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுவான் கிருஷ்ணன். அவன் எழுதிய சித்திரங்களின் முழுவனப்பையும் கண்டு களிக்க முடியாத நான் அத்தைக்குப் பயந்து வெளியே போய்விடுவேன்.

'' 'பையனுக்குக் காலத்தில் ஒரு கால்கட்டைக் கட்டணும். அவனே படம் எழுதறதே கதியாகக் கிடக்கருன், நீங்களோ அவனைக் கவனிக்கிறதே இல்லே' என்று தன் பர்த்தாவின்மீது கோபத்தைக் காண்பித்து வந்தாள் அத்தை.

'' 'அவனவன் கர்மாவின்படி நடக்கப் போகிறது. நீ ஏன் சங்கடப்படுகிருய்?' என்று அத்திம்பேர் அவளுக்குத் தேறுதல் சொன்னுல் வீட்டில் ரகளைதான்.

''அவன் மனத்தைக் கொள்ளேகொண்ட ஸ்ரீ ராமன் அப்பொழுது அவன் கையில் கல்யாண கோலத்தில் அமர்ந்திருந்தான். சீர்காழியில் இருந்த பெரிய மிராசுதார் ஒருவர்

தன் பெண்ணை இந்த ராம பக்தனுக்குக் கொடுக்க முன் வந்தார். கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. கிருஷ்ணனின் மனைவி ஸ்வர்ணம் அசல் ஸ்வர்ணம்தான். தன் பர்த்தாவின் மனம் கோணாமல் நடந்து, அவன் எழுதும் சித்திரங்களுக்கு உடனிருந்து ஏதாவது திருத்தங்கள் சொல்லுவாள்.

" 'பிள்ளை சரியில்லை' என்ற ஏக்கத்தால் அத்தையும் அத்திம்பேரும் அடுத்தடுத்துச் சில வருஷங்களில் இறந்து விட்டார்கள். ஊரிலிருந்த நிலம் புலன்களில் வரும் வரும்படி லாபமா நஷ்டமா என்பதையும் கவனிக்காமல் ஸ்ரீ ராமன் கதையைச் சித்திரமாக வரைவதையே தொழிலாகக் கொண்டான் அவன்........" என்று சொல்லிக் கொண்டே சாஸ்திரிகள் படத்தைப் பார்த்து யோசனையில் ஆழ்ந்தார்.

" அந்தப் படங்களெல்லாம் இப்பொழுது எங்கே?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"பொறு அம்மா! இந்தத் திவ்வியமான படம் அமைய இருக்கும்போது, அவைகளைக் கேட்ட நண்பர்களுக்குக் கொடுத்துவிட்டான். அவர்கள் வாழ்க்கைப் பாலத்தை இன்னும் பலமாக இணைக்கும்படி குழந்தை ஒன்றும் இல்லை ஸ்வர்ணத்திற்கு அது பெரிய குறையாகத்தான் இருந்தது.

* * *

"அந்த வருஷம் ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் வழக்கம் போல் ஆரம்பமாயிற்று. கிருஷ்ணன் அகத்தில் ராமாயணக் காலக்ஷேபமும் ஆரம்பமாயிற்று. கம்பனின் கவிதைச் சுவையை ஊரில் உள்ளவர்கள் அநுபவித்தார்கள். ஆனால் புராணிகருக்கு அடுத்தாற்போல் இருக்கும் அறையில் கிருஷ்ணன் உட்கார்ந்து புராணிகர் ஒவ்வொரு கவிதையையும் விளக்கிச் சொல்லும்போது மெய்ம்மறந்து கை என்ன எழுதுகிறது என்பது புரியாமலே கவிதை இன்பத்தில் கடைந்தெடுத்த அநேக ஓவியங்களைத் தீட்டினான். சித்திரங்கள் ஒன்றை ஒன்று வென்று விடும்போல்கள் சொட்ட அமைந்திருந்தன.

"ராமாயணக் காலக்ஷேபம் முடியும் நாள்; மறுநாள் பட்டாபிஷேக வைபவம். முதல்நாள் இரவு கிருஷ்ண னின் பேச்சு, செயல் யாவும் அதிசயமாக இருந்தன. வீட் டில் ஸ்வர்ணம்மட்டும் பட்டாபிஷேக வைபவத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண் டிருந்தாள். கிருஷ்ணன் அறையிலிருந்து வெளியே வரவில்லை. அது அவள் மனத்திற்குக் கொஞ்சம் வருத்தமாயிருந்தது என்று எனக்குத் தெரிந்தது.

"'உங்கள் அத்தானை நாளை வைபவத்தில்மட்டும் கலந்துகொள்ளச்செய்ய முயலுங்கள்' என்று ஸ்வர்ணம் என்னிடம் சொன்னாள்.

"'அம்மா! அவன் நிழல்போல் இருந்து சேவை செய் யும் உன் வார்த்தையைவிட என் சொல்லைக் கேட்பானா அவன்?' என்று நான் பதில் சொன்னேன்.

பட்டாபிஷேக வைபவம் சுப வேளையில் ஆரம்ப மாயிற்று.

"'ஹரே ராம்' என்று ராமநாமம் வீடு பூராவும் ஒலிக்கவே கிருஷ்ணன் எழுந்து வெளியே வந்து சற்றுப் பிரமித்து நின்று பட்டாபிஷேகத்திற்காக வைத்திருந்த படத்தைப் பார்த்துப் புன்னகை புரிந்துகொண்டே உள்ளே போக யத்தனித்தான்.

"'கிருஷ்ணா இப்படி உட்காரப்பா' என்று புராணி கர் அழைத்தார். அவன் புன்னகையோடு சென்று தன் அறைக் கதவைத் தாழிட்டான்.

"ஸமாராதனை எல்லாம் முடிந்து, இரவு வைபவங் களும் முடிந்துவிட்டன. ஸ்வர்ணம் தன் பர்த்தாவுக்காகப் பால் எடுத்துக்கொண்டு கலை நிரம்பிய அவ்வறைக் கத வைத் தட்டினாள். 'யார்? ஸ்வர்ணமா? வா' என்று கிருஷ்ணன் அவள் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டுபோய்க் கதவைத் தாழிட்டுக்கொண்டான். இந் தச் செய்கை எனக்கு வியப்பை அளித்தது.

"ஸ்வர்ணம் பகலெல்லாம் வேலை செய்த களைப்பால் அயர்ந்து தூங்கிவிட்டாள். கிருஷ்ணன் தான் எழுதிவந்த பட்டாபிஷேகப் படத்தின் திரையை நீக்கினான்.

"'பரதா! சரியாய் நின்று சேவைசெய்க! ஹே அஞ்சன புத்திரா! பாத தூளியைச் சிரசில் நீமட்டும் தரித்துக் கொள்ளுகிறாயே! ஜய ஜய ராம்' என்று கத்துவதைக் கேட்டு ஸ்வர்ணம் விழித்து எழுந்து பார்த்தாள். தன் கணவன் சிரமேல் கைகூப்பிக் கண்கள் நீரைச் சொரிய நின்று ராம மந்திரத்தை ஸ்மரிப்பதைக் கண்டாள். எதிரே கலையின் சிகரத்தை அடைந்த இந்தப் பட்டாபிஷேகப்படம் களைப் பறித்தது.

"'ராமா! நானும் வருகிறேன்' என்று கிருஷ்ணன் தடதடவென்று கதவை நோக்கி ஓடினான். கீழே தடாரென்று விழுந்தவனை ஸ்வர்ணம் மடியில் தாங்கிக்கொண்டாள்.

"உஷத்காலத்தில் சகல ஜீவன்களும் தெய்வ அருளைப் பாடித் துதித்திடும் நேரத்தில் ஸ்ரீ ராம சந்நிதானத்தில் கிருஷ்ணன் பகவானை அடைந்தான். அந்த உத்தமியும் அதிக நாள் வைதவ்வியக் கோலத்துடன் இருக்கவில்லை.

"அவள் அந்திய காலத்தில் என்னிடம், 'உலகின் ஐச்வர்யம் அத்தனையும் இந்தப் படத்துக்கு ஈடாக நிற்காது. இதற்கு ஈடு இதுவே. என் பர்த்தா வரப்பிரசாதத்தால் ஸ்ரீ ராமனின் பட்டாபிஷேகக் கோலத்தைக் கண்ணால் கண்டு களித்து எழுதிய சித்திரம் இது. உங்களிடம் நம்பிக்கை இருப்பதால் இதை உங்களிடம் விட்டுச் செல்கிறேன்' என்று சொல்லி என்னிடம் அளித்தாள்.

"அந்தப் பக்த தம்பதிகளின் ஆசியால் படத்திற்கு இன்றுவரையில் ஒரு குறையும் வைக்கவில்லை. நான் முதலில் சொன்னேனே: பூஜைக்கு இந்த அறை ஒதுக்குப்புறமாக இருந்தாலும் இதையே உபயோகித்துவருகிறேன் என்று. இதில்தான் என் அத்தான் பல அருமையான படங்களை எழுதியது; இங்கேதான் அவன் ஆத்மா ஈச்வரனை அடைந்ததும். இந்த அறையின் மகத்துவம் கொஞ்ச

கொஞ்சம் அல்ல" என்று ஆனந்த பாஷ்பம் பொழியக் கூறி முடித்தார் சாஸ்திரிகள்.

என் முன் கிருஷ்ண சாஸ்திரிகளின் வாழ்க்கை பூராவும் தோன்றி மறைந்தது. "அந்தப் பக்தரின் அறைக்குள் இருக்கிறோம்" என்று உணர்ந்து புளகாங்கிதம் அடைந்தேன்.

"*ஆஹா! அந்தப் படம்!* அது வரப்பிரசாதந்தான் என்பதில் சந்தேகமே இல்லை!"

## 5

# கற்பனைக் கணவன்

வருத்தம் தேங்கிய அந்தக் கண்களின் பார்வையைக் கண்டு, ரங்கனாதனின் மனம் உருகியது. நட்சத்திரச் சுடரின் ஒளியைத் தோற்கச் செய்துகொண்டிருந்த அந்தக் கண்களின் பிரகாசம், நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருவதை அறிந்த அவன் மனம் வாடியது. வேதபாடசாலையைப் பெருக்க வந்த சம்பகம் நீண்ட பெருமூச் செறிந்துகொண்டே, சர சரவென்று பெருக்கி விட்டு ஓடி மறைந்தாள். அவளுடைய பராமுகம்-ஏன், அலட்சியம் - அவனுடைய மனத்தை நோகவைத்திருந்தது. இருந்தாலும், சம்பகம் அவனுடைய பாலியத் தோழியாக இருந்து, அவனுடன் சகஜமாக விளையாடி மகிழ்ந்த நாட்களின் இன்ப நினைவால், அவளுடைய குற்றத்தை அவன் பொருட்படுத்தவில்லை.

சம்பகத்துக்கு இப்பொழுது வயது பதினாறு. வசந்தத்தில் மலர்ந்து பிரகாசிக்கும் மலரைப்போல் இருக்கவேண்டிய அந்த யுவதி, வாடிக் கருகிக்கொண்டு வருவதன் காரணம்: விவாகம் ஆகாததுதான். ராமனாத சாஸ்திரிகள் அவளுக்காக வரன்களுக்கு அலைந்தது கொஞ்ச நஞ்சம் அல்ல. பெரிய பட்டணங்களில் இருக்கும் சாஸ்திரிகளுக்கு வரும் வரும்படி, அந்தச் சிற்றூரில் இல்லை. ஏதோ சாப்பாட்டுக்குப் போதுமான அளவு கிடைத்துவந்தது. குடும்பமோ பெரியது. சம்பகம் மூத்தவள். புத்திசாலித்தனம், அழகு, பொறுமை முதலியவை நிறைந்திருந்தன அவளிடத்தில்.

மேனியில் சாயம்போன சீட்டிச் சிற்றாடை, கையில் கண்ணாடி வளையல்கள், மூக்கில் ரத்தின மூக்குத்தி, காதில் பழைய தோடு - இவை அவளுடைய அலங்காரங்கள். அவள் தலைமயிர் அழகாக வளைந்து சாட்டைபோல் தொங்கிக்கொண்டிருக்கும். குறு குறுவென்று பேசும் கண்கள்.

வீட்டில் சகலமான வேலைகளையும் அவளே செய்வாள். பெற்றோரிடத்தில் அத்தியந்த பக்தி. ஆனால், அவள் மனம் ஏதோ ஒரு பெரிய அதிர்ஷ்டத்தை நாடி, அவளுடைய பதினைந்தாவது வயதிலிருந்து திரிந்துகொண்டிருந்தது. எதிர்வீட்டு மீனாவின் கணவன் பட்டதாரி; பட்டணத்தில் நூறு ரூபாய் சம்பளம். அண்டை வீட்டுக் குந்தளத்தின் கணவன் பம்பாயில் வேலையாக இருக்கிறான்.

குந்தளம் வந்து இறங்கும்போது, அவள் முகத்திலும் அவள் பெற்றோர்களின் முகத்திலும் வடியும் உத்ஸாகத்தைக் கண்டு, தனக்கும் தொலைவிலேயே புக்ககம் வாய்க்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டாள் சம்பகம். ஆஜானுபாகுவாய், பெரிய படிப்பாளியாய், கை நிறையச் சம்பாதிப்பவனாய் ஒரு யுவன் அவளது கற்பனையில் வளர்ந்துவந்தான். இரவு கண்களை மூடினால், ஊர் பெயர் தெரியாத அந்தச் சுந்தர புருஷன் அவளை மயக்கி வந்தான்.

சாஸ்திரிகள், பக்கத்திலே அநேக வரன்களைப் பார்த்தார். வரன்களெல்லாம் ஊர் மணியமாகவும், பதினைந்து ரூபாய் சம்பளம் வாங்கும் குமாஸ்தாக்களாகவும் இருந்தார்களே தவிர, அவள் கற்பனையில் உருவான சுந்தர புருஷனைக் காணவே இல்லை.

ரங்கநாதன்! அவனை அவள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. மாநிறமாகத் தலையில் கட்டுக் குடுமியுடன்! சுறு சுறுப்பு வாய்ந்தவன் ரங்கநாதன்; சாஸ்திரிகளின் சிஷ்யன். "அப்பாவைப்போலத்தானே, அவனும் வீடு வீடாகத் திரியவேண்டும்? ஊரில் நல்லதும் கெட்டதும் மாறி மாறி வந்துகொண்டே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பிழைப்பேது அவனுக்கு?" சம்பகத்தின் மனம் அவனைத் துச்சமாக உதறித் தள்ள ஆரம்பித்தது. ஆனால் ரங்கநாதனின் உள்ளமோ அவளை உயர்ந்த வஸ்துவாக எண்ணி, ஆனந்தத்தில் லயித்து வந்தது. ஜாடைமாடையாக, "சம்பகம், தீர்த்தம் கொடு; சம்பகம், பாடசாலையைப் பெருக்கிவிடுகிறாயா?" என்று அவன் கேட்பான். சம்பகம் சுளித்த முகத்துடன், "ஏன்? நீதான் கொஞ்

சம் பெருக்கேன்! எனக்கு வேறே வேலை இல்லையா?" என்பாள். அவளுடைய இனிய குரலைக் கேட்டதே போதும் ரங்கநாதனுக்கு.

சாஸ்திரிகளின் மனைவி, சம்பகத்தின் விஷயமாக அவரை ஓயாமல் பிராணனை வாங்க ஆரம்பித்தாள்.

"நான் என்னடி செய்யட்டும்? உன் பெண் வாயைத் திறந்தால்தானே? எவன் வந்தாலும்தான் பதிலே இல்லையே!" என்றார்.

"அவளை என்ன கேள்வி? நாமாகப் பார்த்து நிச்சயம் பண்ணித் தொலைக்கவேண்டியதுதானே?" என்றாள் மனைவி.

"சரிதான்! இதிஹாஸம் புராணம் எல்லாம் படித்து விட்டு, வயதுவந்த பெண்ணை இஷ்டமில்லாமல் எங்கே யாவது தள்ளச் சொல்கிறாயா? வேண்டாமடி அந்தப் பாவம்" என்றார் சாஸ்திரிகள்.

பெற்றவர்களின் இந்தப் பேச்சு, சம்பகத்தின் மனத்தில் அம்புபோல் பாயும். "அப்பா அழைத்துவந்த அடுத்த ஊர் மணியக்காரரையே பண்ணிக்கொண்டு விடலாமே?" என்று நினைப்பாள். "ஐயோ, உயிர் உள்ள வரைக்கும் கிராமத்தை விட்டுப் பட்டணம் என்ற பேச்சே இல்லையே! வேண்டாமடா ஈசுவரா! வெளியுலக சம்பந்தமில்லாத இந்த வாழ்க்கை வேண்டவே வேண்டாம்" என்று அடுத்த கணம் மனம் சலிப்பாள். சம்பகத்தின் மனம், அவளது கற்பனைப் புருஷனையே பின்பற்றிச் சென்றுகொண்டிருந்தது.

சம்பகத்துக்குத் தன்னைப் பிடிக்கவில்லை. அவள் பெரிய இடத்தை விரும்புகிறாள் என்று ரங்கநாதன் தெரிந்துகொண்டான். கொல்லையில் ஜலம் சேந்திக்கொண்டிருந்த சம்பகத்தை, அவன், "சம்பகம்! அடுத்த ஊர் மணியக்காரரை உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டான்.

அவள் நெஞ்சில் மறைந்திருந்த துக்கம் குமுறிக் கொண்டு வெளியே வந்தது. "எப்படி எனக்குப் பிடிக்கும், ரங்கா? நீ பால்ய சிநேகமாயிற்றே என்று உன்

னிடம் சொல்கிறேன். எனக்குப் பட்டணம்போன்ற இடத்தில்தான் வாழ்க்கைப்பட இஷ்டம்'' என்ருள். அவளுடைய பெரிய கண்களில் ஜலம் தேங்கி நின்றது. ரங்கநாதன் அவள் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''ஆமாம், சம்பகம்! உன்போன்ற அழகிக்கு அப்படிப்பட்ட இடந்தான் நல்லது. ஆனால், பெரிய இடத்தைப் பார்க்க, அப்பாவுக்குப் பணம் இருக்கிறதா?''

''கொடுத்துத்தான் ஆகவேண்டும். பெண் சுகப்படுவதுதானே முக்கியம்?''

ரங்கநாதன் அவளுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினான்: ''சரிதான்! இருக்கிற நிலத்தை விற்று வரதட்சிணை கொடுத்துவிடச் சொல்கிருயா? அப்பாவுக்குச் சம்மதமானால் எனக்குத் தெரிந்த வரன் ஒன்று இருக்கிறது. படித்தவன்; பட்டணத்தில் வேலையாக இருக்கிருன். நாளைக்கு உன்னைப் பார்க்க, அழைத்துக்கொண்டு வருகிறேன். பணம் கொடுக்கச் சக்தி உண்டானால், முடித்துவிடலாம்.''

சம்பகத்தின் வருத்தம் தேங்கிய விழிகள் பிரகாசித்தன; அவள் கன்னம் குபீரென்று சிவந்தது. ''நிஜமாக அழைத்து வருகிருயா?'' என்று ஆவலுடன் அவள் கேட்டாள்.

ரங்கநாதன் பதில் பேசவில்லை, அவளுக்கிருக்கும் ஆவலை, மௌனமாக அறிந்துகொண்டான்.

மறுதினம் மாலையில் சம்பகம் தன்னை அலங்கரித்துக்கொள்வதில் ஈடுபட்டிருந்தாள். மாந்துளிர் வர்ணப் புடைவை - தன் அம்மாளுடையதை - உடுத்திக் கொண்டு கண்ணுடிமுன் பார்த்தபோது, தன்னைக் கண்டு அந்த வாலிபன் மயங்கிவிடுவான் என்றே நினைத்தாள். கதிரவன் மறைந்து ஸ்வாமிக்கு விளக்கேற்றியவுடன், ''அம்மா, சம்பகம்!'' என்று சாஸ்திரிகள் கூப்பிட்டார். கூடத்தில் ஊஞ்சலில் அவன் உட்கார்ந்திருந்தான். உண்மையில் அவளுடைய மனத்தில் குடிகொண்டிருந்த சுந்தர புருஷன் அவன்தான். மெதுவாகக் குனிந்து நமஸ்காரம் செய்த

போது, அவன் சிரித்த புன்சிரிப்பு, அவள் மனத்தை ஆகர்ஷித்தது. சம்பகத்தின் பூரிப்பைக் கண்டு, ரங்கநாதன் வருத்தத்துடன் வேறுபக்கம் திரும்பிக்கொண்டான். சம்பகம் உள்ளே போனதும், பண விஷயம் பற்றிய பேரம் ஆரம்பமாயிற்று.

"நான் குடும்பி. அளவுக்குமீறிச் செய்ய என்னால் முடியாது" என்று தன் உத்தேசத்தைத் தெரிவித்தார் சாஸ்திரிகள்.

"பெண் லக்ஷணமாய் இருப்பாள் என்று சொன்னதன்பேரில்தான் வந்தேன். எங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி ஆயிரம் ரூபாயாவது ரொக்கம் கொடுக்கவேண்டும். இதுவே குறைவு என்று பெரியவர்கள் கோபித்துக்கொள்ளலாம்" என்றான் வாலிபன்.

சாஸ்திரிகள் யாசகம் கேட்கும் தோரணையில், கை கூப்பிக்கொண்டே, "நீங்கள் அப்படிச் சொல்லப்படாது. என் பெண்ணைப்பற்றி நானே சிலாகித்துக்கொள்வது நல்லதல்ல. சம்பகம் புக்ககத்துக்கு அதிர்ஷ்டமாக இருப்பாள்" என்றார்.

"வருங்காலத்தில் ஏதோ நடக்கும் என்று இப்பொழுது விட்டுக்கொடுக்க முடியுமா?" என்றான் இளைஞன்.

சாஸ்திரிகள் முகம் சுண்டியவராய்ப் பேசாமல் இருந்தார். பேச்சும் முடிந்தது.

சமையல் உள்ளே இருந்தவண்ணம் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த சம்பகம், மனம் இடிந்துபோனாள். சாஸ்திரிகள் அன்று சாப்பிடும்போது, சம்பகத்தை ஏறிட்டும் பார்க்கவில்லை. அவருடைய முகத்தில் வருத்தமும் வெறுப்பும் குடிகொண்டிருந்தன.

ஏதோ தந்தையிடம் சொல்லவேண்டுமென்று நினைத்த சம்பகம், அவரது முகத்தைப் பார்த்ததும் பேசாமல் இருந்துவிட்டாள்.

இரவு பன்னிரண்டு மணிக்குமேல் இருக்கும். உலகம் உறங்கிக்கொண்டிருந்தது. சம்பகம் சமையல் கட்டில் கண்ணீர் பெருகப் படுத்துக்கொண்டிருந்தாள். பெற்ற

வர்கள் இருவருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பால், அன்று அவளைக் கவனிக்கவில்லை. கற்பனை யுவன் நிஜமாகவே தோன்றினான். ஆனால்; அவளது காதலைக் கவரவில்லை. அவளுடைய இருதயத்தைத்தான் பிளந்துவிட்டான். 'படித்தவர்கள் எல்லோருமே இப்படித்தான் இருப்பார்களோ? யார் கண்டார்கள்?'

நாழிக்கு நாழி ரங்கநாதனின் அன்பு கனிந்த வார்த்தைகளும் பொறுமை நிறைந்த முகமும் அவள் முன் தோன்றின. தன்னிடம் அவன் செலுத்திவரும் அன்புக்குப் பலனாக, தன்னுடைய பராமுகத்தைத்தான் அவன் கண்டான். "பாவி! சண்டாளி! என்ன காரியம் செய்துவிட்டாய்?" என்று அவளுடைய மனமே அவளை இடித்துக் கூறியது. பெருமூச்சுடன் கண்ணீர் வழிய, ஆகாயத்தைப் பார்த்தாள். அது சலனமற்று, உலகில் நடக்கும் நியாய அநியாயங்களைக் கண்டு புன்னகை புரியும் வேதாந்தியைப் போல் இருந்தது. "எல்லையற்றவனே! இந்தப் பேதை உள்ளத்தின் துயரை நீ அறிய மாட்டாயா?" என்று ஏங்கினாள்.

ஆம், அவன் அறிந்திருக்கிறான். இல்லாவிட்டால்...? அன்புடன் ஒரு கரம் அவளது முகத்தைத் திருப்பியது. "சம்பகம்! என்னைத் தவறாக நினையாதே. ஏன் இப்படி வருத்தப்படுகிறாய்? வேறு வரன் கிடைக்காமலா போய் விடும்? அவன் உன்னை அடையக் கொடுத்து வைக்கவில்லை" என்றான் ரங்கநாதன். அந்தக் கடைசி வார்த்தையைச் சொன்னபோது அவனுடைய குரல் கம்மிவிட்டது. சம்பகம் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள்.

"அழாமல் தூங்கு, சம்பகம்!"

சம்பகம் வருத்தத்தோடு அவனைப் பார்த்தாள்.

"இந்த மூடப் பெண்ணை நீங்கள்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும்."

ரங்கநாதன் திகைத்து நின்றான்: "நானா!........"

"ஆம், நீங்கள்தான். இந்த மௌட்டிகத்தை எப்படி ஏற்பது என்று அஞ்சுகிறீர்களா? உங்களது அகண்ட

உள்ளத்தின் அன்புத் தீக்கு, அதை எரித்துப் புனித மாக்கும் சக்தி இல்லை என்று அஞ்சுகிறீர்கள்?"

"இல்லை, சம்பகம்... ஆனால் நான் பட்டணத்தான் அல்லவே?"

"ஐயோ! ஏன் அந்த மயக்கத்தையே குத்திக் காட்டு கிறீர்கள்? இனி நீங்கள் இருக்கும் இடந்தான் எனக்குப் பட்டணம். அதுதான் என் சொர்க்கமும். உங்கள் அன்பே எனக்குப் போதும். உலகமே வெறுத்தாலும் கவலை இல்லை."

ரங்கநாதனின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. "ஆமாம் சம்பகம்! இதெல்லாம் சரி... நீங்கள், தாங்கள் என்கிறாயே? இப்படிப் பேச எப்பொழுது பழகிக் கொண் டாய், சம்பகம்! மாலைவரையில் நீ என்றுதானே கூப்பிட்டு வந்தாய்?"

"இனிமேல் அப்படிச் சொல்வது நன்றாயிராது."

"நாம் இனிமேல் இப்படித் தனியாகப் பேசுவதும் நன்றாயிராது; என்ன, தெரியுமா?... அப்பாவிடம் இதை நீ சொல்கிறாயா?"

"ஊஹூம்."

"ஆனால், நானே நாளைய தினம் அவரிடம் சொல்லி விடுகிறேன்" என்றான் ரங்கநாதன் சிரித்துக்கொண்டே.

அமைதியான இரவில் இரண்டு உள்ளங்களும் அமைதி அடைந்து ஆனந்தத்தில் ஆழ்ந்தன.

௬

# மனைவி

[நிலவின் ஒளி விழும் ஜன்னல் ஓரத்தில், மேஜை அருகில் பிரபா உட்கார்ந்து கதை எழுதிக்கொண் டிருக்கிறாள். அவளது வதனம் அந்த நிலவில் அபூர்வமாய் இருக்கிறது. அவளுடைய கணவன் அப்பொழுதுதான் நண்பர்களுடன் ஆங்கிலப்படம் ஷோக்குப் போய்விட்டு, உள்ளே வருகிறான்.]

ராமசந்திரன்: ஹல்லோ, பிரபா! இன்னும் தூங்கலையா நீ? இதென்ன ஓயாமல் எழுத்து?

பிரபா: (புன்னகையுடன்) என்ன எழுத்தா? இப்பொழுது சொல்ல முடியாது, ஸார்!

ராம: (அவள் அருகில் சென்று உட்கார்ந்து) நமக்குக் கல்யாணம் நடந்து எத்தனை மாதங்கள் ஆகின்றன? சொல்லட்டுமா பிரபா? மார்ச், ஏப்ரல், மே......

பிரபா: கொஞ்சம் பேசாமல் இருங்களேன்; இதை முடித்துவிடுகிறேன்.

ராம: (அவளுடைய முகத்தைப் பரிவுடன் திருப்புகிறான்) மே மாதம் அல்லவா இப்பொழுது? வசந்த ருது தானே? என்ன பேசமாட்டேன் என்கிறாய்? என் மனத்தின் தாபம் தெரியாமல் நீ ஏதோ எழுத ஆரம்பித்துவிடுகிறாயே!

பிரபா: (சிரித்துக்கொண்டே அவனிடமிருந்து முகத்தைத் திருப்பிக்கொள்கிறாள்.) கொஞ்சம் இருங்கள். கதை உடனே எழுதி அனுப்பும்படி ஆசிரியர் எழுதியிருக்கிறார். இன்னும் இரண்டு மணியில் முடிந்துவிடும். பிறகு பேசிக்கொள்ளலாமே?

ராம: 'கதை, 'கதை' என்று கதைக்கத்தான் தெரியும் உனக்கு. உன் கதைப்பில் மயங்கித்தானே நான் திண்டாடுகிறேன். இன்றைக்குப் படம் ரொம்ப ஜோர். மணியின்

மனைவிகூட வந்திருந்தாள். 'கதை எழுதுகிற பித்துக் குளியைப் போய்ப் பிடித்தாயேடா' என்று கேலி செய் தாள். நீ வராமல் எனக்கு என்னவோபோல் இருந்தது.

[பிரபா பதில் பேசாமல் எழுதிக்கொண் டிருக்கிறுள்.]

ராம: (வேடிக்கையாக அவள் பேனுவைப் பிடுங்கிக் கொள்கிருன்) நீ என்னுடன் சரியாகப் பேசினுல்தான் பேனுவைத் தரமுடியும். இல்லாவிட்டால் முடியாது.

பிரபா: பேசாமல் இருக்கிறேனு? எழுதும்போது தொந் தரவு செய்யாதீர்கள். கதை வேண்டுமென்று அவர் கேட் டிருக்கும்போது தாமதப்படுத்துவது மரியாதையா?

ராம: (கொஞ்சலாக) உன்னைப்போல் அழகான மனைவி அவருக்குக் கிடைத்திருந்தால், ஆசிரியர் உத்தி யோகம் செய்யமுடியாது, தெரியுமா? உலகத்தில் எதை யும் கவனிக்காமல் அவளையே பார்த்துக்கொண்டு உட் கார்ந்து விடுவார்.

[அவன் பேசிக்கொண் டிருக்கும்போது, பேனுவை விரல் இடுக்கிலிருந்து பிரபா எடுத்துக்கொள்கிறுள். பிறகு சிரித்து விட்டு, எழுத ஆரம்பிக்கிறுள்.]

ராம: (சற்றுக் கோபமாக) நான் ஆபீஸிலிருந்து வரும்போதெல்லாம், 'கதை, கதை! எழுத்து, எழுத்து!!' கொஞ்ச நேரமாவது உல்லாசமாக இருக்க முடிவ தில்லை. தூ!

பிரபா: ஏன் கோபித்துக்கொள்கிறீர்கள்? கல்யாணம் ஆவதற்குமுன் என்னிடம் என்ன சொன்னீர்கள்? 'உன் கதைகளைப் பத்திரிகைகளில் படித்து மயங்கிவிட்டேன்' என்று சொன்னீர்களே. நான்மட்டும் அதைக்கேட்டு மயங்கிவிடவில்லை. 'கதை எழுதும்போது தொந்தரவு பண் ணக்கூடாது' என்று வாக்குறுதிவேறு வாங்கியிருக்கி றேன்.... ஹூம்... தெரியுமா?

ராம: தெரியும், தெரியும், பிரபா! நீ பார்வைக்கு இளங்கொடியைப்போல் மிருதுவாக இருந்தாலும் உன் மனதுமட்டும் கல்லைவிடக் கடினமாக இருக்கிறது. எப் பொழுதுமே வெளி அழகைக் கண்டு மயங்கக்கூடாது.

பிரபா: (சிரித்துக்கொண்டே) அதைத்தான் நானும் சொல்கிறேன். 'பிரபா நீ அழகு; நீ சிரித்தால்' நான் மெய் மறந்துபோய்விடுகிறேன்' என்று நீங்கள் சொல்லக் கூடாது. என்னிடத்தில் என்ன நல்ல குணங்கள் இருக்கின்றன என்று தெளியவேண்டும்.

ராம: (கேலியாக) புருஷனை மகிழ்விக்காமல் ஊரில் நல்ல பேர் எடுத்து என்ன லாபம்? உன்னைப் போற்ற வேண்டியவன் நான்தானே?

பிரபா: என்னை நீங்கள் நன்றாக அறியவில்லை. தேனின் சுவையைச் சிறிது சிறிதாகச் சுவைக்காமல் தேன் பாத்திரத்தில் விழும் ஈயைப்போல்...

ராம: (கோபத்துடன்) உன் அழகில் நான் ஒன்றும் மயங்கிவிடவில்லை. பெண்களுக்கே கொஞ்சம் தெரிந்தவுடன் கர்வம் ஏற்பட்டுவிடுகிறது.

பிரபா: (கண் கலங்க) பெண்கள் மட்டும் புருஷர்கள் கையில் அகப்பட்ட பொம்மைகளா? நீங்கள் வேலை செய்யும்போது எங்கள்...ஏன் ஒன்றும் அறியாத சிசுவின் அழுகையைக் கூடப் பொறுத்துக்கொள்ள முடியாமல் கோபப்படுகிறீர்களே!

(ராமசந்திரன் வெறுப்புடன் நிலவைப் பார்த்தவாறு உட்கார்ந்திருக்கிறான்.)

ராம: கல்யாணம் நடந்து மூன்று மாதங்கள் ஆகின்றன. ஒரு நாளாவது நீ என்னுடன் சிரித்துப் பேசியிருக்கிறாயா? சொல்.

பிரபா: விரைவுடன் ஒரு வேலை முடியாவிட்டால் வாழ்க்கை பூராவும் ஏமாந்துவிட்டதாக ஏன் கற்பித்துக் கொள்கிறீர்கள்? விவாகமான இரண்டு தினங்களுக்கெல்லாம் மைசூர் போகவில்லையா? காவிரியில் படகில் எத்தனை களிப்பாகச் சென்றோம்? மறந்துவிட்டதா?

ராம: ஆமாம்; படகிலும் கற்பனையையும் கதையையும்பற்றித்தான் பேச்சு.

பிரபா: (புன்சிரிப்போடு) உங்களுக்கு என்னைக் கண்டு மயங்கத் தெரிகிறதே தவிர என் கருத்துக்களைக் கண்டு மயங்கத் தெரியவில்லை.

ராம: (படபடப்புடன்) நாளை முதற்கொண்டு என் உத்தரவு இல்லாமல் நீ எந்தப் பத்திரிகைக்கும் கதை எழுதக் கூடாது. என் ஆனந்தம் குறைவது அவர்களுக்குத் தெரியுமா?

பிரபா: நாளையிலிருந்துதானே? இப்பொழுது இல்லையே? அடக்குமுறை பிரமாதமாக இருக்கிறதே!

ராம: உண்மையாகத்தான், பிரபா, கேலியல்ல. இனிமேல் உன் இஷ்டப்படி நடக்க உன்னை நான் விடப் போவதில்லை.

[கையிலிருந்த பேனாவைப் பிடுங்கிக்கொண்டு, விளக்கை அணைக்கப்போகிறான்.]

பிரபா: (கெஞ்சும் குரலில்) வேண்டாம். சினிமாப் பார்த்துவிட்டு வந்த வேகமா இது? அப்புறம் நானும் வருகிறேன். இரண்டு பேருமாக நடிக்கலாம்.

ராம: (பதற்றத்துடன்) நான் சொல்லச் சொல்லத் தைரியமா உனக்கு? (கதை எழுதிய தாள்களைக் கிழித்துப் போடுகிறான்)

[பிரபா கண்ணீர் வழியப் படுக்கையில் போய்ப் படுத்துக் கொள்கிறாள். ஒரே மௌனம். எங்கிருந்தோ ரேடியோவில் நல்ல சங்கீதம் கேட்கிறது. மாலையில் ராமசந்திரன் வாங்கி வந்த மல்லிகைப் பூவின் மணம் 'கம்' மென்று வீசுகிறது.]

ராம: (அறையில் உலாவிக்கொண்டே) சொன்னால் கேட்பதில்லை. உடம்பு இளைத்துத் துரும்பாய்ப் போகிறது. சதா மூளைக்கு வேலை கொடுத்து நாசஞ் செய்துகொள்ளுகிறாள், உடம்பை.

[நிலவின் வெளிச்சம், கண்ணீர் வழியும் பிரபாவின் முகத்தில் விழுகிறது. தாம்பூலத்தால் சிவந்த உதடுகள் துக்கம் தாங்காமல் துடிக்கின்றன.]

ராம: (கட்டில் அருகில் சென்று குனிந்து) பிரபா! உன்னை நான் என்ன செய்தேன்? என் விரல்கூட உன் மேல் படவில்லையே. ஏன் இப்படி அழுகிறாய்?

[மௌனம்]

ராம: என்னைப் பாரேன். முதல் முதலில் உன்னைப் பார்த்த அன்றையிலிருந்தே என் வாழ்க்கையை உன்னைத்

தவிர வேறு யாராலும் பிரகாசிக்க வைக்கமுடியாது என்று தீர்மானித்துவிட்டேன். பேச மாட்டாயா?

பிரபா: விளக்கைத் திரைபோட்டு மறைக்கிறீர்களே. பிரகாசம் எங்கிருந்து உண்டாகும்?

ராம: நான் என்ன செய்தேன்?

பிரபா: (நீர்வழியும் கண்களால் அவனை ஏறிட்டுப் பார்க்கிருள்.) பசுவை விட்டுக் கன்றைப் பிரிப்பதுபோல் நான்.........

ராம: (அவளுடைய கையைப் பிடித்து) பசுவை விட்டுக் கன்றையா? உண்மையாகவா, பிரபா? இன்னும் எத்தனை மாதத்தில் உனக்குப் 'பரிசு' கிடைக்கப் போகிறது?

பிரபா: (கைகளை விடுவித்துக் கொண்டு) போங்கள்; உங்களைப்போல் நான் கண்டதே இல்லை. நான் ஒன்று சொன்னுல், நீங்கள் ஒன்று சொல்வது? என் கதை எனக்குக் குழந்தையைப்போலத்தானே?

ராம: இதுதானு! வேறு என்னவோ நினைத்தேன்.

பிரபா: கற்பனை திடீரென்று வந்துவிடுமா? அது கோவையாக வரும்போது தடுக்கிறீர்களே? (மறுபடியும் வருத்தத்தில் ஆழ்ந்துவிடுகிருள்.)

ராம: என்னை நீதான் சீர்திருத்த வேண்டும். நான் தேனைப் பருகி மயங்கும் வண்டின் நிலையை ஒத்தவன். தேனீயைப்போல், நிதான புத்தியுடன் சேகரித்து உண்ணும் திறமை வண்டுக்கு இல்லை.

பிரபா: கொஞ்சம் நிதான புத்தியுடன், தீர்க்க திருஷ்டியும் வேண்டும்.

ராம: அதை நீதான் அபகரித்துக் கொண்டு விட்டாய், கள்ளீ! என்னை நிலைகொள்ளாமல் இருக்கச் செய்பவள் நீதானே?

பிரபா: ஆனுல் சரி; நிலை கொள்ளுகிறவரைக்கும் என் எதிரில் வராதீர்கள். நான் அடுத்த அறைக்குள் போகிறேன். (போகிருள்.)

ராம: (அவள் பின்னால் சென்று) பிரபா! உன் கலை இந்த வீடு பூராவும் நிரம்பியிருக்கும்போது, நீ எந்த அறைக்குள் போனால் என்ன? என் கண்முன் உன் சுந்தர ரூபமே மின்னுகிறது, அன்பே!

பிரபா: கதை எழுத என்னை விடமாட்டீர்களா?

ராம: வேண்டியவரையில் எழுது. உன் புகழ் என்னுடைய புகழ்தான். உன்னைப்பற்றி வெளியார் புகழும்போது, என் உள்ளம் ஆனந்த வெறி கொள்ளுகிறது. எழுதுவதை நான் வேண்டாம் என்பேனா?

பிரபா: நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்.

[அறைக்கு வெளியே பன்னீர் இலைகளின் நடுவில் கூடு கட்டி வாழும் மைனா ஜோடிகளைக் காண்பிக்கிறான். பிரபா பேனாவை மூடி வைத்துவிட்டுத் தலைகுனிந்து நிற்கிறாள்.]

ராம: பிரபா! என்மேல் கோபமா? கற்பனைக்கு நான் தடங்கலா? அடுத்த அறைக்குள் போய் விடவா?

பிரபா: (வெட்கத்துடன்) வேண்டாம்.

ராம: கதை எழுத வேண்டாமா?

பிரபா: நாளைக்கு நீங்கள் ஆபீசுக்குப் போன பிறகு எழுதுகிறேன். வெளியில் கிடைக்கும் புகழுக்காக உங்கள் மனத்தில் குருத்துவிட்டுச் செழிக்கும் அன்பைக் கிள்ளிவிட நான் இனி முயலமாட்டேன்.

ராம: பிரபா! (ஆவலுடன் அவளது முகத்தைப் பார்க்கிறான்.)

பிரபா: (சிவந்த முகத்துடன்) ஆம், இந்த விலைமதிக்க முடியாத அன்பின்முன் நான் வாதாடுவது தகுதியல்ல. ஒழிந்த வேளையில் என் காரியத்தைச் செய்துகொள்கிறேன். உங்கள் மனத்தை நோக வைத்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும். (நமஸ்கரிக்கிறாள்.)

ராம: (அன்புடன்) நிலவு வீணாகி விடும். மன்னிப்பை ஏற்றுக்கொள்ள நேரமில்லை. வா, போகலாம்.

[பன்னீர் மரத்தில் மைனாக்கள் இரண்டும் கிளையிலிருந்து கூட்டுக்குள் செல்வதை இருவரும் பார்த்துவிட்டுப் புன்னகை புரிந்துகொள்கிறார்கள்.]

# 7

# தெய்வ சங்கல்பம்

பம்பாய் - மதராஸ் எக்ஸ்பிரஸ் 'கூ, குப்' என்று ஊதி விட்டுத் தாதர் ஸ்டேஷனை விட்டுக் கிளம்பிற்று. நீலகண்டன் அதுவரையில் அலக்ஷ்யமாக ஸ்டேஷனைப் பார்த்துக்கொண்டிருந்தவன் திரும்பி வண்டிக்குள் பார்த்தான். எதிரில் பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தியும், பத்து வயதுப் பையன் ஒருவனும் உட்கார்ந்திருந்தார்கள். அந்தப் பையன் தங்களை அனுப்ப ஸ்டேஷனுக்கு வந்தவருடன் வண்டி நகர்ந்து கொஞ்ச தூரம் போகிறவரையில் பேசிக்கொண்டே இருந்தான்.

"மாமா! ஊருக்குப் போய்க் கடுதாசி போடுகிறேன்" என்றான் பையன்.

"கடுதாசி என்னடா? தந்தியே கொடுத்துவிடு. என்ன அம்மா, சுதா! போய்விட்டு வருகிறாயா? பத்திரமாகப் போய்விட்டு வருகிறாயா? பத்திரமாகப் போங்கள்" என்று உரக்கச் சொன்னார் வந்தவர். அந்தப் பெண் புன்னகையோடு தலையை ஆட்டிவிட்டு, ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய பச்சை நிறப் புடவையும், காதில் அசைந்த லோலாக்கும், பாதியில் ரிப்பனால் கட்டப்பட்டிருந்த வளைந்த பின்னலும் அவளுடைய அழகுக்குப் பொருத்தமாக இருந்தன. முகத்தில் புத்திசாலித்தனமும் குறு குறுப்பும் காணப்பட்டன. பையனும் அவள் ஜாடையாகவே இருந்தான். கையில் வைத்திருந்த ஆங்கிலப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். சுதாவும் தன் கையில் இருந்த கதைப் புத்தகத்தைப் படிப்பதில் ஈடுபட்டிருந்தாள். அரைமணிக்கு ஒருதரம் மட்டும் கண்களை உயர்த்தி வெளியேயும், உள்ளேயும் பார்த்துவிட்டுத் திரும்பவும் படிக்க ஆரம்பித்துவிடுவாள். பையனுக்குப் பத்திரிகையைப் புரட்டுவதில் உள்ள ஸ்வாரஸ்யம் குறைந்துவிட்டது. சிறிது நேரம் ஜன்னலில் முகத்தை

வைத்துக்கொண்டு வெளியே பார்த்துக்கொண் டிருந் தான். பிறகு கூடையிலிருந்து பிஸ்கோத்துகளை எடுத்துத் தின்ன ஆரம்பித்தான்.

நீலகண்டன் சிறிது நேரம் அவர்கள் இருவரையும் உற்றுப் பார்த்து, "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான். பையன் மிகவும் மரியாதையோடு, "எங்க ளைத்தானே கேட்கிறீர்கள், ஸார்? பட்டணத்திற்குப் போகிறோம். ஏன் ஸார் கேட்டீர்கள்?" என்று கேட் டான்.

"ஒன்றுமில்லை. வெறுமனேதான் கேட்டேன். தனி யாகப் போகிறீர்களே; பெரியவர்கள் யாரும் இல்லையா?" என்றான் நீலகண்டன்.

"தனி என்ன ஸார்? வண்டியில் வேண்டிய ஜனங் கள் இருக்கிறார்களே!" என்று சாதுரியமாகப் பையன் பதில் அளித்தான்.

"ஓஹோ! அப்படியானால் சரிதான்; கெட்டிக் காரனாக இருக்கிறாயே; எந்த வகுப்பில் படிக்கிறாய்?"

"பஸ்ட் பாரம் படிக்கிறேன்."

"பஸ்ட் பாரம் படிக்கிறவனா பத்திரிகை படிக்கிறாய்? இங்கிலீஷ் நன்றாக வந்துவிட்டதா?" என்றான் நீலகண் டன் சிரித்துக்கொண்டே.

"வராமல் என்ன? நான் கான்வென்டில் படிக்கி றேன். இங்கிலீஷ் நன்றாய் வரும்!"

"பேஷ், ரொம்பச் சமத்து" என்று நீலகண்டன் அவன் முதுகில் தட்டிக்கொடுத்தான். பையனும் மிகவும் ஸ்வாதீனமாக அவன்பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

"மறந்தே போய்விட்டேன், உன் பெயர் என்ன?"

"வேணுகோபாலன். ஆத்திலும். ஸ்கூலிலும் வேணு என்றுதான் கூப்பிடுகிறார்கள்."

"சரி, நானும் அப்படியே கூப்பிடட்டுமா?"

"ஓ! கூப்பிடுங்களேன்" என்றான் வேணு.

இதற்குள் சுதா புஸ்தகத்தைவிட்டுத் தன் விழிகளை உயர்த்தி வேணுவைப் பார்த்தாள். அந்தப் பார்வை கோபத்தையும் கண்டிப்பையும் காண்பித்தது. அவளை விழித்துப் பார்த்தபோது நீலகண்டன் பார்த்துவிடவே சட்டென்று வேறுபக்கம் திரும்பிக்கொண்டாள். 'கண்கள்தாம் எவ்வளவு பெரியவை, அந்தக் கோபப் பார்வையையாவது இன்னும் கொஞ்ச நேரம் செலுத்தக் கூடாதா?' என்று தோன்றியது அவனுக்கு.

வேணு எழுந்து நின்றான்.

"ஏன் எழுந்துவிட்டாய்?" என்று கேட்டான் நீலகண்டன்.

"எழுந்து எங்கே போகிறது? நாளைச் சாயந்திரம் வரையில் உங்களோடுதானே வரவேண்டும்?"

"பலே கெட்டிக்காரனடா நீ; போ, போ" என்று அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினான் நீலகண்டன். வேணு சிரித்துக்கொண்டே அவன் அக்காபக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு எதிர்ச் சாரியில் ஓடிய மரஞ் செடிகளைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அன்று பௌர்ணமிக்கு முந்திய தினமாதலால் கீழ் வானத்தில் சந்திரனின் முழுவட்டம் தெரிந்தது. ஜிலுஜிலுவென்ற காற்றும் சந்திரனின் இன்ப ஒளியும் ரெயில் போய்க்கொண்டிருந்த வனப்பிரதேசத்தைக் கண்ணுக்கும், கருத்திற்கும் ரம்மியமாகச் செய்தன. நீலகண்டனும் ஜன்னலின்மேல் கையை ஊன்றியவனாக வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். ரெயிலின் கிடு கிடு சப்தத்தைத் தவிர ஊசி விழுந்தால் கேட்கும்படியான மௌனம் அங்கே நிலவியிருந்தது. அளவுக்கு மீறிய இந்த மௌனத்தை நீலகண்டனால் சகிக்க முடியவில்லை.

"காற்று ரொம்ப அடிக்கிறதுபோல் இருக்கிறதே. ஜன்னல் கதவை மூடிவிடவா?" என்று சுதாவைப் பார்த்தவாறு கேட்டான். அவள் அதற்கு மறுமொழி சொல்லாமல் இருந்தாள். அவனாகவே எழுந்து ஜன்னல் கதவை மூடுவதற்கு வந்தான். அவள் புஸ்தகத்தை மூடியபடியே எழுந்து ஒதுங்கி நின்றாள். அவன் கதவை மூடிவிட்டு

வேணுவின் முதுகில் தட்டி, "வேணு! தூங்குகிருயா?" என்று கேட்டுவிட்டுத் தன் இடத்தில் போய் உட்கார்ந்தான்.

அவள் புத்தகத்தை மூடி வைத்துவிட்டுக் கூடையைத் திறந்து பழமும், பிஸ்கோத்தும் எடுத்தாள். வேணு கூடை அருகில் போய் உட்கார்ந்துகொண்டு, "மணி எட்டுக்குமேல் ஆகிறதே, சாப்பிடவில்லையா, ஸார்?" என்ருன்.

"சாப்பிடத்தான் வேண்டும். நான் கொடுப்பதை நீ சாப்பிடுகிருயா?" என்று கேட்டான் நீலகண்டன். வேணு கூடைக்குள் கையைவிட்டுப் பழங்களும், பக்ஷணமும் எடுத்து நீலகண்டன் பெட்டியின்மேல் வைத்தான்.

"அட போக்கிரி! நான் சொன்னவுடனேயே கொடுத்துவிட்டாயோ? நான் கொடுப்பதை வாங்கிக் கொள்ளவேண்டும், இல்லாவிட்டால் நீ கொடுத்ததைச் சாப்பிடமாட்டேன் தெரியுமா?"

இந்த வார்த்தைகள் பையனைப் பார்த்துச் சொன்னவை அல்ல. சுதா கன்னங் குழையச் சிரித்துக் கொண்டே பழங்களை உரிக்க ஆரம்பித்தாள். சாப்பாடு முடிந்ததும், தம்பிக்கும், தனக்குமாகப் படுக்கையைத் தட்டிப் போட்டுக்கொண்டு, கண்ணாடிக் கதவைத் திறந்துவைத்துவிட்டுப் படுத்துக்கொண்டாள். வேணு சிறிது நேரத்திற்கெல்லாம் தூங்கிவிட்டான்.

நீலகண்டன் தூங்கவேண்டுமென்று பிரம்மப் பிரயத்தனம் செய்து பார்த்தான். கண்களை இறுக மூடிக் கொண்டு பார்த்தான். புரண்டு புரண்டு படுத்தான். சுதா சிறிது நேரம் திறந்த விழிகளுடன் படுத்திருந்தாள். பிறகு அயர்ந்து தூங்கிவிட்டாள். நிலா வெளிச்சம் அவள் முகத்தில் விழுந்து அதன் எழிலை மிகுதிப்படுத்தியது. நீலகண்டன் மனத்திற்குள், 'இந்த இரவில் எவ்வளவு நிர்ப்பயமாக இருவரும் தூங்குகிருர்கள்?' என்று நினைத்தான். அவன் உள்ளத்தில் சிந்தனை அலைகள் ஒன்றன்பின் ஒன்ருகக் கிளம்பி நிம்மதியைக் குலைத்தன. வலுக் கட்டாயமாகத் தூக்கத்தை வருவிக்கச் செய்த

முயற்சி பயன்படவில்லை. இவ்வாறு தத்தளித்துக் கொண்டிருந்தவன் வெகு நேரம் கழித்து அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டான். கண் விழித்துப் பார்த்த போது சூரியன் உதித்து வெகு நேரம் ஆகியிருந்தது.

"என்ன, ரொம்ப நாழி தூங்கிவிட்டீர்களே? ராத்திரிக் கண் விழித்தீர்களோ?" என்று கேட்டான் வேணு. நீலகண்டனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. சமாளித்துக் கொண்டு, "வண்டியில் இருப்பது மூன்று பேர். எல்லாரும் தூங்கிவிட்டால் நல்லதா?" என்று கேட்டான்.

"ஐயோ பாவமே! எங்களுக்காகக் கண் விழித்தீர்களா? ரொம்ப தாங்ஸ். என்னை எழுப்பியிருக்கக் கூடாதா, ஸார்?" என்றான் வேணு.

"எனக்குத் துணையாக இருந்திருப்பாயாக்கும்?" என்று சிரித்துக்கொண்டே சுதாவைப் பார்த்தான். அவள் அவனைப் பார்க்கக்கூட இல்லை. தினசரிப் பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தாள்.

மத்தியான்னப் பொழுது வேணுவுடன் தமாஷாகப் பேசுவதிலேயே போய்விட்டது. மாலையில் ஸென்டிரல் ஸ்டேஷனுக்கு அவர்கள் தகப்பனார் வந்திருந்தார். நீலகண்டனுக்கு, சுதா தன்னுடன் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் போவது வருத்தமாக இருந்தது. 'இந்தப் பெரிய கண்களையும், குழி விழும் கன்னங்களையும் திரும்பவும் எப்பொழுது பார்க்கப்போகிறோம்?' என்று நினைத்த போது துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டது.

"போய்விட்டு வருகிறீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம் ஸார், எங்காத்து விலாசம் சொல்ல மறந்துவிட்டேனே. எலியட்ஸ் ரோட்டில் 'பாலபவன' த்தில் இருக்கிறோம். அவசியம் வாருங்கள்" என்று வேணு கூப்பிட்டான். அவன் தகப்பனாரும் தம் நன்றியறிதலை ஒரு புன்னகையால் தெரியப்படுத்தினார்.

சுதா கன்னங் குழியப் புன்னகை செய்துகொண்டே காரில் போய் உட்கார்ந்துகொண்டாள்.

'எலியட்ஸ் ரோட், பாலபவனம்' என்ற வார்த்தைகள் அவனுக்கு மனப்பாடமாக இருந்தன. டைரியிலும் குறித்துவைத்திருந்தான். தினம் அதை ஒரு தடவை எடுத்துப் பார்த்துவிட்டுத் திருப்தியோடு ஜேபியில் போட்டுக்கொள்வான். "அந்தப் பாலபவனத்திற்கு எதற்காகப் போவது? பையன் கூப்பிட்டான் என்று போய்விட முடியுமா? போய்த்தான் பார்க்கலாமா?" என்ற ஆக்ஷேப சமாதானங்களிலேயே பதினைந்து தினங்கள் போய்விட்டன.

சுதாவையும், வேணுவையும் ஸென்டிரல் ஸ்டேஷனில் பிரிந்து ஒரு மாதம்போல் ஆய்விட்டது. ஒரு நாள் மாலை 'சான்தோம்' கடற்கரையில் வேணு சொன்ன 'பாலபவன'த்தைப்பற்றியே நினைத்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்திருந்தான் நீலகண்டன்.

"ஸார்! ஸார்!"

நீலகண்டனைச் சொப்பன லோகத்திலிருந்து கீழே யாரோ பிடித்துத் தள்ளியமாதிரி இருந்தது. அவன் பிரமை நீங்குவதற்குள் வேணு எதிரில் நின்றான்.

"என்ன, ஸார், எங்காத்துக்கு வரச் சொன்னேனே வரவே இல்லையே" என்று கேட்டான்.

வேணுவின் கைகளைப் பிடித்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, "வேணு, வந்துதான் ஆகவேண்டுமா?" என்று கேட்டான் நீலகண்டன்.

"ரொம்ப அழகாய் இருக்கிறது, நீங்கள் சொல்லுகிறது. வாருங்கள் போகலாம்" என்று கையைப் பிடித்து இழுத்தான் வேணு.

அவன் கால்கள் அவனை அறியாமல் காரை நோக்கி நடந்தன. காருக்குள் அழகிய பெண் ஒருத்தி உட்கார்ந்துகொண் டிருந்தாள். இவனைக் கண்டதும் சிரித்துக்கொண்டே, "உங்களைப்பற்றி ரொம்பதூரம் சொன்னான் வேணு. வருவீர்கள் என்றே எதிர்பார்த்தோம்" என்றாள் அந்தப் பெண். சுதாவைப் போலவே இருந்தாள் அவள். இரண்டொரு வயது சின்னவளாக இருக்கலாம்.

நீலகண்டன் பேசாமல் காரில் ஏறி உட்கார்ந்தான். அவள் காரை ஓட்டிக்கொண்டே, "நீங்கள் சங்கோஜப் படுவீர்கள்போல் இருக்கிறது. விலாசம் சொல்லியிருந் தால் காரையாவது அனுப்பியிருப்போமே" என்றாள்.

"ஓ! அதனால் என்ன? பரவாயில்லை" என்றான் நீலகண்டன்.

"கார் போகும்போது, வேணுதான் என்னைப்பற்றிச் சொன்னான் என்கிறாளே, சுதா என்னைப்பற்றி வாயே திறக்கவில்லைபோல் இருக்கிறதே. இந்தப் பெண் யார்? அவள் தங்கையாகத்தான் இருக்கவேண்டும்" என்று எண்ணமிட்டுக்கொண்டே போனான்.

நீலகண்டன் பாலபவனத்திற்குப் போனபோது அங்கே சுதாவைக் காணவில்லை. 'அன்று, ரெயிலிலும் நம் முடன் பேசவில்லை. வீட்டிற்கு வந்தாலும் எதிரில் வர வில்லை. என்ன அப்படிப்பட்ட கர்வம?' என்று எண்ணி னான் நீலகண்டன். காரில் அவனுடன் வந்த பெண் தாரா ளமாகப் பேசினாள். பாக்கி எல்லோரும், வேணுவின் தகப் பனார் உட்பட, அவனிடம் ஏதோ கவலைபோடு பேசினார் கள். ஆனால் சுதாமட்டும் அவன் அருகிலேயே வரவில்லை. அவளைப்பற்றி நினைத்தபோது ஆத்திரமும் கோபமும் அவனுக்குப் பொத்துக்கொண்டு வந்தன.

நீலகண்டன் கடைசியாக வீட்டுக்குப் புறப்பட்ட போது வேணு அவனைக் கொண்டுவிட வாசல்வரையில் வந்தான். அவனைப் பார்த்து, "ஏன் வேணு, அன்று உன்னுடன் ரெயிலில் வந்தாளே, அவள் உனக்கு அக்கா தானே ஆக வேண்டும்?" என்று கேட்டான்.

"ஆமாம், ஏன்?"

"அவள் உங்களையெல்லாம்போல் இருக்கமாட்டாள் போல இருக்கிறதே. மனிதர்களைக் கண்டாலே பயப்படு வாள்போல் இருக்கிறதே!"

"ஐயோ! உங்களுக்குத் தெரியாதா அவளைப்பற்றி? சுதா ஊமையாயிற்றே! அதனால் தான்..................." என்றான். அவன் கண்களில் நீர் நிரம்பிவிட்டது.

"ஹா! நிஜமாகவா?" என்று உரக்கக் கேட்டான் நீலகண்டன்.

"ஆமாம் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன். அதனால்தான் அவள் உங்கள் எதிரில்வர வெட்கப்படுகிறாள். மனிதர்களைக் கண்டால் பயம் இல்லை; வெட்கந்தான். அதுவும் படித்தவர்களைக் கண்டால் எதிரில் வரவேமாட்டாள்."

"என்ன துரதிருஷ்டம்!"

"என்ன செய்வது? எங்கள் அப்பா எப்பொழுதும் அவளைப்பற்றித்தான் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார்" என்றான் வேணு.

நீலகண்டன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். சட்டென்று ஏதோ முடிவுக்கு வந்தவன்போல், "வேணு! அப்பாவை என் வீட்டிற்கு அனுப்பு. இல்லாவிட்டால் நீ வந்து கூப்பிட்டால் நானாவது வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

வேணுவின் தகப்பனார் நீலகண்டனைத் தேடிக்கொண்டு போனார். அவருக்கு நீலகண்டன் மனத்தை அறிந்ததும், ஆச்சரியமாகப் போய்விட்டது.

"மனப்பூர்வமாகத்தான் சொல்லுகிறாயா?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம், அன்று ரெயிலில் பார்த்தபோதே என் மனம் அவளுக்கு வசமாகிவிட்டது. அவள் அன்று ஒரு வார்த்தை கூடப் பேசாதபடியால் என்னுடைய அன்பு குறைந்துவிடவில்லை. இனிமேல் அவள் பேசாதிருப்பதற்காகவும் குறைந்துவிடாது" என்றான் நீலகண்டன்.

சுதாவின் தகப்பனார் அவன் கைகளைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு, "சுதாவின் பொறுமைக்காகவே பகவான் அவளுக்கு இரங்கிவிட்டார் என்று நினைக்கிறேன்" என்று தழு தழுத்த குரலில் சொன்னார்.

பத்துத் தினங்களுக்கு அப்புறம் முன்போலவே நிலவு பொழியும் வனப் பிரதேசத்தில் சென்னையிலிருந்து பம்பாய்க்குப் போகும் ரெயிலில் சுதாவும் நீலகண்டனும் ஆனந்தமாகப் பிரயாணம் செய்துகொண் டிருந்தார்கள்.

# 8

# துரையின் யோசனை

அன்று ஞாயிற்றுக் கிழமை. ஆபீஸ் அறையில் அரைத் தூக்கமும் விழிப்புமாக நாற்காலியில் சாய்ந்திருந்த துரைசாமியின் காதில் 'போஸ்ட்!' என்ற குரல் விழுந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் சீதா கைவளையல்கள் குலுங்க, சர சரவென்று வாசற் பக்கம் போவதும் கேட்டது. கடிதம் அவனுக்கு வந்திருந்தால், சீதா விலாசத்தைப் பார்த்துவிட்டு அவனிடம் கொடுத்துவிட்டிருப்பாள். சிறிது நேரம் அவளுக்காகக் காத்திருந்து அவள் வராமல் போகவே, துரைசாமி மறுபடியும் தூக்கத்தில் ஆழ்ந்தான்.

சீதா, தபாலில் வந்திருந்த அந்தக் கடிதத்தைப் பல தடவைகள் படித்தாள். ஒவ்வொரு தரமும் அவள் அதைப் படிக்கும்போது அளவுக்கு மீறிய சந்தோஷத்தை அடைந்தாள். அதில் நேரமாகிவிட்டதை உணர்ந்து, பரக்கப் பரக்க அடுப்பை மூட்டிக் காபி போட்டாள். அதையும், கடிதத்தையும் எடுத்துக்கொண்டு ஆபீஸ் அறைக்குள் சென்று காபியை மேஜைமேல் வைத்துவிட்டுத் துரைசாமியை ஒரு புன்சிரிப்புடன் அணுகினாள்.

"இன்றைக்கு என்ன காபி இவ்வளவு லேட்?" என்றான் துரைசாமி ஒரு மாதிரியாக. அவள் வெட்கம் கலந்த சிரிப்புடன், "லேட் தான் ஆகிவிட்டது. காரணம் இந்தக் கடிதந்தான்" என்று சொல்லிக் கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.

"அன்புள்ள சீதாவுக்கு,

உன்னிடமிருந்து கடிதம் வந்து ரொம்ப நாள் ஆகிறது. ஒரு வேளை உன் கணவருடன் புதுக் குடித்தனம் ஆரம்பித்தபிறகு சிநேகிதியை மறந்திருப்பாய்! எனக்கு இந்தப் பள்ளிக்கூட உபாத்தியாயினி வேலை

அலுத்து, ஒரு மாதம் லீவு எடுத்துக் கொண்டேன். பதினைந்து நாட்கள் இங்கேயே ஆகிவிட்டன. மீதிப் பதினைந்து தினங்களையும் உன்னுடன் கழிக்கலாம் என்று தீர்மானம் பண்ணி, நாளை இரவு மெயிலில் புறப்படுகிறேன்.

உன் அன்பை மறவாத,
ரோஸ் மேரி.

"ஓஹோ! இதனால்தான் காபி லேட்டோ?" என்றான் துரைசாமி.

"ஆமாம்."

"ஆமாமாவது, ஆமாம்! நீயும் உன் ரோஸ் மேரியும்! தலை தீபாவளிக்கு, நானும் அம்மாவும் வந்திருந்த போது இவளோடு சதா குலாவிக்கொண்டு என்னை நீ அவமதித்தது போதாதா? இங்கே வேறு வருகிறாளோ அவள்!"

சீதா கடிதத்தை ரோசத்துடன் எடுத்துக்கொண்டாள். அங்கிருந்து பதில் பேசாமல் பின்கட்டுக்குப் போய்விட்டாள.

* * *

நேற்றுத்தான் நடந்ததுபோல் இருக்கிறது. புதுச்சேரியில் ரோஸ் மேரியின் வீட்டாரும், சீதாவின் பிறந்தகத்தாரும் பக்கத்து வீடுகளில் குடியிருந்தார்கள். சீதாவுக்கும், ரோஸ் மேரிக்கும் அநேகமாக ஒரே வயதுதான் இருக்கும். இருவரும் கத்தோலிக்க 'கான்வென்ட்' ஒன்றில படித்துவந்தார்கள், தூங்குகிற சமயம் தவிர இருவரும் இணைபிரிவதில்லை. சீதாவின் பாட்டி இரண்டொரு தரம், "என்னடி உனக்கு அந்தப் பெண்ணோடு இழைசல் வேண்டியிருக்கு?" என்று பேத்தியைக் கண்டித்தாள். சீதா அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இருவர் மனத்திலும் நட்பின் விதை ஆழமாக ஊன்றிவிட்டது. அதை யாராலும் அகற்ற முடியவில்லை.

ரோஸ் மேரி பன்னிரண்டு வயதாக இருக்கும்போது அவள் தாயார் இறந்துபோனாள். தகப்பனார் மறு விவாகம் செய்துகொண்டார். இளைய தாயார், மேரி படித்தது

போதும் என்று வீட்டு வேலைகளைச் செய்ய நிறுத்திக் கொண்டு கேட்பவர்களிடம், "எங்களுக்குப் படிக்க வைக்கப் பணம் இல்லை" என்று சொல்லிவந்தாள்.

சீதாவுக்கு ரோஸ் மேரி இல்லாமல் பள்ளிக்கூடம் போகப் பிடிக்கவில்லை. அவள் தன் அப்பாவிடம் கெஞ்சி அழுது, ரோஸ் மேரிக்கு மாதம் மாதம் சம்பளம் கட்ட ஏற்பாடு செய்தாள். இதனால் ரோஸ் மேரிக்குச் சீதாவிடம் அன்பு அதிகமாயிற்று. சீதாவின் தாயாரிடம், "அம்மா! நீங்கள் தான் எனக்குத் தாயார்!" என்று சொல்லி, இறந்துபோன தன் தாயாரை நினைத்துக் கண்ணீர் வடிப்பாள், அவள். அந்தப் பெண்ணின் நல்ல குணத்தினால் சீதாவின் குடும்பத்தாருக்கு அவளிடம் மதிப்பு உண்டாயிற்று.

"ரோஸ் மேரி! நாங்கள் வேறு எங்கேயாவது போனாலும் நீ படிப்பை நிறுத்தாதே. சீதாவின் அப்பா உனக்கு ரூபாய் அனுப்புவார். கவலைப்படாதே, அம்மா" என்று சீதாவின் தாயார் அவளைத் தேற்றுவாள்.

சீதாவின் படிப்பு முடியக் காரணம் ஒன்று ஏற்பட்டது. பெரிய இடத்துப் பிள்ளை ஒருவன் சீதாவின் அழகுக்காகவே அவளைக் கல்யாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டான். கல்யாணத்தை வியாஜமாக வைத்துக்கொண்டு சீதாவைக் 'கான்வென்'டிலிருந்து நிறுத்திவிட்டார்கள்.

"கல்யாணமாகி நீ உன் புருஷனுடன் போய்விட்டால் என்னை மறந்துவிடுவாயோ சீதா?" என்று கேட்பாள் ரோஸ் மேரி.

"இங்கே பாட்டிக்குப் பயப்படுகிற மாதிரி ஆத்துக்காரருக்கு நான் ஒன்றும் பயப்படமாட்டேன். எனக்கு அவரிடத்தில் செல்வாக்கு உண்டு, தெரியுமா?" என்பாள் சீதா பெருமையாக.

சீதாவுக்கும் துரைசாமிக்கும் அந்த வருஷம் கல்யாணம் நடந்தது. ரோஸ் மேரி தன் தோழிக்கு அழகிய பேனா ஒன்றைப் பரிசாக அளித்தாள். தலை தீபாவளிக்குத் தான் வரப் போவதாகவும், அவளுக்கு என்ன மாதிரிப் புடைவை வேண்டும் என்றும் துரைசாமி சீதாவை

எழுதிக் கேட்டிருந்தான். "பார்த்தாயா, ரோஸ்? என் கணவர் என்னிடம் எவ்வளவு சலுகை காட்டுகிறார்! நீ என்னவோ சொன்னாயே?" என்று சொல்லிச் சந்தோஷப்பட்டாள் சீதா.

தீபாவளிக்குத் துரைசாமியும் அவன் தாயாரும் வந்தார்கள். நாட்டுப் பெண்ணுக்கு வேளைக்கு ஒரு டிரஸ் செய்து பார்க்கவேண்டுமென்று மாமியார் ஆசைப்பட்டாள். அந்தச் சமயங்களில், "இருங்கள் அம்மா, என் சிநேகிதிக்கு இந்தப் புடைவையைக் காட்டிவிட்டு வந்துவிடுகிறேன்" என்று புடைவையை எடுத்துக்கொண்டு ஓடுவாள் சீதா. அங்கே போனால் இருவரும் பேச்சில் லயித்துவிடுவார்கள்.

இந்த விஷயம் சீதாவின் மாமியாருக்கு அவ்வளவு திருப்திகரமாக இல்லை. மாமியார் விஷயமாவது வேறு. துரைசாமி எப்பொழுதும் சீதா தன்னுடனேயே பேச வேண்டும், தன் எதிரிலேயே இருக்கவேண்டும் என்று விரும்பினான். ஓடி ஓடிப் போய்விடுகிறாயே? கொஞ்சம் தான் என் பக்கத்தில் உட்காரேன்" என்று சீதாவைப் பார்த்துச் சொல்வான் துரைசாமி.

"எங்கேயும் ஓடிப் போகவில்லை. என்னுடைய சிநேகிதி ரோஸ் மேரியுடன்தான் பேசிக்கொண்டிருந்தேன். உங்களுடன் வந்துவிட்டால் அவளுடன் தினம் தினம் பேச முடியுமா?" என்று கேட்டாள் சீதா.

இவ்விதவாக, துரைசாமிக்கு ரோஸ் மேரியிடம் ஒரு மாதிரியான கோபமும் வெறுப்பும் ஏற்பட்டிருந்தன. அவள் வரப்போகிறாள் என்று கேட்டதும், அவை இன்னும் அதிகமாயின.

* * *

மறு தினம் காலையில் ரோஸ்மேரி வந்து சேர்ந்தாள். சிநேகிதிகள் இருவரும் சந்தோஷம் தாங்காமல் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்கள். சீதாவை ரோஸ் மேரி அன்புடன் அணைத்து, "சீதா! ரொம்பவும் மாறிவிட்டாயே; கொஞ்சம் பெருத்துக்கூட இருக்கிறாயே! உன்

குறும்புத்தனம் எப்படிப் போயிற்று?" என்று சொல்லிச் சொல்லி ஆனந்தப்பட்டாள்.

"நீதான் இளைத்திருக்கிறாய்! காலத்தில் உனக்குக் கல்யாணம் பண்ணிக்கொள்வதற்கு என்னவாம்?" என்றாள் சீதா.

இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது துரைசாமி அங்கே வந்தான்.

ரோஸ்மேரி எழுந்து நின்று கைகூப்பி நமஸ்கரித்தாள்.

"சௌக்கியமாக இருக்கிறீர்களா?" என்று விசாரித்தாள்.

"ஹும்" என்று ஒரே வார்த்தையில் நமஸ்காரத்துக்கும் கேள்விக்கும் பதில் சொல்லிவிட்டுப் போய்விட்டான் அவன்.

அன்று மாலை சீதாவும் ரோஸ்மேரியும் சேர்ந்து வெளியே உலாவப்போனார்கள்; படித்தார்கள்; பழைய நினைவுகளைக் குறித்துப் பேசினார்கள். இவர்களைப் பார்த்துத் துரைசாமிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. 'இந்தச் சீதாவை நாம் நன்றாக மட்டந் தட்டவேண்டும்' என்று தீவிரமாக யோசித்தான்.

'இவளுக்குச் சிநேகிதி இருக்கிற மாதிரி நமக்கும் சிநேகிதன் இருக்கிறான் என்று சீதாவுக்குக் காண்பிக்க வேண்டும்' என்று யோசித்து மண்டையைக் குழப்பிக் கொண்டதில், அவனுடன் காலேஜில் படித்த நண்பன் ஜோஸப்பின் நினைவு வந்தது. உடனே அவனை ஒரு வாரம் லீவில் வரும்படி கடிதம் எழுதிப் போட்டுவிட்டான்.

"உன்னைப்போன்ற ஒரு நண்பனோடு கொஞ்சகாலம் இருந்தால்தான் எனக்கு வந்திருக்கும் வியாதி தீரும் என்று டாக்டர் சொல்லுகிறார். மனோ வியாதிக்கு மருந்து வேறு என்னப்பா இருக்கிறது? ஒரு வாரமாவது நீ வந்து இங்கே தங்கிவிட்டுத்தான் போகவேண்டும்" என்று கடிதத்தில் பயமுறுத்தி இருந்தான்.

ஜோஸப், கடிதத்தைப் படித்துவிட்டு நண்பனைப் பற்றிப் பயந்துகொண்டே மறுநாள் வந்துசேர்ந்தான். அவனைக் கண்டதுமே சீதாவுக்குத் திடுக்கிட்டது.

" இவர் வரப்போகிறார் என்று எனக்குச் சொல்லவே இல்லையே நீங்கள் !" என்று கேட்டாள்.

" ஆமாம், அதற்கென்ன இப்போது? குஷியாகக் கொஞ்ச நாள் இருக்கவேண்டும் என்று வரவழைத்தேன்" என்றான் துரைசாமி ஒரு மாதிரியாக.

துரைசாமியும் ஜோஸப்பும் பேசினார்கள்; ஊர் சுற்றினார்கள்.

"ஏண்டா துரை! வீட்டில் யாரோ ஒரு பெண் வந்திருக்கிறாளே, அவள் யார்? அவளுக்கும் என்னுடைய மதந்தான்போல் இருக்கிறதே?" என்று ஜோஸப் மெள்ளக் கேட்டான்.

"யாரோ என் மனைவியின் சிநேகிதியாம்!" என்றான் துரைசாமி பிடிகொடாமல்.

ரோஸ்மேரியும் சீதாவிடம் ஜோஸப்பைப் பற்றிக் கேட்டாள்.

"இருக்கட்டுமே! இவர் சிநேகிதனுடன் பேசுவதால் எனக்கு என்ன குறைந்துவிட்டதாம்?" என்று எண்ணினாள் சீதா.

ரோஸ் மேரியும் ஜோஸப்பும் ஒருவருக்கு ஒருவர் அறிமுகமானார்கள். ரோஸ் மேரியுடன் ஜோஸப் பேசுவதைப் பார்த்ததும் துரைசாமிக்குப் பொறாமை உண்டாயிற்று.

"ஏண்டா! ஊரிலிருந்து என்னுடன் பேச வந்தாயா? அவளுடன் குலாவ வந்தாயா? அவள் எதிரிலேயே எப்போதும் இளித்துக்கொண்டு நிற்கிறாயே!" என்றான்.

"இதற்குக்கூடவா பொறாமை உனக்கு? அவள் அப்படி ஒன்றும் கெட்டவளில்லை, தெரியுமா?"

"ஓஹோ! இவ்வளவு தூரம் வந்துவிட்டதா? ஹூம்!" என்று பெருமூச்சுவிட்டான் துரைசாமி.

* * *

ஒரு வாரம் சென்றது.

ஒரு நாள் துரைசாமி சீதாவைப் பார்த்து, "உன் சிநேகிதியைக் காணுமே, எங்கே?" என்று கேட்டான்.

"உங்கள் சிநேகிதர் எங்கே? அவரைக்கூடக் காணுமே? குடும்ப விஷயமாகக்கூட உங்களுடன் என்னைப் பேசவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தாரே?"

"உன் சிநேகிதிமட்டும் என்ன? பத்து நாட்களாக உன்னுடனேயே சுற்றிக்கொண்டு இருந்தாளே, ஏதடா வீட்டில் ஒரு மனுஷன் இருக்கிறானே என்றுகூட இல்லாமல்!"

"அது எப்படி யாவது போகட்டும். இருவருக்கும் கல்யாணத்தை நடத்திவிடுவதுதான் உசிதம் என்று எனக்குப் படுகிறது."

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

ஜோஸப்புக்கும், ரோஸ் மேரிக்கும் அந்த லீவு முடிவதற்குள் விவாகம் நடந்தது. இருவரும் துரைசாமி தம்பதிகளுக்குப் பேசுவதற்கு நிறைய அவகாசம் அளித்துவிட்டு, 'தேன்மதி'யைக் கழிக்க, பங்களூருக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

## ௧

# ராசுமணி

பொழுது விடிந்ததிலிருந்து அன்று என் மனம் உத்ஸாகத்தில் இல்லை. காப்பிக்கொட்டை அரைக்கும் மிஷினின்பேரில் கோபம் கோபமாக வந்தது. பால்காரன் மீது எரிச்சல் வந்தது. வீடுகூட்டி தங்கத்தின்மீது வந்த ஆத்திரம் சொல்லிமுடியாது. மனத்தில் வேதனை வேறு குமுறிக்கொண்டு வந்தது. 'வீட்டில் நான்கு வருஷங்களாக - வீட்டின் ஓர் அங்கமாக - இருந்த ஒரு பெரிய வஸ்துவை இழந்துவிட்டோம்' என்று மனம் புலம்ப ஆரம்பித்தது.

"டிசம்பர்ப் பூவைப் பறிக்கலையே அம்மா" என்று தங்கம் கேட்டவுடன் என்னுடைய ஆத்திரம் அதிகமாயிற்று.

"பூவும், நீயும் நாசமாய்ப் போக" என்று அவளை மனமாரச் சபிக்கும்படியாக முதல் நாள் நடந்த சம்பவம் என்னைத் தூண்டியது.

ராசுமணி எங்கள் வீட்டு வேலைக்காரப் பையன். நாங்கள் அவனை வேலைக்காரப் பையனுகக் கருதவில்லை. வீட்டில் ஒரு முக்கியஸ்தனுகவே நினைத்து வந்தோம். ராசுமணி எங்களிடம் வரும்போது ஒன்பது வயதுப் பையன். தாயார், தகப்பனுர் இரண்டு பேரையும் இழந்தவன். பாலக்காட்டில் என் கணவர் வேலையாக இருந்த போது அவனுடைய மாமா அவனை எங்கள் வீட்டுக்கு வேலையாளாக அனுப்பிவைத்தார்.

ராசுமணி வந்த புதிதில் வேலை ஒன்றும் தெரிந்தவனுக இல்லை. ஆனுல், கெட்டிக்காரப் பையன் என்று அவன் முகம் சொல்லிற்று. அதிகாலையில் எழுந்து முதல் வேலையாக ஸ்நானம் செய்துவிடுவான். கிணற்றடியில் தொட்டியில் ஜலம் நிரப்பி, பூஜைக்கு வேண்டிய புஷ்பங்

களைப் பறித்து, பால் வாங்கி வைத்து, காபிப் பொடி அரைத்து - இவ்வளவு காரியங்களும் அவன் செய்து வைத்த பிறகுதான் நான் எழுந்திருப்பது வழக்கம். மணி ஆறரை தான் இருக்கும். நான் காபி போடுவதற்குள் ஐயாவின் வேலைகளைக் கவனிக்க மாடிக்கு ஓடிவிடுவான், அங்கே அலங்கோலமாகச் சிதறிக் கிடக்கும் பேப்பர்களையும் துணிகளையும் ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டுக் கீழே வந்து காபி சாப்பிடுவான். "அம்மா! மார்க்கெட்டுக்குப் போகணுமா?" என்று கேட்பான் கையில் பையுடன்.

அம்மாதிரி அன்று பொழுது விடிந்ததிலிருந்து கேட்க யாரும் இல்லை. கிணற்றடியில் தொட்டி ஜலம் இல்லாமல் காலியாகக் கிடந்தது. பால்காரன், "அம்மா, அம்மா" என்று கொல்லைப் பக்கம கத்த ஆரம்பித்துவிட்டான். புஷ்பங்கள் செடியிலேயே இருந்தன. காபிப் பொடியை நான் அரைக்க ஆரம்பித்தேன். வீட்டில் சமையலுக்குக் கறிகாய் இல்லை. நல்ல வேளையாக நான் மாடிப்பக்கமே போகவில்லை. போய்ப் பார்த்திருந்தால் ஒரு குரல் துக்கம் தீர அழுதிருப்பேன்.

என் கணவர் மாடியிலிருந்து கீழே வந்தார். முதல் நாளிலிருந்து அவருடன் சில்லறை மனஸ்தாபம் காரணமாகப் பேசவில்லை. கொல்லையிலிருந்த தங்கத்தை மாடியைப் பெருக்குவதற்காகக் கூப்பிட்டார்.

"வேலை இருக்குதே சாமி! பாத்திரம் தேய்க்கணுமே" என்று தங்கம் சொல்லிக்கொண்டிருந்தாள். நாகமணியை நாங்கள் வேலையைவிட்டுப் போகச் சொன்னது அவள் மனத்துக்குக்கூட அதிருப்தியை உண்டு பண்ணி விட்டது.

"நீயாவது கொஞ்சம் மாடியைப் பெருக்கிவிடுகிறாயா?" என்று கேட்டுக்கொண்டே சமையல் அறைக்குள் வந்தார்.

"நான் பெருக்குவதாவது? ஆபீஸுக்குச் சமையல் ஆகவேண்டும்; கிரிஜாவுக்கு எண்ணெய் தேய்க்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே அவர் முகத்தைக் கவ

ணித்தேன். ராசுமணி இல்லாமல் அவர் மிகவும் கஷ்டப் படுவதாகவே எனக்குத் தோன்றியது.

"நான் சொன்னதைக்கூடக் கவனியாமல் அவசரப் பட்டுப் போகச் சொல்லிவிட்டீர்களே?" என்றேன்.

"அவசரமாவது? கோட்டை 'பிரஷ்' செய்து வை என்றால் பத்து ரூபாயைத் திருடுவது என்று அர்த்தமா? அவனைத்தவிர வேறு யார் எடுத்திருப்பார்கள்? மாடிப் பக்கம் வேலைக்காரியோ வருவதில்லை!" என்றார் அவர் கோபத்துடன்.

* * *

முதல் நாள் எங்களுக்குள் ஏற்பட்ட மனஸ்தாபம் இதுதான்:

வழக்கம்போல் ராசுமணி மாடியைச் சுத்தம் செய்து விட்டுத் துணிமணிகளை ஒழுங்காக மடித்து வைத்துக் கொண்டிருந்தான். மார்க்கெட்டுக்கு அனுப்பலாமென்று மாடிக்குப் போனேன். "அவனுக்கு இன்று அதிக வேலை இருக்கிறது. கோட்டைப் 'பிரஷ்' பண்ணவேண்டும். இருக்கிற கறிகாயை வைத்துக் கொள்" என்று உத்தரவிட்டார் இவர்.

ஆபீஸுக்குக் கோட்டைப் போட்டுக்கொண்டு போனவர் ஒரு மணி நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து 'கோட்டுப் பையில் வைத்த பத்து ரூபாயைக் காணோம்' என்று வீடு பூராவும் தேடினார். ராசுமணியைக் கூப்பிட்டு நயமாகக் கேட்டார்.

"இல்லை ஐயா! கோட்டில் பணம் இருந்ததோ என்னவோ, நான் பார்க்கவில்லை" என்றான்.

"நான்தான் வைத்தேன் என்கிறேன்; நீ இல்லை என்கிறாயா? பணம் கால் முளைத்து நடந்து ஓடி விட்டதா?" என்று இரைய ஆரம்பித்தார். ராசுமணி கண்ணில் ஜலம் பெருக நின்றுகொண்டிருந்தான்.

"உண்மையைச் சொல்லி விடு; இரண்டு ரூபாய் இனாம் தருகிறேன்" என்று ஆசைகாட்டிப் பேசினார்.

"எடுத்திருந்தால் கொடுத்துவிடேன்; என்னவோ போயும் சிறு பிள்ளைதானே!" என்றேன் நான்.

"சத்தியமாகச் சொல்லுகிறேன், நான் எடுக்கவில்லை அம்மா" என்று என்னைப் பார்த்தான் ராசுமணி.

"சத்தியம் வேறு செய்ய ஆரம்பித்துவிட்டாயா நீ? வெளியே போடா. உனக்கு ஊரிலே கூட்டாளிகள் அதிகமாய் விட்டான்கள். சினிமா பார்க்கக் காசு இல்லை என்று சரியாக வேலை தீர்த்துவிட்டாய்" என்றார் என் கணவர்.

சிறிது நேரத்துக்கு முன்பு அழுதுகொண்டிருந்த ராசுமணியின் முகத்தில் கோபமும் ரோஷமும் காணப்பட்டன. கீழே ஓடிப் பெட்டியை எடுத்துவந்து துணிமணிகளை உதறிக் காண்பித்தான்.

"நான் வருகிறேன் அம்மா" என்று சொல்லிவிட்டு விடுவிடு என்று கீழே போய்விட்டான்.

"அவன்தான் எடுத்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன்.

"அவன் எடுக்கவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்? போகிறான் தரித்திரப் பயல். இவன் போனால் வேறு ஆள் கிடைக்காதா?" என்று சொல்லிவிட்டு மறுபடியும் அவர் ஆபீஸுக்குப் போய்விட்டார்.

ராசுமணி வீட்டை விட்டுப் போன மறு தினத்திலிருந்துதான் முதலில் கூறிய சங்கடங்கள் ஆரம்பித்தன. வீடு கிடந்த அலங்கோலமும், கிரிஜாவைப் பள்ளிக்கூடம் அழைத்துப்போக ஆள் இல்லாமல் நான் தவித்ததும் கணக்கில்லை.

ராசுமணி போய்ப் பத்துத் தினங்களுக்கு அப்புறம் சலவைத் துணிகளை எடுத்துக்கொண்டு வண்ணாத்தி வந்தாள். துணிகளைக் கணக்குப் பார்த்துப் பீரோவில் வைத்துக்கொண்டிருந்தேன்.

"எங்கே அம்மா ராசுமணி?" என்று என்னைக் கேட்டாள்.

"வேலையை விட்டுப் போய்விட்டாண்டி" என்றேன் நான்.

"ஏன் அம்மா? உங்களால் எல்லா வேலையும் செய்ய முடியுமா?" என்று கேட்டாள் வண்ணாத்தி.

"முடிகிறது, இல்லே. அதுக்காகத் திருட்டுப் புத்தி உள்ளவனை வீட்டில் வைத்துக்கொள்ளலாமா?" என்று கேட்டேன்.

"பலே! திருடனைக் கண்டுபிடித்து விட்டீர்கள் அம்மா" என்று பரிகாசம் கலந்த குரலில் சொன்னாள் வண்ணாத்தி. அவள் மேலும், "அநியாயமாக அந்தப் பையனை வீட்டை விட்டுத் துரத்தினீங்களே, நாலு வருஷமாப் பழகியும் தெரியலையே அம்மா உங்களுக்கு! எனக்குச் சலவை செய்யப் போட்ட கோட்டில் பத்து ரூபாயை வச்சுட்டு அந்தக் கோட்டில் தேடினாக் கிடைச்சுடுமா?" என்றாள்.

"என்னடி சொல்லுகிறாய்?" என்றேன் ஆச்சரியத்துடன்.

"இந்தாங்க அம்மா ரூவா" என்று பத்து ரூபாய் நோட்டை நீட்டினாள் வண்ணாத்தி.

"ராசுமணியை நீ பார்த்தாயாடி?" என்று கேட்டேன். எனக்கு அழுகை குமுறிக்கொண்டு வந்தது.

"அதுதான் நீங்க துரத்தின அன்னிக்கே எங்க ஊட்டண்டை வந்து துணியெல்லாம் தேடுச்சு. ரூவா அகப்பட்டதும், 'பாத்தியா அம்மா! ஐயா ஒரு பாவமும் இல்லாமல் என்னை விரட்டினார்? பழகினவனிடம் நம்பிக்கை இல்லே பாத்தியா அவங்களுக்கு? இதை நான் கொண்டுபோய்க் கொடுத்தாக்கூட நம்பமாட்டாங்க. நீயே கொடுத்துடு' ன்னு சொல்லிட்டுப் போச்சு. பத்து நாள் திண்டாடினாத்தான் தெரியும்னு நான் கொண்டுவரலே அம்மா!"

ராசுமணியைப் பல இடங்களில் தேடிப் பார்த்தோம். அவன் அகப்படவில்லே. வீட்டில் இருந்த புது வேலைக்

காரன் கோவிந்தனிடம்மட்டும், ''ராசுமணி மாதிரி நம் பிக்கையாக வேலே செய் அப்பா'' என்று சொல்லியிருக் கேரும்.

ராசுமணியை வேறு பெரிய வேலேக்கு வெளியூருக்கு அனுப்பிவிட்டதாக நாங்கள் சொன்ன பொய்யைக் கோவிந்தன் நம்பினதாகத் தெரியவில்லே. வீட் டுக்கு மாதம் மூன்று முறை வரும் வண்ணுத்தி அவனிடம் நடந்ததைச் சொல்லியிருக்கமாட்டாளா என்ன?

# 10

## ராதையின் கானம்

மார்கழி மாதத்தில் விடியற்காலம் என் மருமாள் ராதை பூஜை அறையில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்தாள். எதிரே சுவரில் நடராஜரின உருவப் படம் ஒன்று மாட்டி இருந்தது, பக்கத்தில் குழல் ஊதும் மாயக்கண்ணனின் திரு உருவம். கீழே வெள்ளிக் குத்து விளக்கு நிழல்போல் எரிந்துகொண் டிருந்தது. சாமந்தி யும், மருக்கொழுந்துமாகச் சேர்த்துத் தொடுத்த மாலை யைப் படங்களுக்குப் போட்டிருந்தது. ஊதுவத்தியின் மணத்துடன், மலர்களின் மணமும் கலந்து ஒரு தெய்விக வாசனை அறை முழுவதும் சூழ்ந்திருந்தது.

ராதை ஒரு சிலைபோல் அமர்ந்து, 'இனம் தெரியா மல் எவனோ, என்னகம் தொட்டுவிட்டான்' என்ற ஒரே அடியைத் திருப்பித் திருப்பிப் பாடிக்கொண் டிருந்தாள். ராதைக்குப் பத்து வயது. கண்ணும், மூக்கும் சிலையில் வடித்ததுபோல இருக்கும். நித்தரை தெளிந்து எழுந்த நான் பூஜை அறை வாசற்படியண்டை போய் நின்றேன். என் தம்பி வாசுவும் தன் பெண்ணின் பக்கத்தில் உட் கார்ந்து ரசித்துக்கொண் டிருந்தான். இடையிடையே பெரு மூச்சுடன் அவன் மனம் வேதனைப்பட்டது ராதைக் குத் தெரியவில்லை. என்னைக் கண்டதும் வாசு, "ராதை! அத்தை வந்திருக்கிறாள். இந்தப் பாட்டையே முதலில் இருந்து பாடு" என்றான். ராதை ஒரு புன்சிரிப்புடன் என்னைப் பார்த்தாள்.

"அத்தை! அப்பாவுக்கு இந்தப் பாட்டைத் தவிர வேறு எதுவுமே பிடிக்கிறதில்லை. பைத்தியம்மாதிரி 'தூண்டிற் புழுவினைப்போல்' பாடு' என்றுதான் சொல்லிக்கொண்டே இருக்கிறார்" என்று பரிகாசம் செய்துகொண்டே கலகல வென்று சிரித்துத் தம்பூரை மீட்டத் தொடங்கினாள். திரும்பவும் கேதாரகௌளத்

றில் ஆரம்பித்த அந்தப் பாட்டு, தம்பூர் சுருதியுடன் கலந்து அறையில் சுழன்று என் செவிக்கு இன்பமூட்டியது. வாசுவின் சிந்தனை நிறைந்த முகமும், ராதையின் எடுப்பான சாரீரமும் சேர்ந்து பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்றை என் மனத்திரையில் காட்ட ஆரம்பித்தன.

எங்கிருந்தோ ஒரு இனிய நாதம், 'பாலும் கசந்ததடி' என்று பாடிக்கொண்டே அபிநய பாவத்தில் ஜல் ஜல் என்று சதங்கை சப்திக்க என்முன் ஆடுவதுபோல் ஒரு பெண் உருவம் தோன்றியது. பதினாறு வயதுப் பால குமாரி, யௌவனம் கொழிக்கும் நடன சிங்காரி, என் பால்ய சிநேகிதை ராதையின் உருவம்தான் அது. ராதை எனக்குச் சிநேகிதி. என் தம்பி வாசுவுக்குக் காதலி. கலைப் பித்துக்கொண்ட வாசுவின் மனத்தை அவள் கொள்ளைகொண்டது ஒரு கதையாக இன்று முடிந்து விட்டது.

* * *

எனக்கு விவாகமான புதிதில் தனிக் குடித்தனம் செய்ய என் கணவருடன் சென்னை வந்துசேர்ந்தேன். தாயில்லாப் பிள்ளையாகிய என் தம்பி வாசுவை அப்பாவிடம் தனியாக விட்டுவர மனமில்லாமல் என்னுடன் அழைத்து வந்தேன். அப்போது அவன் திருச்சி காலேஜில் படித்துக்கொண்டிருந்தான். 'சென்னையில்தான் வந்து படிக்கட்டுமே, நமக்கும் துணையாக இருக்கும்' என்று எண்ணி வாசுவை அழைத்து வந்தது என் பிசகுதான். எழும்பூரில் எங்கள் வீட்டுக்கு அருகில் ஓர் அழகிய பங்களாமட்டுந்தான் இருந்தது. அதற்கு அப்புறம் பஸ் செல்லும் சாலை ஒன்றும், ரெயில்வே லயனுந்தான். திருச்சியில் சிநேகிதிகளுடன் கலகலப்பாகப் பழகிய எனக்கு முதலில் சென்னை வாசம் பிடிக்கவில்லை. என் கணவருக்கு வெளியே 'காம்ப்' போகும் வேலை. மாதத்தில் பத்துத் தினங்கள் வீட்டில் இருப்பது அபூர்வம். அந்த நாட்களில் மாலை ஐந்து மணிக்கே சமையல் வேலையெல்லாம் முடிந்து, வீட்டுக்கு முன்புறம், 'காம்பவுண்டி' ல் இரண்டு நாற்காலிகளில் நானும் வாசுவும் உட்கார்ந்து ஏதாவது பேசிக்

கொண்டிருப்போம். இரவு ஏழரை வரையில் இப்படிப் பொழுதுபோக்குவது தினசரி வழக்கமாக இருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை. வாசுவும் காலேஜிலிருந்து சீக்கிரமாகவே வந்துவிட்டான். வழக்கம்போல் நாற்காலிகளைப் போட்டுக்கொண்டு வெளியே உட்கார்ந்தோம். சென்னைக்கு வந்த நாட்களிலிருந்து அடுத்த பங்களாவில் யார் வசிக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிந்து கொள்ளவே இல்லை. இது சென்னையில் சகஜமான விஷயம். அன்றும் உலக விவகாரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது பளபளவென்று மின்னும் கார் ஒன்று வந்து பக்கத்துப்பங்களா எதிரில் நின்றது. நாங்கள் இருவரும் பேச்சை நிறுத்திவிட்டுக் காரைக் கவனித்தோம். காரிலிருந்து நாற்பது வயது ஸ்திரீ ஒருத்தியும், பதினாறு வயதுப் பெண் ஒருத்தியும் இறங்கினார்கள். அவர்கள் இறங்கின வுடன் கதவை மூடிக்கொண்டு பின்னால் ஒருவர் சென்றார்: ஆஜானுபாஹுவான தேகம் களைபொருந்திய முகம். அவர் முக ஜாடையும், அந்தப் பெண்ணின் முக ஜாடையும் ஒன்றாக இருந்தன. யாரோ பணக்காரக் குடும்பம் ஒன்று அந்தப் பங்களாவில் வசிக்கிறது என்று தெரியவந்தது. அவர்கள் உள்ளே சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் தம்பூர் சுருதியின் ஓசை கேட்க ஆரம்பித்தது. அத்துடன் ஜல் ஜல் என்று சதங்கை ஒலியும் சேர்ந்து வந்தது. வாசுவின் முகம் ஆவலால் நிறைந்தது. "சாதாரணப் பணக்காரக் குடும்பம் இலலை அக்கா. அவர்கள் தேவதாஸிகள். அந்தப் பெண்ணுக்கு நாட்டியம் பழக்கித் தருகிறார்கள்போல் இருக்கிறது" என்றான் வாசு.

"இருக்கும்; இருந்தாலும் குடும்பஸ்தர்கள் மாதிரித் தான் இருக்கிறார்கள்" என்றேன் நான்.

அதற்குமேல் அன்று நாங்கள் அவர்களைப்பற்றிப் பேசமுடியவில்லை. ஏனெனில் இழைந்த குரல் ஒன்று 'தாண்டிற் புழுவினைப்போல்' என்று பாட, அதற்கு ஏற்றமாதிரியாகச் சதங்கைச் சப்தம் ஜல் ஜல் என்று சப்திக்க ஆரம்பித்தது. வாசு மெய்ம்மறந்த நிலையில் உட்கார்ந்திருந்தான். பாட்டு, நாட்டியம் எல்லாம் முடிந்ததும் பங்களாவிலிருந்து கலகல வென்று மணிக் குரலில் யாரோ சிரித்தார்கள்.

"இவ்வளவு மல்லிகைப் பூவையும் என் தலையில் வைத்தால் நான் ஆடச்சே உதிர்ந்து வீணாய்ப்போயிடும் அம்மா" என்று அந்தப் பெண்தான் கூறியிருக்க வேண்டும்.

"எதுக்கும் நீ இப்படித்தான். என்ன வேணுமோ செய்துகொள்" என்று தாயார் கடிந்துகொள்வதும் கேட்டது.

"கொஞ்சம் பூ தனியாக வைத்துவை அம்மா. பக்கத்து வீட்டு அம்மாவுக்குக் கொஞ்சம் கொடுத்துடலாம்" என்றாள் அந்தப் பெண்.

"கொடுக்கட்டுமே ரஞ்சிதம். குழந்தை மனசை நாட்டியம் ஆடற சமயத்தில் கெடுக்காதே" என்றது ஒரு புருஷக் குரல்.

என்னைவிட வாசுவின் கண்களில் ஆவல் நிறைந்திருந்தது. அந்தப் பெண் வருவாள் என்று சிறிது நேரம் வெளியே காத்திருந்தோம். நன்றாக இருட்டிவிடவே உள்ளே போகும்படி ஆயிற்று.

பிறகு நாட்டியத்தை முடித்துவிட்டார்கள்போல் இருக்கிறது. தம்பூரின் சுருதி ஓய்ந்துவிட்டது, இரவு மணி எட்டரை ஆகிவிடவே, வாசுவைச் சாப்பிடக் கூப்பிட்டேன் சமையல் அறையில் நாங்கள் இருந்தபோது கதவை யாரோ லேசாகத் தட்டினார்கள். தட்டுவதுகூட அபிநயபாவத்தில் இருந்தது.

"சீக்கிரம் போய்ப் பார் அக்கா. இருட்டில் அந்தப் பெண் நிற்கப் போகிறது" என்றான் வாசு.

கதவைத் திறந்ததும் கையில் கட்டு மல்லிகைப் பூவுடன் அந்தப் பெண் நின்றுகொண் டிருந்தாள்.

"உள்ளே வா அம்மா" என்று அழைத்தேன். அவள் கூடத்தில் விளக்கடியில் நின்று, "அம்மா கொடுக்கச் சொன்னாங்க" என்று புஷ்பத்தை நீட்டினாள்.

"வீட்டில் நான் ஒருத்திதானே பெண்பிள்ளை. இவ்வளவு பூ எதற்கு அம்மா?" என்றேன்.

"இப்போது கொஞ்சம், காலையில் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்களேன்."

"உட்காரேன், போக வேண்டுமா?" என்று கேட்டேன்.

"கொஞ்ச நேரம் காணாவிடில் அம்மா தேடுவாங்க" என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தாள்.

பெண்களுக்கு இயற்கையான விசாரணை எல்லாம் முடிந்தது; அவள் பெயர் ராதை. தேவதாஸிகள் தாம் ஆனால் அம்மா, அப்பா இருவரும் அவளுக்கு நாட்டியக் கலையை ஊக்கத்துடன் சொல்லிக்கொடுக்கிறார்கள். அவளுக்கும் அதைப் பயிலுவதில் ஆசைதான். இன்னும் இரண்டொரு வருஷத்தில் நல்ல பிள்ளை ஒருவனுக்கு அவளை விவாகம் செய்துகொடுக்கப் போகிறார்கள். இப்படிச் சொல்லிவிட்டு, "ஆனால் கல்யாணம் பண்ணிக் கொண்டால நாட்டியம் ஆட முடியுமா அம்மா? நான் கல்யாணமே பண்ணிக்கொள்ளப் போகிறதில்லை" என்றாள் ராதை.

சாப்பிட்டு முடிந்து வெளியே வந்த வாசு இதைக் கேட்டுவிட்டுச் சிரித்தான். ராதைக்கு வெட்கமாகப் போய் விட்டது. கள்ளங் கபடு இல்லாமல் இவ்வளவு நேரம் பேசியதை வாசு கேட்டுவிட்டான் என்பதை உணர்ந்தபோது அவள் முகம் ரோஜாமலரைப்போல் வெட்கிச் சிவந்தது.

அன்றைத் தினத்திலிருந்து ராதையும், நானும் சிநேகிதிகள் ஆகிவிட்டோம். அவள் தாயார் ரஞ்சிதத்திற்கும் ராதை எங்கள் வீட்டுக்கு வருவது பிடித்திருந்தது. மத்தியான்ன வேளைகளில் வீட்டில் யாரும் இல்லாமல் இருக்கும்போது ராதை அந்தத் தனிமையை நிவர்த்தி செய்தாள். சிறிது நேரம் சோழி ஆடுவோம், கட்டம் ஆடுவோம். அவள் நாட்டியம் ஆட ஆரம்பித்துவிட்டாலமட்டும் மணி போவதே தெரியாது. அந்தரத்தில் சுழலும் ஒரு பொம்மை மாதிரி, சுழன்று சுழன்று அவள் மோகன உருவம் எங்கள் கூடத்தில் ஆடும்போது என் மனமே அவளைக் கண்டு ஆசை கொண்டது. ராதையும், நானும் சிநேகிதிகள் என்று தெரிந்தவுடன் வாசு மத்தியான்ன வேளைகளில் காலேஜை விட்டு வீட்டுக்கு வர ஆரம்பித்தான். அவன்

அப்போது வந்துவிட்டால் ராதை வெட்கப்பட்டு ஆட்டத்தை நிறுத்திவிடுவாள்.

"இப்படி வெட்கப்பட்டால் பிரபலமாக நீ எப்படி முன்னுக்கு வரமுடியும் ராதை?" என்பேன் நான்.

"உன் நாட்டியத்தைப் பார்க்க நூற்றுக் கணக்கில் புருஷர்கள் வருவார்களே; வெட்கப்பட்டால் முடியுமா?" என்று கேட்பான் வாசு.

கொஞ்ச நாட்களில் இருவரும் மனம் விட்டுப் பழகினார்கள். இப்பொழுதெல்லாம் ராதை, வாசுவைக் கண்டு வெட்கப்படுவதில்லை. ஆனால் வாசு படிப்பில் கவனம் செலுத்துவதையே விட்டுவிட்டான். அவனுடைய அலக்ஷியம் என் மனத்தை வருத்தியது. 'ஊரில் இருக்கும் அப்பாவுக்கு என்ன பதில் சொல்வது' என்று எனக்குப் பெரிய வேதனையாக இருந்தது.

"வாசு, நாட்டியம், சங்கீதம் என்று பிராணனை விடுகிறாயே; படிக்கவேண்டாமா?" என்று ஒரு தடவை அவனைக் கேட்டேன்.

"போ அக்கா. என்ன படிப்பு இது? மனத்துக்கு உத்ஸாகம் அளிக்காத வித்தை ஒரு வித்தையா என்ன?"

"படிக்காமல் என்ன பண்ணப்போகிறாயாம்?"

"பாட்டுச் சொல்லிக்கொள்ளலாம் என்று பார்க்கிறேன்."

"ரொம்ப நன்றாக இருக்கிறது!" என்றேன் நான்.

அவன் மாறுதலுக்கு ராதைதான் காரணம் என்றாலும் அவளை வெறுக்க என் மனம் துணியவில்லை. 'கள்ளம் கபடற்ற பெண் அவள். 'அவள் நாட்டியம் ஆடினால் வாசுவைச் சங்கீதம் கற்றுக்கொள்ளச் சொன்னாளா என்ன? பைத்தியக்காரன்!' என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் ராதை அவன் மனத்தில் அழியாத ஸ்தானம் ஒன்றை அடைந்துவிட்டாள் என்பது எனக்குத் தெரியவில்லை. சிறு வயதாயிற்றே. மனம் அப்படித்தான் சலனமடையும் என்று எண்ணினேன். ராதையின் தாயார் ரஞ்சிதம் தெய்வபக்தி உடையவள். வீண் ஆடம்பரத்தை

வெறுப்பவள். பூஜை செய்யப் போய்விட்டாளானல் மணிக்கணக்காக உள்ளம் உருகி அங்கேயே உட்கார்ந்து விடுவாள். ராதையும் நானும் சந்தித்த பல மாதங்களுக்குப் பிறகு ஒரு வெள்ளிக்கிழமையன்று மஞ்சள் குங்குமத்துக்காக என்று என்னை ராதை அவர்கள் வீட்டுக்கு அழைத்தாள். போயிருந்தேன். கூடத்தில் விளக்கேற்றி, அலங்காரமாக இருந்தது அவர்கள் வீடு. ரஞ்சிதம் ஸ்நானம் செய்து ஈரம் உலராத கூந்தலுடன் கூடத்தில் அம்பிகையின் படத்துக்குப் பூஜை செய்துகொண்டிருந்தாள்.

பூஜையெல்லாம் முடிந்ததும் ராதையைக் கூப்பிட்டுப் படத்துக்கு நமஸ்காரம் செய்துவிட்டுப் படத்தண்டை வைத்திருந்த இரண்டு பொட்டலங்களில் ஒன்றை எடுக்கச் சொன்னாள். எனக்கு இதெல்லாம் புதிராக இருந்தது. ராதை, பொட்டலத்தைத் தாயாரிடம் கொடுத்துவிட்டு நின்றாள். ரஞ்சிதம் அதைப் பிரித்தபோது உள்ளே நசுங்கிக் கிடந்த மல்லிகை மலர் ஒன்று காணப்பட்டது. பொட்டலத்தை உற்றுப் பார்த்தபடியே ரஞ்சிதம் பேசாமல் நின்றாள்.

"இது வம்சத்துக்கே ஏற்பட்ட சாபம்போல் இருக்கிறது அம்மா" என்றாள் ரஞ்சிதம்.

நான் விஷயந் தெரியாமல் விழித்தேன்.

"ராதையை என்னுடைய ஒன்றுவிட்ட தமையன் பிள்ளைக்குக் கொடுக்கலாம் என்று தீர்மானித்தோம். நல்ல அந்தஸ்தில் இருக்கிறான். கல்யாணம் செய்துகொண்டு கௌரவமாகக் காலந் தள்ளட்டும் என்பதுதான் என் அபிப்பிராயம், அதற்கு அம்பிகை உத்தரவு கொடுக்கவில்லையே அம்மா. என்னைப்போல அவளும் மேடை மேடையாக ஆடித்தான் பிழைக்கவேண்டும்போல் இருக்கிறது. நல்ல அந்தஸ்தில் இருந்த என் அத்தானைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் ஆடிப்பிழைப்பது நானாகச் செய்து கொண்ட வழி அம்மா. முதலில் சங்கீத தேவதைக்கே என்னை அர்ப்பணம் செய்துவிடுவது என்று இருந்தேன். என் வாழ்க்கையில் இருவர் குறுக்கிட்டனர். சங்கீதத்தில் நிபுணரான ராதையின் தகப்பனார்

ஏழையாக இருந்தாலும் என் மனத்தில் முக்கிய ஸ்தானம் வகித்தார். இதே அம்பிகையின் படத்துக்குமுன் நானாகவே என் முடிவை அறிந்துகொள்ள இந்த முறையை அனுசரித்தேன். இதே மல்லிகை மலர் என் வாழ்வின் போக்கை மாற்றியது. இன்று ராதையையும் அம்பிகை தடுக்கிறாள்" என்று கண்ணீருடன் கூறி முடித்தாள். ஒரு கணம் வாசுவின் உருவம் தோன்றி மறைந்தது. இந்த அபலையின் வாழ்க்கையில் வாசு குறுக்கிட்டு விடுவானோ என்று ஒரு ஐயம் எழுந்தது என் மனத்துள்.

"அம்மாவுக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்கிறது" என்று ராதை புன்சிரிப்புடன் சொல்லிக்கொண்டே, "நாட்டியம் ஆடுகிறேன் அம்மா. அந்த அம்மாவும் ஆசைப்படுகிறார்கள்" என்று, 'தூண்டிற் புழுவினைப் போல' என்ற மனத்தை உருக்கும் அதே பாட்டை எடுத்துக்கொண்டாள் அபிநயம் பிடிக்க. 'இந்தத் தெய்விகக் கலையைப் பயின்றவள் மனிதனுக்கு ஏன் அடிமையாக வேண்டும்? உலக இன்பங்களில் ஏன் உழலவேண்டும்? தெய்வமே இவளை ஆட்கொள்ளட்டுமே' என்றுதான் நான் நினைத்தேன்.

இப்படி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி இருந்த எங்களை வாசுவின் குரல் திடுக்கிடச் செய்தது. என்னை அழைக்க வந்த சாக்கில் வாசு அங்கே உட்கார்ந்து பாட ஆரம்பித்துவிட்டான்.

"இது யார் அம்மா?" என்று ரஞ்சிதம் கேட்டாள்.

"என் தம்பி; சங்கீதத்தில் அபாரப் பிரேமை" என்றேன் நான். அவள் முகத்தில் கவலைக் குறி தோன்றியது. அன்றைய இரவைப் பல வருஷங்கள் கழித்து இன்று நினைத்தாலும் தேகம் புல்லரிக்கிறது. ராதை அவ்வளவு அற்புதமாக ஆடினாள்.

ரஞ்சிதத்தினிடம் விடைபெற்றுத் தெருவை அடைந்தபோது ரஞ்சிதம் தெருவரைக்கும் வந்து, "அம்மா, உங்களை நான் கும்பிடும் அம்பிகையாக நினைத்துச் சொல்கிறேன். உங்கள் தம்பிக்குக் கல்யாணம் செய்துவிடுங்கள். இல்லாவிட்டால் நான் ராதையுடன் எங்காவது போய்விடவேண்டும்" என்று உருக்கமாக வேண்டினாள்.

அன்னையின் மனத்தாங்கலின் முன்பு வாசுவின் பிரேமை ஒன்றும் பிரமாதமில்லை. 'அதுவும் ஒரு தாசிப் பெண்ணுடனா?' என்றுதான் என் மனம் நினைத்தது. அன்று இரவே அப்பாவுக்கு நிலைமையை விவரித்து ஒரு கடிதம் எழுதினேன்.

ஒரு வாரத்துக்கெல்லாம் அப்பாவிடமிருந்து பதில் வந்தது. வாசுவுக்குக் கல்யாணம் செய்ய நிச்சயித்திருப்ப தாகவும் அவனை உடனே வரும்படியும் எழுதியிருந்தார். வாசுவுக்குத் தகப்பனார்மேல் கோபம். ஆனால் ராதை யை அடைய முடியும் என்கிற நம்பிக்கையும் அவனுக்கு ஏற்படக் காரணமில்லை.

* * *

அவன் மனத்தில் அடித்த புயல் நாளடைவில் ஓய்ந்தி ருக்குமென்று நினைத்தேன். ஆனால், ராதையின் தெய்விக கானமான, 'தூண்டிற் புழுவினைப்போல்' அவன் மனத்தை வேதனையில் ஆழ்த்த, அதைத் தன் மகளுக்குச் சொல்லிக் கொடுத்து அதிலிருந்தாவது மனச்சாந்தியை நாடுகிறான் என்பதை அன்றுதான் தெரிந்துகொண்டேன்.

"ராதை எங்கிருக்கிறாள் என்பது உனக்குத் தெரி யுமா அக்கா?" என்று கேட்டான் என்னை.

"தெற்கே இருக்கிறாளாம். யாரையுமே கல்யாணம் செய்துகொள்ளவில்லையாம். நாட்டியத்தில் ஆயிரக் கணக்கில் சம்பாதித்துத் தர்மம் செய்து வருகிறாளாம். ஜனங்கள் அவளைப்பற்றிப் பிரமாதமாகச் சொல்லுகிறார் கள்" என்றேன்.

என் மருமாள் ராதை மறுபடியும் கணீரென்று பூபா ளத்தில் கீர்த்தனம் ஒன்றைப் பாடத் தொடங்கினாள். பலபலவென்று சூரிய உதயத்தில் அந்தக் கானம் எழுப்பிய இன்பத்தைப் பல வருஷங்களுக்குமுன் ராதை பாடக் கேட்டபோது அநுபவித்த நினைவு வந்தது.

# 11

# மீனாக்ஷியின் வீணை

"வீணைத் தந்திகளை மீட்டிக்கொண்டிருந்தாள் மீனாக்ஷி. நான் உள்ளே நுழைந்த சமயம் சரியானதுதான் என்று நினைத்துக்கொண்டே மீனாக்ஷியின் எதிரில் போய் அமர்ந்தேன்.

"வா, உட்கார்!" என்று என்னை வரவேற்றுவிட்டு மீண்டும் தந்திகளை மீட்டி வீணையின்மேல் படிந்திருந்த தூசியைத் துணியால் தட்ட ஆரம்பித்தாள் மீனாக்ஷி. மீனாக்ஷி அம்மாமிக்கு வயது ஐம்பது இருக்கும். ஆனால், அந்த ஊரில் இரண்டு வயதுக் குழந்தைமுதல் கிழம்வரை எல்லோரும் அம்மாமியை, 'மீனாக்ஷி' என்றுதான் கூப்பிடுவது வழக்கம். தவறி யாராவது 'அம்மாமி!' என்று அழைத்துவிட்டால் மீனாக்ஷிக்குக் கோபம் வந்துவிடும். அவள் சுய மரியாதைக்கோ, மதிப்புக்கோ ஆசைப்படும் மனுஷி அல்ல.

"எங்கே வந்தாய்? விசேஷமில்லாமல் வரமாட்டாயே!" என்று மீண்டும் என்னை விசாரித்தாள் மீனாக்ஷி.

"விசேஷத்தோடுதான் வந்திருக்கிறேன் மீனாக்ஷி! நாளை விஜயதசமியன்று கிரிஜாவுக்கு வீணை சொல்லித் தர ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன். நல்ல வீணையாக வாங்கித் தரமுடியுமா என்று உங்களிடம் கேட்டுவிட்டுப் போகலாமென்று வந்தேன்."

மீனாக்ஷியின் கணவர் வீணை வாங்குவதில் பெயர் போனவர் என்பது அந்த ஊராரின் அபிப்பிராயம்.

"வீணை சொல்லித் தரும்படி உன் பெண்ணுக்கு அப்படி என்ன வயசாகிறது?" என்று மீனாக்ஷி என்னைக் கேட்டாள்.

"விஜயதசமி அன்றுதான் அவளுக்கு எட்டு வயது நிறையப்போகிறது. வீணைதான் சொல்லிக் கொள்ள

வேணும் என்று ஆசைப்படுகிறாள். அவள் ஆசையைக் கெடுப்பானேன்?"

மீனாக்ஷி ஒரு மாதிரியாகச் சிரித்தாள். பிறகு, "ஆசையைக் கெடுக்கக் கூடாது; வாஸ்தவந்தான். பிற்காலத்தில் அந்த ஆசை பரிபூரணமாக நிறைவேற வேண்டுமே. அதுதான் கவலையாக இருக்கிறது. பெண் ஜன்மங்களுக்கு ஏதோ சுதந்தரம் கொடுத்துவிட்டதாகச் சிலர் பாவித்துக்கொண்டிருக்கிறார்கள். கிரிஜாவின் அபிலாஷை பூர்த்தியாவது அவள் கணவனிடந்தானே இருக்கிறது? குழந்தைக்கு ஆசையுடன் அற்புதமான வித்தையைப் போதிக்கிறாய். பிற்காலத்தில் வீணை - என் வீணை மாதிரி - புழுதி படிந்து மூலையில் கிடந்தால் அதை அப்பிய சித்தவருக்கு மனவருத்தந்தானே?" என்றாள் மீனாக்ஷி.

களைபொருந்திய அவள் முகத்தில் வருத்தத்தின் குறிகளும் சிந்தனைகளும் தோன்றின. "கேள் அம்மா! இந்த வீணை என்னுடையது. என் உயிரினும் இனிய பொருளாக இதை மதித்து நடந்துவந்தேன். ஏழு வயதில் இது என்னை அடைந்தது. இன்றைக்கும் என்னிடந்தான் இருக்கிறது. அதனுள் இருக்கும் ஸப்தஸ்வரங்களைத் தட்டி நாதத்தை வெளியிடும் யோக்கியதையும் எனக்கு ஏற்பட்டது. ஆனால் அதிர்ஷ்டம் என் விஷயத்தில் மோசம் செய்துவிடவே இந்த வாத்தியத்தை வருஷக் கணக்காகப் பெட்டியிலேயே வைக்கும்படி நேர்ந்துவிட்டது. நான் வீணையைத் தொடுவதில்லை என்று தெரிந்து என் தகப்பனார் சாகும்வரையில் மனம் புழுங்கினார். அதெல்லாம் பழைய கதை. தூசு படிந்து வீணாகி விடுமே; பார்க்கலாம் என்று வெளியில் எடுத்தேன்.

"அப்படி உங்களுக்குத் தடை விதித்தது யார் மீனாக்ஷி? மாமாவா?" என்று கேட்டேன்.

"சே சே, அவருக்குச் சங்கீதம் என்றால் உயிர். அது ஒரு கதை அம்மா. அவகாசமிருந்தால் சொல்லுகிறேன் கேள். தடை விதித்தவர் மண்ணோடு மண்ணாகப் போய்விட்டார். ஆனால், மனிதன் செய்யும் தீமையும் நன்மையும் உலகத்தில் அவனுக்கு அழியாத பெயரை ஏற்படுத்தி விடுகின்றன. என் மாமனார் இறந்து பதினைந்து

வருஷங்கள் ஆகிவிட்டன. இந்த வீணையைப் பார்க்கும் போதெல்லாம் அவருடைய கண்டிப்பான உத்தரவு மனசை வருத்துகிறது'' என்று சொல்லிவிட்டு மீனாக்ஷி ஆரம்பித்தாள்.

* * * *

எனக்குக் கல்யாணம் ஆனபோது வயது பதினொன்று. என் தகப்பனார் சங்கீதத்துக்குப் பேர்போன தஞ்சாவூர் ஜில்லாவில் பிறந்தவர். சிறுவயதாக இருந்தபோதே வீணைச் சதாசிவையரை அவருக்குப் பரிசயமாம். அந்தக் காலத்திலேயே வீணையின் நாதத்துக்குத் தன் மனசைப் பறிகொடுத்தார். குடும்பபாரத்தினால் சங்கீதத்தை விட்டு விட்டு உத்தியோக வழியில் புகுந்தார். அவருக்குச் சீமந்த புத்திரியாக நான் பிறந்தவுடன் தம்முடைய வெகு நாளைய ஆவல் நிறைவேறும் என்று ஆனந்தப்பட்டாராம். ஏழு வயது முடியும்போதே தகுந்த வீணை வித்துவான் ஒருவரிடம் எனக்கு வீணை கற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். பரம்பரையில் கடாக்ஷத்தாலும் என் தகப்பனாரின் ஊக்கத்தினாலும் வீணையில் கீர்த்தனங்கள் நன்றாக வாசிக்க நான்கு வருஷங்களுக்குள் திறமை ஏற்பட்டது. என் புக்ககத்துக்காரர் நான் வீணை வாசிக்கும் அழகைப் பார்த்து ஆசைப்பட்டே என்னை அவர்கள் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணிக்கொண்டார்கள். கல்யாணத்தில் நலங்கு, ஊஞ்சலின் போது என் கணவர் தம் தங்கையிடம் ஜாடையாகப் பல கீர்த்தனங்களின் பெயரைச் சொல்லி என்னை வாசிக்கச் செய்தார். என் நாத்தனார் ராஜமும் வீணை வாசிப்பாள். என்னைவிட ஒரு வயது சிறியவளாக இருப்பாள். நான் வாசிக்க ஆரம்பித்தது முதல் அவள் என்ன காரணத்தினாலோ கல்யாணத்தில் வாசிக்கவில்லை. இரண்டொருவர் சொல்லியும் சிரித்து மழுப்பிவிட்டாள். எனக்கு மட்டும் அவள் வாசிப்பைக் கேட்கவேண்டுமென்று ரொம்ப ஆசையாக இருந்தது. 'ராஜம்! ஒரு பாட்டு வாசியேன்' என்று நான் அவளைச் சந்தித்தபோதெல்லாம் கேட்டேன்.

''வாசித்தால் போகிறது மன்னி. நீதான் அடுத்த மாசம் ஊருக்கு வரப்போகிறாயே'' என்று கூறினாள் ராஜம்.

"அதற்குப் பிறகு நான் புக்ககம் போகும் வரையில் பல தடவை ராஜத்தைக் கேட்டும் அவள் வாசிக்கவில்லை.

"வீணை வாசிப்பைக் கேட்பதற்கென்று என் கணவர் தம் தகப்பனுருக்குத் தெரியாமல் எங்கள் வீட்டுக்கு வந்து போவார். வந்தால் மணிக்கணக்கில் வாசித்தால்கூட அவருக்கு அலுப்பு ஏற்படாது. இரவுச் சாப்பாட்டுக்கு அப்புறம் மேல்மாடியில் உட்காருவோம். என் தகப்பனுரும் கூட இருப்பார். 'நான் ஆசைப்பட்டது நிறைவேறிவிட்டது அப்பா. இனிமேல் இந்த வித்தை சீர்குலையாமல் நீதான் பார்த்துக் கொள்ளவேணும்' என்று அவர் மாப்பிள்ளையிடம் கூறுவார்.

"அப்பொழுது என் கணவர், 'இதற்காக ஏன் கவலைப் படுகிறீர்கள்? ராஜத்தோடு மீனுக்ஷியும் கற்றுக் கொள்ளட்டுமே. வித்தைக்கு எல்லை உண்டா என்ன?' என்று சொல்லிக்கொண்டே என்னை அன்புடன் பார்ப்பார். நிலவு பொழியும் பல இரவுகளில் பன்னிரண்டு வயதுச் சிறுமியாகிய என்னைத் தன் தூய மனத்துடன், 'மீனுக்ஷி! வீணைத் தந்திகளை மீட்டி இன்ப நாதத்தை எழுப்பும் உன் விரல்களுக்கு என்ன பரிசு கொடுப்பது?' என்று ஆசையுடன் கூறிய கணவரின் வார்த்தைகளால் நான் உள்ளக் கிளர்ச்சி அடையவில்லை. அதற்கு வேண்டிய வயதும் வரவில்லை. ராஜம் என்னைவிட உயர்வாக வாசிப்பதால்தான் என் எதிரில் வாசிக்கவில்லை; புக்ககத்தில் அவள் எதிரில் எப்படி வாசிப்பது?' என்கிற பிரச்னைதான் என் மனசை வாட்டிக்கொண்டிருந்தது.

"என் சங்கீதத்தில் மனசைப் பறிகொடுத்த கணவர், நான் எப்பொழுது புக்ககம் வருவேன் என்று காத்திருந்ததாக முதல் நாள் இரவே என்னிடம் கூறினுர். அப்பொழுது எனக்கு வயது பதினைந்து, நான் வந்த அன்றையிலிருந்து ராஜம் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக்கொண்டிருந்தாள். ஊரில் இருப்பவர்கள் ஏற்கனவே என்னுடைய சங்கீதத் திறமையைப்பற்றிக் கேள்விப்பட்

இருந்தார்கள். புது நாட்டுப்பெண்ணைப் பார்க்கும் சாக்கை வைத்துக் கொண்டு அந்த ஊரார் என் பாட்டைக் கேட்க வந்தார்கள்.

"புக்ககம் வந்து பதினைந்து நாட்கள் வரையில் நான் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வீணை வாசிக்கும்படி நேரிட்டது. அப்பொழுதெல்லாம் ராஜத்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். கல்யாணத்தில் என்னுடன் கலகலப்பாகப் பேசியவள் அவள் வீட்டுக்கு நான் வந்ததும், அடியோடு பேசுவதை நிறுத்திக்கொண்டாள். மாமியார் இல்லாத வீட்டில் பேசத் துணையின்றி நான் சங்கடப்பட்டேன்.

"இதற்கிடையில் ஊருக்குப் போயிருந்த ராஜத்தின் வீணை வாத்தியார் வந்து சேர்ந்தார். கல்யாண விசாரிப்பு எல்லாம் ஆனபோது என் மாமனார், 'என் நாட்டுப் பெண் ரொம்ப நன்றாக வீணை வாசிப்பாள். இன்னும் அவளுக்கு ஏதாவது தெரியாமல் இருந்தால் சொல்லிக் கொடுங்கள்' என்று அவரிடம் கூறினார். அன்றையிலிருந்து ராஜமும் நானும் பாடம் சொல்லிக்கொள்ள ஆரம்பித்தோம்,

"'மன்னியின் எதிரில் வாசிக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது ஸார்' என்று ராஜம் பிடிவாதம் பிடித்தாள்.

"'வெட்கம் என்ன அம்மா? பழகப் பழக நீயும் அந்த மாதிரி வாசிக்கப் போகிறாய்' என்றார் வாத்தியார்.

"இருந்தபோதிலும் சில நாட்களில் ராஜம் தனக்கு உடம்பு சரியில்லை என்று பாட்டுச் சொல்லிக்கொள்ள வரமாட்டாள். இதைப் பார்த்தபோது, 'வேண்டுமானால் பாட்டை நிறுத்திவிடலாமா?' என்று எனக்குத் தோன்றும்.

"அன்று விஜயதசமி. முதல் நாள் பூஜையில் அலங்காரத்துடன் வைக்கப்பட்டிருந்த இரண்டு வீணைகளையும் எடுத்து வைத்துக்கொண்டு இருவரும் வாசிக்க ஆரம்பித்

தோம். வாத்தியாரும் மாமனாரும் உட்கார்ந்திருந்தார்கள். என் கணவரும் ஒரு பக்கமாக உட்கார்ந்திருந்தார்.

"புதுக் கீர்த்தனை ஒன்று ஆரம்பிக்கிறேன்" என்று வாத்தியார் கல்யாணி ராகக் கீர்த்தனம் ஒன்றை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இரண்டொரு தரம் ராஜம் அபஸ்வரமாக வாசித்ததைப் பொறுமையுடன் கண்டித்தார். மேலும் அவள் அவ்வாறு வாசிக்கவே, 'என்ன அம்மா இது? நாலு வருஷமாகக் கல்யாணி ராகத்தில் எவ்வளவோ கீர்த்தனங்கள் சொல்லிக்கொடுத்திருக்கிறேன். கவனித்து வாசிக்கக் கூடாதா?' என்று கடிந்து கொண்டார்.

"ராஜத்தின் கண்களில் சரசர வென்று நீர் பெருகிற்று. 'அதற்குத்தான் ஸார் சொன்னேன்; மன்னியைப்போல் எனக்கு வாசிக்கத் தெரியாது என்று. நான் இனிமேல் உங்களிடம் சொல்லிக்கொள்ளவில்லை. நீங்களும் என்னை அலக்ஷ்யம் செய்ய வேண்டாம்' என்று சொல்லிவிட்டு விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள்.

"'அடேயப்பா! என்ன கோபம் வருகிறது? மன்னி மாதிரி நீயும் வாசிப்பதுதானே?' என்றார் வாத்தியார். ராஜம் தொப் பென்று வீணையைப் போட்டுவிட்டு உள்ளே போனாள்.

"என் மாமனாரின் முகம் சிவந்துவிட்டது.

"'இந்தா மீனாக்ஷி! உன் வீணையைக் கொண்டுபோய்ப் பெட்டியில் வை. இந்த வீட்டிலே நீ வீணை வாசிக்கக் கூடாது தெரியுமா?' என்றார் அவர்.

"என் கணவர் திடுக்கிட்டு என்னைப் பார்த்தார்.

"'நான் அப்படி ஒன்றும் தவறாகச் சொல்லிவிடவில்லையே. குழந்தைக்கு நல்லதைத்தானே சொன்னேன்?' என்று விநயமாக கேட்டார் வாத்தியார்.

"'போரும் ஐயா? போய்விட்டு வாருங்கள்' என்றார் மாமனார். என் கணவர் மாடிக்கு விடுவிடு என்று போய் விட்டார்.

"வீணையைப் பெட்டியில் வைத்துவிட்டு ராஜத்தைப் போய்ப் பார்த்தேன். அவள் முகத்தில் என்றும் இல்லாத அமைதி நிலவியது."

*  *  *  *

மீனாக்ஷி கதையை முடித்தாள். வீணைக்கு மாமாவிடம் சொல்வதாகவும் கூறினாள். விஜயதசமி அன்று வீணை வந்து சேர்ந்தது. மீனாக்ஷியே சரளி வரிசை கிரிஜாவுக்கு ஆரம்பித்து வைத்தாள். அதில் எனக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது.

# 12

## பார்வதி

அதிகாலையில் சமையல் அறையில் டம்ளர்களின் சத்தமும், பரபரவென்று ஆள் நடமாடும் சத்தமும் கேட்க ஆரம்பித்தால் பார்வதி வேலை செய்கிறாள் என்பதை அறிந்துகொள்ளலாம். பார்வதி எங்கள் வீட்டுக் காரியக்காரி. பெயர்தான் பெரிதாக இருக்கிறதே தவிர வயது ஒன்றும் அதிகமாக ஆகிவிடவில்லை: பன்னிரண்டு தான். என் மனைவி கல்யாணி. அவள் பிறந்தகத்திலிருந்து ஒத்தாசைக்காக அவளை அழைத்துவந்திருந்தாள். தாயார், தகப்பனார் இரண்டு பேரும் அற்ற அனாதை. ஆள் அதிக நடமாட்டமில்லாத மருதன்பட்டி ரெயில்வே ஸ்டேஷனுக்கு என்னை ஒரு வருஷத்துக்கு மாற்றி இருந்தார்கள். மாற்றல் உத்தரவு வந்தபோது கல்யாணி பிரசவிப்பதற்காகப் பிறந்தகம் போயிருந்தாள். அவளுக்கு இந்த விஷயம் கடிதமூலமாகத் தெரிந்தபோது மிகவும் வருத்தப்பட்டு எனக்குப் பதில் எழுதியிருந்தாள். 'பிறந்த குழந்தையும் இறந்துவிட்டது. உங்களுக்கு மாற்றலாகி இருக்கும் ஊரும் லக்ஷணமாக இருக்கிறது. யாரும் இல்லாமல் தன்னந்தனியாக நான் மருதன்பட்டிக்கு வரவில்லை. இந்த ஒரு வருஷமும் இங்கேயே இருந்து விடுகிறேன்' என்பதுதான் கடிதத்தில் கண்டிருந்த விஷயம். கல்யாணியின் அபிப்பிராயத்துக்கு விட்டுக்கொடுக்க எண்ணி வேலையில் சேருவதற்குமுன் மருதன்பட்டிக்கு ஒரு தடவை போயிருந்தேன்.

ரெயில்வே ஸ்டேஷனைச் சுற்றி ஒரே மலைக்காடு. குன்றுகள் தெரியாமல் மூடி இருக்கும் மரங்களில் கட்டியிருக்கும் தேனைச் சேகரிக்கும்பொருட்டுக் குறவர்கள் மலை அடிவாரங்களில் மாரி காலங்களில்தவிர எப்பொழுதும் கூடி இருப்பார்கள். சந்தனக் கட்டைகள் சேகரிக்கும் தொழிலும் அவர்களுடையதுதான். ஊரைச்

சுற்றி ஒரே நிசப்தம். உலக யுத்தம், போட்டி, பஞ்சம் இவைகளைவிட்டுத் தனியே விலகி நின்ற ஊர் மருதன்பட்டி. என்னிடம் 'சார்ஜ்' ஒப்பிக்கக் காத்துக்கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டர் நாற்பது வயதுக்கு மேலானவர். மனைவி இறந்து பத்து வருஷங்கள் ஆகிவிட்டன. ஒரே ஒரு பிள்ளை. வடக்கே எங்கோ வேலையாக இருந்தான். வயிற்றுப் பிழைப்புக்காக வேலை செய்யவேண்டும் என்பது அவர் விஷயத்தில் இல்லை. பிள்ளை கையை எதிர்பாராமல் சுதந்தரமாகச் செலவழிப்பதற்காகவே அந்த உத்தியோகத்தில் அவர் இருந்தார் என்று சொல்லிவிடலாம். ஒவ்வொரு புதன்கிழமையும் சந்தை கூடும்போது தண்ணீர்ப் பந்தல் அமைத்து நீர்மோரும் குடிநீரும் ஏழை ஜனங்களுக்கு அளித்து வந்தார். முதல் முதலில் அவரைச் சந்தித்தபோது, "நிம்மதியாக இருந்தீர்கள் ஸார். மாற்றித் தொலைத்துவிட்டான். உங்களைப் போல் சிறுபிள்ளைகளுக்கு ஏற்ற இடம் இல்லை ஸார் இது. ஸினிமா இல்லாமல் பொழுது போகாதே உங்களுக்கு" என்றார் அவர்.

"என்னைப்பற்றிக்கூட இல்லை ஸார். என் மனைவிக்குக் கூட்டோடு பிடிக்காதே என்றுதான் பார்க்கிறேன்" என்றேன் நான்.

"அதைத்தான் நானும் சொல்கிறேன். நீங்களானால் என்ன? மனைவியானால் என்ன? ஒருவரை ஒருவர் பிரிந்து எத்தனை காலம் இருப்பது?" என்றார்.

அப்பொழுது அவர் குரல் கம்மிப் போயிற்று. கண்களில் நீர் துளும்பி நின்றது. மனைவியை நிரந்தரமாகப் பிரிந்து கஷ்டப்பட்டவருக்கல்லவா அதன் கஷ்டம் தெரியும்?

மருதன்பட்டியைப் பார்த்தபிறகு வாரத்திற்கு ஒரு ஸினிமாவாவது பார்க்கத் தவறாத கல்யாணியை எப்படி அங்கே அழைத்துவருவது என்பதே பெரிய பிரச்னை ஆகிவிட்டது. அதற்குள் அவளிடமிருந்து வந்த கடிதத்தில், தான் மருதன் பட்டிக்கு வருவதாகவும், கூடத் துணைக்கு ஒரு அறுதைப் பெண்ணை அழைத்து வருவதாகவும் எழுதியிருந்தாள். அதோடு பிரசவத்துக்கு அப்புறம்

உடம்பு மிகவும் பலஹீனமாக இருப்பதால் வேலை செய்யவும் அந்தப் பெண் உதவியாக இருப்பாள் என்றும் எழுதியிருந்தாள்.

மனத்திலிருந்த பெரிய சுமை நீங்கியது. ஒரு நாள் விடியற்காலம் வந்த மெயிலில் கல்யாணியும், பார்வதியும் வந்து இறங்கினார்கள். குழந்தை இறந்துபோன துக்கம் அவள் மனத்தை விட்டு நீங்கிவிட்டதாகத் தெரியவில்லை. "என்ன பண்ணுவது? நாம் கொடுத்து வைக்கவில்லை. மூக்கும், முழியுமாய் உங்களையே உரித்து வைத்திருந்தது" என்று ஸ்டேஷனிலேயே குறைப்பட்டுக் கொண்டாள். அவள் பக்கத்தில் நின்றிருந்த பெண்ணும், 'ஹாம்' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே என் முகத்தைப் பார்த்தாள்.

"இவளைப் பற்றித்தானே எழுதியிருந்தாய்?" என்று கேட்டேன் கல்யாணியிடம்.

"ஆமாம்; பார்வதி இல்லாவிட்டால் நான் இங்கே வந்தே இருக்கமாட்டேன். அப்பாகூட இந்த ஊரில் இருபது வருஷங்களுக்குமுன் உத்தியோகம் பண்ணி இருக்கிறாராம். 'அது ஊரில்லை அம்மா, காடு' என்று ரெயில் ஏறும்வரைக்கும் சொல்லிக்கொண்டிருந்தார்" என்றாள் கல்யாணி.

அவள் குற்றச்சாட்டைப் பொறுக்காமலோ என்னவோ காற்று ஒருதரம் சடசடவென்று வீசி நின்றது. ரெயில்வே ஸ்டேஷனில் வரிசையாக நின்ற சரக் கொன்றை மரங்கள் சடசடவென்று பனித்துளிகளை உதறின. அத்துடன் தேன் கலந்திருந்த ரகசியம் வண்டுகளுக்கு மாத்திரந்தான் தெரிந்திருக்க நியாயம். ஏனெனில், அவை உய்ய் என்ற ராகத்துடன் மரத்தடியைச் சுற்றின.

மெயில் இரண்டு ஸ்டேஷன்கள் தாண்டிப் போகும் மட்டும் நாங்கள் ஸ்டேஷனிலேயே இருந்திருக்க வேண்டும். அதிகாலை ஆறு மணிக்கு ரெயிலைவிட்டு இறங்கியவர்களை ஏழரை மணிக்குத்தான் வீட்டுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தேன். ரெயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே நின்று பார்த்தால் இரு புறமும்

சந்தன மரங்களின் வரிசைகளுக்கு நடுவில் அழகான சிறு வீடு ஒன்று தெரியும். அதன் முன்புறத்தில் எனக்கு முன்பு இருந்தவர் நித்தியமல்லிகைக் கொடி ஒன்றையும் ரோஜாச் செடிகளையும் வைத்துப் பயிராக்கி இருந்தார். நல்ல பூமி; ஆதலால் செடிகள் மதமதவென்று வளர்ந்து பூத்துக் குலுங்கின.

பார்வதியும், கல்யாணியும் வீட்டை அழகுபடுத்தினார்கள். ஹாலில் ஒரு பெரிய மகானின் படத்தை மாட்டினார்கள். துர்க்காற்று, பேய் முதலியவை உள்ளே வராமல் அவர் காப்பாற்றுவார் என்று நம்பினார்கள். கல்யாணி ஒழிந்த வேளைகளில் எதையாவது படித்துக்கொண்டு பொழுதைப் போக்கிவிடுவாள். அந்தச் சமயங்களில் வீட்டில் வேலை செய்யும் காடனுடன் வேடிக்கையான பேச்சில் இறங்குவாள் பார்வதி. காடன் ஜாதியில் குறவன். வருஷத்தில் மழைக்காலத்தில் வேலை செய்ய என்னிடம் வருவான். மீதி நாட்களில் அவன் ஜாதித் தொழில் அவனை இழுத்துப் போய்விடும்.

காடனுடன் பார்வதி சிரித்து விளையாடுவது கல்யாணிக்குப் பிடிக்கவில்லை. "அந்தக் குறவனோடு என்னடி விளையாட்டு?" என்று அவளைக் கடிந்துவந்தாள். பார்வதி அதிகாலையில் எழுந்துவிடுவாள். காபிபோட்டு வைத்துவிட்டுக் கல்யாணியை எழுப்புவாள்.

"அக்கா, காப்பி ஆறிவிடும். நான் குளிக்கப் போகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கொல்லைக் கிணற்றடிக்குப் போவாள். இப்படி மூன்று நான்கு மாதங்கள் வரையில் எங்கள் வீட்டில் பார்வதியால் நாங்கள் மிகவும் சந்தோஷமாகவே இருந்தோம். காடனுடன் அவளுடைய நட்பு அதிகமான பிறகு பார்வதியின் போக்கு விசித்திரமாக மாறத் தொடங்கியது.

* * * *

அன்று தை வெள்ளிக்கிழமை. வழக்கம்போல் காபியைப் போட்டுவைத்துவிட்டு, "அக்கா!" என்று பார்வதி கல்யாணியைக் கூப்பிட்டாள்.

"குளிக்கத்தானே போகிறாய்? போய்விட்டு வா" என்று உத்தரவிட்டாள் கல்யாணி.

"எண்ணெய் தேய்த்துக்கொள்ளப் போகிறேன் அக்கா. மலைக்குகையில் அருவி இருக்கிறதாம். அங்கே போய்க் குளித்துவிட்டு வருகிறேன்."

"வேலை இல்லையா உனக்கு? பாறை ஜலத்தில் ஸ்நானம் செய்துவிட்டுப் படுத்துக்கொள்ளாதே. இதையெல்லாம் உனக்கு யார் கலகம் பண்ணுகிறார்கள்? போடீ பைத்தியமே" என்று அதட்டிவிட்டுக் கல்யாணி சமையல் அறைக்குள் சென்றாள். பார்வதி சிறிது நேரம் யோசித்தாள், பிறகு சமையல் அறயை ஒரு பார்வை பார்த்துவிட்டு மான் வேகத்தில் சந்தன மரத்தூடே ஓடி மறைந்தாள்.

"நீ வேண்டாமென்று சொன்னாயே. பார்த்தாயா? அந்தப் பெண் ஓடிவிட்டது" என்று நான் கல்யாணியிடம் சொன்னேன்.

"வரட்டும் சனியன்! பிய்த்துக் கட்டி விடுகிறேன்" என்றாள் கல்யாணி. மலை அருவியில் ஸ்நானம் செய்துவிட்டு ஒரு கன்னித் தெய்வம் மாதிரி அள்ளி முடிந்த கூந்தலுடன் பார்வதி வீட்டுக்கு வந்தபோது மணி ஒன்பது. கல்யாணியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"ஏ அனாதைப் பிணமே! ஊரிலிருந்து அழைத்து வந்ததற்கு நல்ல பெயரைக் கொண்டுவந்து விட்டாய். போகவேண்டாம் என்று சொன்னதைக் கேட்காமல் ஏன் போனாய்?" என்று இரைந்தாள் கல்யாணி.

"மலை அருவி குளுகுளுவென்று இருக்கு அக்கா!" என்று பார்வதி சம்பந்தம் இல்லாமல் பதில் சொன்னதைக் கேட்டுக் கல்யாணி பற்களை நறநறவென்று கடித்தாள்.

தினம் தவறாமல் பார்வதி மலை அருவிக்குப் போவது வழக்கமாகிவிட்டது. நீரில் குடைந்து ஸ்நானம் செய்துவிட்டு வந்த அந்த இன்பத்தை அவள் எங்கள் இருவரிடமும் விவரிப்பாள். மலை அருவிக்கு அருகில் வாசம் செய்யும் கன்னித் தெய்வத்தைப் பற்றி

யும். ஸ்நானம் செய்யும்போது எழும் சுகந்தத்தைப் பற்றியும் அவள் கூறும்போது எங்கள் தேகம் சிலிர்க்கும். 'அந்தப் பரிமளத்தைப் புண்ணியம் செய்தவர்களால்தான் நுகர முடியும்' என்று காடன் அடிக்கடி சொல்லி இருக்கிறான். மலை அருவியைப் பற்றிப் பார்வதி கதை சொல்லும்போது கல்யாணி மெய்ம்மறந்து பரவசமாகக் கேட்பாள்.

"போதுமடி பெண்ணே! நீ அங்கே போகவேண்டாம். வயசுப் பெண்ணான் உனக்கு அங்கே என்ன வேலை?" என்று கல்யாணி கூறுவாள்.

பார்வதி எங்கள் தனிமையைப் போக்க வரவில்லை. அவள் மனத்துக்கு ஏதோ இன்பத்தைத் தேடிக்கொள்ள வந்திருந்தாள். பதினைந்து வயதுப் பெண்ணாக இருந்தாலும் அவளிடம் தெய்வபக்தி குடிகொண்டிருந்தது.

* * * *

பொதுவாகத்தில் மழைக்காலம்மட்டும் எங்களிடம் வேலை செய்யும் காடன் பார்வதி வந்தபிறகு வருஷம் பூராவுமே தங்கினான். இளவேனில் காலத்தில் இன்னிசையுடன் பாடி மகிழ்ந்து குதித்து ஓடியது மலை அருவி. காடனும் அவன் சுற்றத்தாரும் பார்வதியைக் கன்னித் தெய்வமாகவே மதித்துவந்தார்கள். இளவேனில் மறைந்து கடுங்கோடை வந்ததும் மலைமேல் ஏறுவதற்குக் குறவர்கள் கன்னித் தெய்வத்துக்குப் பூசைபோட்டார்கள்.

அன்று பார்வதி வழக்கம்போல் வீட்டு வேலைகளைச் செய்தாள். அக்காவை எழுப்பினாள். கன்னித் தெய்வத்துக்கு ரோஜாமாலை கட்டி எடுத்துக்கொண்டாள்.

"காடன் வீட்டார் பூசை போடுகிறார்களாம்; பார்த்துவிட்டு வருகிறேன் அக்கா" என்றாள் கல்யாணியிடம்.

என்றும் இல்லாமல் என் மனம் சுரீரென்று வேதனைப் பட்டது.

"கல்யாணி! இது என்ன பைத்தியக்காரத்தனம்? ஏதோ படிப்புவாசனை இல்லாத ஜனங்கள் எதையாவது

செய்தால் நீயும் இடம் கொடுக்கிறாயே" என்றேன் கல்யாணியிடம்.

"நான் என்ன பண்ணுவது? அடுத்த மாசம் ஊரில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்துவிடுகிறேன்."

பார்வதியின் முகம் வாடிவிட்டது. ஆனால், ஏதோ மந்திர சக்தியால் தூண்டப்பட்டவளைப்போல் மெதுவாகச் சந்தனமரங்களினூடே சென்றாள் பார்வதி. என் மனம் கேட்கவில்லை. அவளை அறியாமல் மலை அருவியை அடைந்து அதன் பாறையின் மறைவில் உட்கார்ந்தேன். காடன் குடும்பத்தார் கூட்டமாக வந்திருந்தார்கள். தேனும், தினைமாவும், மான் இறைச்சியும், காட்டு மலர்களும் குவிந்திருந்தன.

பார்வதி ஸ்நானம் செய்து முடித்தாள். தன் மஞ்சள் குங்குமப் பெட்டியிலிருந்து குங்குமம் இட்டுக் கொண்டாள். அழகிய கண்களால் ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டு, "காடா!" என்று மலை கிடுகிடுக்கும்படி கத்தினாள்.

கூட்டத்தில் ஒருவன் சிலம்பு போட ஆரம்பித்தான்.

"ஏன் தாயே?"

"நான் வந்திருக்கிறேன்."

"அம்மா!"

"கொண்டு போகிறேன்."

"அம்மா, தாயே!"

"பேசாதே!" - பார்வதி பயங்கரமாக விழித்தாள்.

"உங்கள் மந்திர தந்திரங்களால் பிராமணப் பெண்ணை வஞ்சித்துவிட்டீர்கள். தஞ்சாவூரிலிருந்து வந்த இரண்டு மாதங்களுக்கெல்லாம் அவளைக் குறத்தியாக்கி விட்டீர்கள். இனிமேல் அவளை இங்கே விடமாட்டேன்."

"ஐயையோ தாயே!" என்றான் பூசாரி.

பார்வதி தடாரென்று விழுந்தாள். மூக்கிலும் வாயிலும் ரத்தம் கசிந்தது.

“அடே பாவி!” என்று கத்திக்கொண்டே நான் ஓடினேன். பார்வதி பிணமாகக் கிடந்தாள். பிணத்தைச் சோதித்த டாக்டர் மாரடைப்பு என்றார். காடன் வமிசத்தார் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு ஜெயிலுக்குப் போனார்கள்.

*    *    *

பல வருஷங்களுக்குப் பிறகு போன வருஷம் மருதன் பட்டிக்குப் போனேன். மலை அருவியைப் பார்க்கப் போயிருந்தேன். அங்கே அருவி இல்லை! பாசி படிந்த சிறிய குளம் ஒன்று இருந்தது. அதற்குப் பார்வதி குளம் என்று பெயர் வழங்குகிறதாம். கல்யாணமாகாத பெண்கள் யாரும் அங்கே வருவதில்லையாம்.

என்னவோ சொல்லுகிறார்கள். பழைய கதைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

# 13

## மூன்று உள்ளங்கள்

அதிகாலை. ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாத நேரம். நாட்டுப் பெண்ணும் பிள்ளையும் 'டாக்சி' யில் வந்து இறங்கினார்கள். வாலாம்பாள் லொக் லொக் என்று இருமிக்கொண்டே கதவைத் திறந்துவிட்டுச் சற்று ஒதுங்கி நின்றாள். தெருக் கூட்டுகிற வள்ளியம்மை, கோல மாவுத் தகரத்தை நகர்த்தி வைத்துவிட்டுச் சின்ன எஜமானியைக் கவனிப்பதில் முனைந்திருந்தாள். இருபது வருஷங்களாகக் களை இழந்துகிடந்த அந்தப் பங்களா அன்று புது அழகு பெற்று விளங்கியது. வாசலில் மாவிலைத் தோரணம் கட்டி, கட்டுக் கட்டாகக் கோலம் போட்டுச் செம்மண் இட்டிருந்தாள் வள்ளியம்மை. அவள் சின்ன ராஜா - அந்த வீட்டுப் பிள்ளைக்கு அவள் வைத்திருந்த செல்லப் பெயர் - நான்கு வயதுப் பையனாக இருந்ததிலிருந்து வேலை செய்து வருபவள் அவள். அந்தச் சின்ன ராஜாவுக்குக் கல்யாணமாகி மனைவியுடன் வருகிறான் என்பது அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது.

நாகராஜன் மனைவி சுசீலா பரந்த நோக்கமுடையவள். படிப்பினால் கர்வம் அடையாமல், குடும்ப வழக்கங்களையும் பழகியிருந்தாள். மாமியாரிடம் நாட்டுப் பெண்ணால் நல்ல பெயர் வாங்கமுடியாது என்கிற எண்ணத்தை மாற்ற முடியும் என்று கல்யாணம் நடப்பதற்கு முன்பு நினைத்திருந்தாள். அந்த வீட்டில் முதல் முதல் நுழைந்தவுடன் வாலாம்பாளின் தீக்ஷண்யமான பார்வை ஒரு கணம் சுசீலாவைத் திகைக்க வைத்தது. கூடத்தில் சென்றதும், சுசீலா பயபக்தியுடன் வாலாம்பாளுக்கு நமஸ்காரம் செய்தாள்.

"மகராஜியாக இரு" என்று கரகரத்த தொண்டையில் வார்த்தைகள் தெளிவாக வராமல் தடுமாறின.

"இன்னொரு ஆசீர்வாதம் செய்ய மறந்து விட்டாயே, அம்மா! பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழச் சொல்லவில்லையே?" என்று கேட்டுவிட்டு நாகராஜன் ஆவல் ததும்பும் கண்களுடன் சுசீலாவைப் பார்த்தான். சுசீலா மாமியாரைப் பார்த்தாள். மறுபடியும், சுட்டெரித்து விடுவது போன்ற அந்தப் பார்வை! தன் கண்களை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள் சுசீலா.

"போதும், அம்மா! இன்றோடு என் பொறுப்புத் தீர்ந்துவிட்டது. பழுதாயிற்றே என்று இன்றைப் பாட்டை நான் பார்த்துக் கொண்டுவிடுகிறேன். நாளையிலிருந்து வீட்டுப் பொறுப்பெல்லாம் உன்னுடையது. இருபது வருஷமாக - உன் மாமனார் போனதிலிருந்து - நாகராஜனையும் காப்பாற்றி, இந்தக் குடும்ப பாரத்தையும் வகித்து, இந்த இருமல் வியாதியோடும் இரவு பகலாக ஈடு கொடுத்து, மனம் ஒடிந்து போயிருக்கிறது, அம்மா. இனிமேல், உன் கையில் விட்டுவிட்டேன்" என்றாள் வாலாம்பாள் நாட்டுப்பெண்ணைப் பார்த்து.

"ஆமாம் அம்மா! தள்ளாத காலத்தில் அது எவ்வளவு நாளைக்கு உழைக்கும்?" என்று பரிந்து பேசினாள் வள்ளியம்மை.

சுசீலா ஒரு புன்னகையுடன், மாமியாரின் உத்தரவை ஏற்றுக்கொண்டாள்.

வாலாம்பாள் மறுபடியும் தன் கரகரத்த தொண்டையில் ஆரம்பித்தாள் :

"இந்த வாசல் ரேழி அறை என்னுடையது. இந்தா, வீட்டுச்சாவி!" என்று சொல்லிச் சுசீலாவிடம் சாவிக் கொத்தைக் கொடுத்தாள்.

"வாங்கிக்கொள் அம்மா" என்றாள் வள்ளியம்மை.

ஊரிலிருந்து வந்ததும் இவ்விதம் பிரமாதமாகத் தனக்கு வரவேற்புக் கிடைக்குமென்று சுசீலா எதிர்பார்க்கவில்லை. சாவிக்கொத்தில் எந்த எந்த அறைகளின் சாவிகள் இருக்கின்றன என்றே அவளுக்குத் தெரியாது. இருந்தாலும், மரியாதையாகச் சாவிக் கொத்தை வாங்கிக் கொண்டாள். வாலாம்பாள் முகத்தில் திருப்தி நிறைந்த

பொருமை படர்ந்தது. இவ்வளவு காலமாக வகித்துவந்த பெரிய பொறுப்புப் போய்விட்டதே என்கிற எண்ணம் பொருமைக்குக் காரணமாக இருக்கலாம்; குடும்பத் தொல்லை விட்டதே என்று திருப்தியும் ஏற்பட்டிருக்க லாம்.

சுசீலா அந்த வீட்டுக்குள் நுழைந்து ஒரு நாள் ஆயிற்று. அடுத்த நாள் எழுந்திருந்தபோது மணி ஆறரைக்குமேல் ஆகிவிட்டது. சமையல் அறையில் சந்தடி எதுவும் இல்லை. வள்ளியம்மைமட்டும் காபிப் பாத்திரங்களைப் பளபளவென்று தேய்த்து வைத்திருந்தாள். வாலாம்பாள், வார்த்தையில் சொன்னதைக் காரியத்தி லும் நிறைவேற்றிவிட்டாள். சுசீலா, மெதுவாக ரேழி அறைக்குள் எட்டிப் பார்த்தாள். பச்சைக் கம்பளியை இழுத்துப் போர்த்துக்கொண்டு வாலாம்பாள் நிம்மதியாகத் தூங்கிக்கொண் டிருந்தாள். சமையல் அறைக்குள் நுழைந்த சுசீலாவுக்கு எல்லாம் புதிதாக இருந் தன. காபிப்பொடி, சர்க்கரை முதலியவற்றைத் தேடி எடுப்பதற்குள் அரை மணி நேரம் ஆகிவிட்டது. காபியை எடுத்துக் கொண்டு வாலாம்பாள் அறைக்குள் நுழைந்த போது, அவள் அரைத் தூக்கத்தில் இருந்தாள்.

"அம்மா!" என்று ஒருதரம் கூப்பிட்டாள்.

"எழுந்து விட்டாயா? மணி ஏழு இருக்குமா?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து உட்கார்ந்தாள். சுசீலாவுக்கும் வயதான ஒரு பாட்டி இருந்தாள். அவள் விடியற்காலமே எழுந்து ஸ்னானம், ஜபம், தபம் இவைகளை முடித்துக்கொண்டு, மாட்டுப்பெண்ணுக்குக் - சுசீலாவின் தாயாருக்கு - கறிகாய் நறுக்கிக் கொடுப் பதைச் சுசீலா பார்த்திருக்கிருள். ஆனால், இம்மா திரி வீட்டுக்குள் ஒரு சிறு பெண் நுழைந்ததும், குடும்பப் பொறுப்பு அவ்வளவையும் அவள் தலையில் போட்டுவிட்டு ஏழு மணி வரையில் தூங்குகிற பழங்காலத்து மனுஷியும் இருக்கிருள் என்பது அவளுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

"என்ன சமைக்கிறது அம்மா?"

''விறகுமச்சின் கீழ் ஆணியில் கூடையில், பெரிய கத்திரிக்காய் வைத்திருக்கிறேன். அதை உப்பும், உறைப்புமாக எனக்குத் துவையல் செய்துவிடு. அப்புறம் உன் பாடு. அவனுக்குக் காரமே ஆகாது.''

சமையல் திறமை எல்லாவற்றையும் சிரமப்பட்டு உபயோகித்து, வாலாம்பாளிடம் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்று சுசீலா சிரமப்பட்டுத் துவையலைச் செய்திருந்தாள். வாலாம்பாள், சாப்பிட்டு முடிந்ததும், ''ஏண்டி அம்மா! உனக்குக் கத்தரிக்காய்த் துவையல் செய்து வழக்கமில்லையா?'' என்று கேட்டதும் சுசீலாவின் முகம் வாடிவிட்டது, தாயாருடன் சாப்பிட்டுக்கொண்டிருந்த நாகராஜன் அம்மாவையும், மனைவியையும் ஒரே சமயத்தில் மாறி மாறிக் கவனித்தான்.

''குழம்பு எப்படியடா இருக்கிறது?''

''நன்றாகத்தான் இருக்கிறது'' என்று சொல்லிச் சுசீலாவைப் பார்த்தான் நாகராஜன். அவள் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டிருந்தாள்.

''ஆமாம், வசனம் சொல்லுவார்களே, 'வேப்பிலைத் துவையலும்' என்று, அந்த மாதிரி, ஆம்படையாள் கையால் செய்தால் எல்லாம் அமுதமாகத்தான் இருக்கும்.''

முதல் அத்தியாயமாகச் சமையல் விஷயத்தில் பொருமை படர்ந்தது.

நாகராஜன் சிரித்துக்கொண்டே ஆபீஸ் அறைக்குள் நுழைந்தான்.

அன்று பௌர்ணமிக்கு முந்திய இரவு. சுசீலா அந்த வீட்டுக்குப் பழைய மனுஷியாகி விட்டாள். வேலைக்காரி வள்ளியம்மையிலிருந்து தோட்டக்கார ராமு வரையில் சின்ன எஜமானியிடம் விசுவாசமாக இருந்தார்கள். அவள் வந்ததிலிருந்து வீடு களையோடு இருப்பதாக ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். ஆனால், இவ்வளவு சுகங்களுக்கும் இடையில் சுசீலாவின் மனத்தில் வேதனை ஒன்று குமுறிக்கொண்டே இருந்தது. வாலாம்பாளின் தீக்ஷண்யமான பார்வையும், நடுநடுவே அவள் சொல்

லிவந்த வார்த்தைகளும் சுசீலாவை வேதனைப்படச் செய்தன.

குளுமையான நிலவிலே நாகராஜன் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான். சுசீலா கன்னத்தில் கை ஊன்றி, ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்ன யோசனை செய்கிறாய்?" என்று பேச்சை ஆரம்பித்தான் நாகராஜன்.

"ஒன்றும் இல்லை; மீதிக் காலத்தையும் இந்த வீட்டில் எப்படிக் கழிக்கப் போகிறேன் என்று கவலையாக இருக்கிறது" என்றாள் சுசீலா.

"அப்படி என்ன உனக்கு இங்கே கஷ்டம்? வீடு நிறைய வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். வள்ளியம்மை நான் குழந்தையாக இருந்த போதிலிருந்து இருக்கிறவள்."

"அதெல்லாம் இல்லை. உங்கள் அம்மா என்னைக் கண்ணாலேயே சுட்டு விடுகிறார். ரேழி அறையைக் கடந்து நான் வாசலுக்குப் போகும்போதெல்லாம் அவருடைய கடுமையான பார்வையை என்னால் சகிக்க முடியவில்லை." அவள் கண்கள் கலங்கிப் போயிருந்தன.

அவள் முகத்தை பார்த்ததும் அவன் பயந்து போனான்.

"சுசீ! என்ன இப்படி அசடாக இருக்கிறாய்?" வேறு ஒன்றும் கேட்க அவனுக்குத் தெரியவில்லை. அவள் மௌனமாக மாடிப் படியைத் திரும்பிப் பார்த்தாள். மாடிப் படியில் அந்த உருவம் நின்ற நிலை அவளைத் திடுக்கிட வைத்தது.

"அவர்!—உங்கள் அம்மா!... வந்திருக்கிறார்" என்று அவள் ஆரம்பித்ததும், வார்த்தைகள் நாக்கிலேயே ஒட்டிக் கொண்டன. அவன் மாடிப் படியைப் பார்த்தான்.

"என்ன அம்மா?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தான்.

"ஒன்றும் இல்லை—எல்லோரும் சதாரணமாகப் பீடிகையுடன் ஆரம்பிக்கும் வார்த்தை—மாரடைப்பது

போல் இருந்தது. நீ வந்து என் அறையில் படுத்துக் கொள்கிறாயா? அவள் வேணுமானால் இங்கே படுத்துக் கொள்ளட்டும்.''

''ஏன் நானும் வருகிறேனே'' என்றாள் சுசீலா. கணவனைத் தன்னிடமிருந்து பிரித்துவிட விரும்புகிறாள் என்று அவள் மனம் கூறிற்று.

''அசடு! நீ எதற்காகத் தூக்கத்தைக் கெடுத்துக் கொள்ளவேண்டும்? பேசாமல் இங்கேயே தூங்கு. இந்த மார்வலியில் பொழுது விடிவதற்குள் மூச்சு நின்றுவிட்டால் வீட்டுத் தஸ்தாவேஜுகளைப் பற்றி இன்று வரையில் தெரியாது. சொல்ல வேண்டும். நீ வேறு எதற்கு?''

குடும்ப விஷயத்தைத் தெரிந்துகொள்ளப் பிள்ளைக்குத்தான் பாத்தியதை. தனக்கு இல்லை! மாமியாரின் மனப்போக்குத்தான் எவ்வளவு விசித்திரமானது!

தாயாரின் பின்னால் நாகராஜன் சென்றான். சுசீலா, கோபமும் துக்கமும், நிறைந்தவளாய் அறையில் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டாள். வீட்டிலே வேலை செய்யத் தனக்குப் பாத்தியதை; சொத்து, சுதந்தரங்களைப் பற்றி அறிந்துகொள்ள உரிமை இல்லை.

இரவு தூங்கியபோது மணி மூன்று. அதற்குள், சந்தடி செய்யாமல் மூன்று தடவை கீழே போய்க் கதவு இடுக்கின் வழியாக மாமியாரின் அறையைக் கவனித்து விட்டு வந்தாள். வாலாம்பாள் அசையாமல் படுத்திருந்தாள். நாகராஜன், தன் அம்மாவின் கால்களை வருடிக் கொண்டே தூங்கி விழுந்தபடி இருந்தான்.

''மார் வலி என்று சாக்குச் சொல்லி, என்னிடமிருந்து பிரித்துவிட்டாள், பார்த்தாயா?'' இதே கேள்வியை மனம் திருப்பித் திருப்பிக் கேட்டது.

காலையில், நாகராஜன் முகம் வாடி இருந்தது. இரவெல்லாம் கண் விழித்ததால் கண்கள் குழி விழுந்து வெந்திருந்தன. சுசீலா அவனுடன் பேசவில்லை. பாதிச் சமையல் ஆகிக்கொண்டிருந்தபோது சமையலறைக்குள் நாகராஜன் வந்து உட்கார்ந்தான்.

"இன்றைக்கு லீவு போட்டு விட்டேன்" என்றான்.

"அம்மாவுக்குச் சிசுருஷை செய்வதற்காகவா?" என்று கேட்டாள் சுசீலா.

நாகராஜன் சிரித்து விட்டான்.

"மார்வலியும் இல்லை; ஒன்றும் இல்லை. என்னவோ வயசாகி விட்டாலே புத்தி தடுமாறி விடுகிறது."

"ஊஹூம்." இது. சுசீலாவின் பதில்.

"உனக்கு என்மேல் கோபம் தானே?"

"சே, சே. தன்னந்தனியாய் மாடியில் படுத்துக் கொள்ளச் சொல்லிவிட்டுக் கிழவிக்குத் துணை இருக்கப் போனால், எனக்குக் கோபம் வருவது நியாயமா?" என்று சற்றுப் பரிகாசமாகவே கேட்டாள் சுசீலா.

"நீ வந்ததிலிருந்து உன்னுடனேயே பேசுகிறேனாம். அவளுடன் பேசுவதில்லையாம். இதுதான் அவள் குறை!"

சுசீலாவுக்கு இந்த ஒரு வார்த்தையிலேயே மாமியாரின் குணம் புரிந்துவிட்டது. ஊரார் மெச்சப் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணினாளே தவிரத் தன்னைக் கண்டால் அவளுக்குப் பிடிக்கவில்லை என்பது விளங்கிவிட்டது.

சுசீலா மேலும் பேசுவாள் என்று நினைத்து, சிறிது நேரம் அங்கேயே நாகராஜன் உட்கார்ந்திருந்தான். ஆனால், அவளுடைய பேச்சுக்கு மாறாக அடுப்பில் தளதளவென்கிற சத்தத்துடன் சாதம்தான் கொதித்துக் கொண்டிருந்தது.

வாலாம்பாளுக்கு அன்று மார்வலி வந்தது உண்மையோ இல்லையோ, அந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரத்துக் கெல்லாம் திடீரென்று குளிர்காய்ச்சல் வந்துவிட்டது. சுசீலா, மனத்திலிருந்த வெறுப்பையெல்லாம் அடக்கிக் கொண்டு. கணவன் மனம் கோணுமல் சிசுருஷைகள் செய்தாள். வேளைக்கு வேளை மருந்து கொடுத்தாள். உடம்பு வலிக்கிறது என்று சொன்னால், உடம்பைப் பிடித்து விட்டாள். இவ்வளவு செய்தும் வாலாம்பாள் சிற்சில சமயங்களில் நாட்டுப்பெண்ணை வெளியே அனுப்பிவிட்

டுப் பிள்ளையிடம் ரகசியம் பேசியதுமட்டும அவள் மனத்தைப் புண்படுத்தியது.

"அம்மா என்னை வெளியே போகச் சொல்லி விட்டு உங்களிடம் என்ன சொல்லுகிறார்?" என்று வருத்தத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கேட்டாள் சுசீலா.

"என்ன சொல்கிறாள்? நீயே முக்கால் பங்கு என் மனத்தை அபகரித்துக்கொண்டு விட்டாயாம்? அவள் இறந்துவிட்டாலும், உன் வீட்டு மனுஷாளுடன் அதிகம் பழக வேண்டாம் என்று சொல்லுகிறாள். அசட்டு மனுஷி!" என்றான் நாகராஜன் அலக்ஷியமாக.

சுசீலாவுக்கு ரோசம் பொத்துக்கொண்டு வந்தது.

"வஞ்சனையையும் எண்ணத்தையும் பாருங்கள்! இந்த மனுஷிக்கு ராத்திரி பகலாக உழைக்கிறேனே, என்னைச் சொல்லவேண்டும்!" என்றாள் கண்களில் நீர் ததும்ப.

"போனால் போகிறது, சுசீலா. இன்னும் கொஞ்ச நாளில் சாகப் போகிறவள். அவளுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!" என்று அவளைத் தேற்றினான் நாகராஜன்.

"அவர் வஞ்சனை அவரோடு இருக்கட்டும்!" என்று பெருமூச்சு விட்டுக் கணவனின் தேறுதல் வார்த்தைகளைக் கொண்டு ஆறுதல் அடைய முயன்றாள் சுசீலா.

வாலாம்பாள் படுத்து இரண்டு வாரத்துக்கெல்லாம் நாகராஜனைச் சுசீலாவிடம் ஒப்பித்துவிட்டுப் போக வேண்டிய தெய்வ சம்மதம் ஏற்பட்டது. இல்லாவிடில், அந்தக் கிழவி இந்தத் தம்பதிகளின் தாம்பத்தியப் பாதையில் மாறாத ஒரு கசப்பை உண்டாக்கியே இருப்பாள்.

தாயாரின் கர்மங்களை நியமப்படி, பயபக்தியுடன் செய்து முடித்தான் நாகராஜன். சுசீலாவும் வாலாம்பாளின் வஞ்சனையைப் பாராட்டாமல் பிதுர் கிருத்தியங்களில் சிரத்தையுடன் ஈடுபட்டாள். ஆனால், அவள் கபடமற்ற மனத்தில் வாலாம்பாளின் தீக்ஷண்யப் பார்வையும் கடுஞ் சொற்களும் பதிந்து போய்விட்டன. இரவில்

திடீர் திடீரென்று படுக்கையில் அலறிப் புடைத்துக் கொண்டு, "அதோ பாருங்கள்! அம்மா குறட்டை விடுகிற மாதிரியே இல்லையா?" என்று நல்ல தூக்கத்தில் இருக்கும் நாகராஜனைத் தட்டி எழுப்புவாள். "அதெல்லாம் ஒன்றும் இல்லை, தூங்கு" என்று சொல்லி விட்டு நாகராஜன் மறுபடியும் நித்திரையில் ஆழ்ந்து விடுவான். பொழுது விடிந்ததும் இரவு அவள் பயந்ததைச் சொல்லிப் பரிகாசம் செய்வான்.

"போங்கள், உங்களுக்குப் பரிகாசமாக இருக்கிறதாக்கும். ரேழி அறையில் அம்மா நடமாடுகிற மாதிரியே எனக்குத் தோன்றுகிறது. அவர் இந்த வீட்டை விட்டுப் போகவில்லை. என்னிடம் ஏற்பட்ட சந்தேகம் அவருக்குக் குறையவில்லை. உங்கள் அன்பை நான் அடைந்துவிட்டேன் என்று பொருமைப்பட்டுக்கொண்டே இருந்தார்" என்றாள் சுசீலா பயம் நிறைந்த கண்களுடன்.

"அடி, அசடே!" என்றுதான் நாகராஜனுக்குச் சொல்லத் தோன்றியது.

அன்று அமாவாசைக்கு முந்திய தினம். சுசீலா வழக்கம்போல் சமையல் வேலைகளை முடித்துவிட்டுத் தெருவில் வள்ளியம்மையோடு பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். வாலாம்பாள் இறந்துபோய் மூன்று மாதங்களுக்குமேல் ஆகிவிட்டன.

"அம்மா! உன்னைப் பார்த்தால் சந்தேகமாக இருக்குதே; தலை முழுகி எவ்வளவு நாள் ஆச்சு?" என்று சந்தோஷம் தொனிக்கும் குரலில் கேட்டாள் வள்ளியம்மை.

"போடி! மூணு மாசந்தான் ஆறது. உடம்பு சரியாக இல்லை. இந்த வீட்டிலேயே இருக்கப் பிடிக்கவில்லை. ஐயரிடம் சொன்னால் காதில் போட்டுக் கொள்ள மாட்டேன் என்கிறார்."

"ஏன் வீட்டுக்கு என்ன அம்மா?"

"அந்த அம்மாளுக்கு என்னைக் கண்டாலே பிடிக்கவில்லை. நான் அடி வைத்த நாளிலிருந்து என்னைக் கண்

டால் கரித்தார். என்னவோ! அவர் என்னை ஏதாவது செய்துவிடப் போகிறாரே!''

"பைத்தியம்மாதிரி பேசிறியே அம்மா!''

"பைத்தியம் என்னடி? ராத்திரி ஆகிவிட்டால், மனத்தை என்னவோ பண்ணுகிறது. இந்த ரேழி அறையைப் பார்த்தாலே மனம் நடுங்குகிறது.''

வள்ளியம்மை பேசாமல் சுசீலாவின் முகமாறுதலைக் கவனித்தாள். சுசீலாவின் அழகிய முகம் வெளிறிப் போயிற்று. கன்னத்தில் இருந்த ரத்தமெல்லாம் சுண்டி விட்டதுபோல் முகம் பயங்கரமாகக் காணப்பட்டது.

"அம்மா!'' என்று ஓர் அடி முன்னால் வந்தாள் வள்ளியம்மை.

சுசீலாவுக்குத் தலை சுற்றியது. கண்கள் புரண்டன. திருதிருவென்று விழித்தாள். ஆயிரக் கணக்கில் வாலாம்பாளின் முகம் தோன்றி மறைவதுபோல் பிரமை தட்டியது. கீழே விழுந்தவளை வள்ளியம்மை தாங்கிப் பிடித்துக் கொண்டாள்.

நாகராஜன், வேதனை நிறைந்த கண்களுடன் சுசீலாவின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தான். அது நெருப்பாகக் காய்ந்தது. வள்ளியம்மையின் மூலமாக விவரங்களை அறிந்தான். 'இருதயத்துக்கு அதிர்ச்சி' என்றார் டாக்டர். நோயாளியை இனி இந்த வீட்டில் வைப்பதே பிசகு என்றும் அபிப்பிராயப் பட்டார்.

ஆஸ்பத்திரியில் சுசீலாவுக்கு சுயப் பிரக்ஞை வர மூன்று நாட்கள் ஆயின. ஆனால், ஜுரம்மட்டும் தணியவில்லை. பரிதாபமான கண்களுடன் நாகராஜனின் முகத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். அவள் மனத்தில் பலவிதமான போராட்டங்கள் நிகழ்ந்தன. வாலாம்பாள் எண்ணம் போல, கணவனிடமிருந்து தன்னைப் பிரித்துவிடவே இந்த வியாதி வந்திருப்பதாக நினைத்துக்கொண்டாள். அப்படி நினைத்தபோது அவள் மனம் வெடித்துவிடுவதுபோல் தோன்றியது. கன்னத்தில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது.

சுசீலாவின் ஜுரம் படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது.

"இங்கே இருக்கிறவரையில் சந்தோஷமாக இருக்கிறது. அந்த வீட்டுக்குப் போகவேண்டுமே என்று கவலைப்படுகிறேன்" என்றாள் சுசீலா, ஒரு நாள், நர்ஸிடம்.

நர்ஸ் ஒரு விதமாகச் சிரித்துக்கொண்டாள். சுசீலாவின் உடம்பு பூரண குணம் அடைந்ததும், வீட்டுக்கு அழைத்துப் போகலாம் என்று டாக்டர் கூறி விட்டார். வீட்டுக்குப் போகும் அந்த நாளும் வந்தது. டாக்சியில் ஏறி உட்கார்ந்த சுசீலாவின் முகம் வாட்டமடைந்தது. நாகராஜன் அதைக் கவனிக்காதவன்போல உட்கார்ந்திருந்தான். ஆனால், டாக்சியோ அவள் முன்பின் பார்த்திராத ஒரு வீட்டின்முன் நின்றது. வாசலில் வள்ளியம்மையும் நின்றிருந்தாள். "வா, அம்மா" என்று சொல்லித் திருஷ்டி கழித்து, எஜமானியை வரவேற்றாள் வள்ளியம்மை. சுசீலா வெட்கத்துடன் நாகராஜனைப் பார்த்தாள்.

"என்னிடம் சொல்லவே இல்லையே. வேறு வீடு பார்த்துவிட்டீர்களா, என்ன?"

"ஆமாம்" என்றான் நாகராஜன். அதே சமயத்தில் சுசீலாவின் பார்வையில் திருப்தி நிறைந்திருந்ததையும் அவன் கவனித்தான்.

# 13

# முத்து மாலை

ஜிலு ஜிலு வென்று காற்றடிக்கும் வெளித் தாவாரத்தில் கண்ணை மூடி அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான் ரகு. விடியற்காலம் மங்கின நிலவொளி அவன் படுத்திருந்த வராந்தாவுக்கு அடுத்த அறையின் ஜன்னல் வழியாக விழுந்து அங்கே போட்டிருந்த கட்டிலின்மேல் யாரும் இல்லை என்பதை அறிவித்தது. ஒரு தரம் கண்ணைத் திறந்து அவன் மனத்தில் ஏற்பட்ட பிரமையை நினைத்துச் சிரித்துக்கொண்டான் ரகு. லேசான மஞ்சள் கலந்த முத்துமாலை ஒன்றை அணிந்துகொண்டு விஜயம் - இறந்து போன அவன் மனைவி - எதிரில் நிற்பதுபோல் இருந்தது. முத்துக்களின் நிறம் அவள் வெண்மையான கழுத்தில் படிந்து அதற்கு ஒரு சோபையைக் கொடுத்தது. விஜயம் இறந்து இரண்டு தினங்கள்தான் ஆகியிருந்தன. கீழே அவள் தாயாரும் மூன்று வயதுப் பெண்ணும் படுத்திருந்தார்கள். மூன்று தினங்களுக்கு முன்பு கொடிக்கு ஒரு தரம் லொக் லொக் என்று இருமி அவனுக்கு வேதனை அளித்து வந்த விஜயம் இன்று இல்லை. ரகு ஜேபியிலிருந்து விஜயத்தின் முத்துமாலையை எடுத்தான். அதை ஜேபியிலேயே வைத்திருப்பதால் அவன் மனத்துக்கு ஒரு சாந்தி ஏற்பட்டு வந்தது. கண்களிலிருந்து இரண்டு துளிக் கண்ணீர் முத்துமாலையின்மேல் விழுந்து கீழே தெறித்தன. ரகு பழைய நினைவுகளில் ஈடுபட்டான்.

* * * *

ரகு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தபோதிலும் ஒரு சீர்திருத்தவாதி. பால்ய விவாகம், வரதக்ஷிணைக் கொடுமை முதலியவற்றைப் பலமாக எதிர்ப்பவன். கலாசாலை நண்பர்களிடம் தான் ஓர் ஏழைப் பெண்ணை மணந்து எல்லோருக்கும் பாடம் கற்பிக்கப் போவதாக அடிக்கடி கூறுவான். அவன் விருப்பத்தைப்போலவே அவன் வீட்டில்

விஜயம் வளர்ந்து வந்தாள். திக்கற்ற விதவையான மீனாக்ஷி, விஜயம் ஐந்து வயதாக இருக்கும்போது ரகுராமன் வீட்டில் சமையல் வேலைக்கு அடைக்கலம் புகுந்தாள். ரகுவுக்கு அப்போது வயது பத்து. விஜயம், தன் வீட்டுச் சமையல்காரியின் பெண் என்பதையே அவன் மனம் நினைக்கவில்லை. விஜயம் வளர்ந்து பெரியவளான பிறகு ரகுவின் சகல வேலைகளையும் அவளே கவனித்து வந்தாள். அவன் அறையைப் பெருக்குவது, புஸ்தகங்களை ஒழுங்காக வைப்பது, துணிகளை மடித்து வைப்பது எல்லாம் விஜயம்தான். ஆனால், முன்போல் ரகுவுடன் அவள் கலகலப்பாகப் பேசுவதில்லை. அவன் ஏதாவது கேட்டால் தலையைக் குனிந்துகொண்டே பதில் சொல்வாள்.

ரகுவுக்குப் பல இடங்களிலிருந்து ஜாதகங்கள் வர ஆரம்பித்தன. போட்டியாக நான், நீ என்று பெண் கொடுக்க அநேகம் பணக்காரர்கள் வந்தார்கள். ரகுவின் தகப்பனார் பிள்ளைக்குப் பெண் தேடுவதில் முனைந்திருந்தார். இந்தச் சமயத்தில்தான் ரகு ஒரு நாள் திடீரென்று அவன் தாயாரிடம், ''நான் விஜயத்தைத்தவிர வேறு யாரையும் மணக்கப் போவதில்லை'' என்று கூறினான். தாயார் திகைத்து நின்றாள்.

''என்னடா இது? அவளை அனாதையாக விட்டுவிடப் போகிறோமா, என்ன? அவளுக்கு நல்ல இடமாகப் பார்த்து இந்த வருஷம் கல்யாணம் பண்ணிவிட்டால் போகிறது. அதற்கு நீதானா அகப்பட்டாய்?'' என்று அவள் கேட்டாள்.

''இதில் என்ன பிசகு இருக்கிறது அம்மா? விஜயம் என்ன அழகில்லாதவளா? பணம் ஒன்றுமட்டும் இருந்துவிட்டால் போதுமா?'' என்று வாதித்தான் ரகு.

அப்பொழுது கூடத்தில் கண்ணாடிக்கு எதிரில் விஜயம் தலைவாரிப் பின்னிக்கொண்டிருந்தாள். பால் போன்ற உடல் நிறத்துக்கு ஏற்றபடி கறுப்புப் புடைவை கட்டியிருந்தாள். கை நிறையப் பச்சைக் கண்ணாடி வளையல்கள். எடுப்பான மூக்கும், வளைந்த புருவமும், நீண்ட கண்களும் விஜயம் நல்ல அழகி என்று தெரிவித்தன. அவளுக்கு ஸ்திரீதனமாக வரக்கூடிய பொருள் ஒன்றும்

இல்லை. வெகு காலமாக அவள் தாயார் அணிந்திருந்த முத்துமாலைதான் அவளுக்கு ஆபரணம். அது ஒன்றே அவள் சங்கு போன்ற கழுத்துக்குப் போதுமானது. கறுப்பு நூலில் கோத்திருந்த அந்த முத்துக்களின் மஞ்சள் கலந்த நீலம் அவள் கழுத்துக்கு அழகை அளித்தது. ரகு அவளைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"உனக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது, ரகு!" என்று அவன் தாயார் ராஜம் சற்றுக் கடினமாகவே கூறினாள்.

ரகு புன்னகை புரிந்தான். அம்மாவுக்கு என்ன பதில் சொல்வது என்று அவனுக்குப் புரியவில்லை.

"நம் விஜயத்துக்கு வெளியே வரன் ஒன்றும் பார்க்கத் தேவையில்லை. அவளை நானே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன், அம்மா!" என்றான் ரகுராமன்.

அதைக் கேட்டு விட்டுத்தான் ராஜம் அவனுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகக் கூறினாள். ரகுவின் தீர்மானம் ஸ்திரமானது என்பதை அவள் உணர்ந்தபோது அதனால் ரகுவின் தகப்பனாருக்கு ஏற்படப் போகும் கோபத்தை நினைத்து வருந்தினாள்.

பெரிய இடங்களிலிருந்து வந்த பெண்களை எல்லாம் உதறிவிட்டு விஜயத்தை மணக்கப் போவதாகத் தகப்பனாரிடம் அறிவித்தான்.

தகப்பனாருக்கும், பிள்ளைக்கும் பலத்த மனஸ்தாபத்திடையே விஜயம் வாழ்க்கைத் துணைவியானாள்.

* * * *

வாழ்க்கையில் மனிதன் வகுத்த திட்டப்படி அநேகமாக நிறைவேறுவதில்லை. தகப்பனாரிடம் விரோதித்துக் கொண்ட ரகுவின் எதிர் காலம் அவ்வளவு பிரகாசமாக இல்லை. சீர்திருத்தவாதியான ரகுவின் மனத்தில் விலேசம் குடி கொண்டது. விஜயம் தன்னுடன் ஸ்தீரீதனமாகக் கொண்டு வந்திருந்தது அவள் முத்துமாலை ஒன்றுதான். விவாகமான ஒரு வருஷ காலத்துக்குள் மீனாக்ஷி

இறந்துவிட்டாள். பரம்பரையாக இருந்த அந்த முத்து மாலையை அவள் ஒன்றும் செய்யக் கூடாது என்று விஜயத்திடம் அவள் தாயார் கூறியிருந்தாள். ரகு ஒரு கம்பெனியில் குமாஸ்தா வேலையில் அமர்ந்தான. மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம். ஆரம்பத்தில் இல்வாழ்க்கை இன்பமாகத்தான் இருந்தது. கல்யாணமான ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு சாப்பாடு முடிந்ததும் விஜயம் தன் புருஷன் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டாள். வசந்த காலம்; தெருவில் மூலை முடுக்குகளிலிருந்து நாதஸ்வரத்தின் இனிமையான நாதம் காற்றில் தவழ்ந்து வந்தது. தாம்பூலம் தரித்த சிவந்த உதடுகளைக் கோணலாக மடித்து, "என்ன? யோசனை பலமாக இருக்கிறதே!" என்று கேட்டாள் விஜயம்.

"யோசனைதான், விஜயம்! நீ மூன்று மாதக் கர்ப்பிணி. உனக்குத் தாயாரும் இல்லை. என் தாயார் அனுப்பிய நூறு ரூபாயையும் அப்பாவின்மேலுள்ள கோபத்தால் திருப்பி அனுப்பிவிட்டேன். உனக்கு எவ்வளவோ செய்ய வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஒன்றும் செய்யாவிட்டாலும் நீ கழுத்தில் போட்டிருக்கிறாயே முத்து மாலை, அதையாவது தங்கத்தில் கட்டிப் போட்டுப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது!"

"அதிர்ஷ்டம் இருந்தால் கிடைக்கிறது. அதற்காக யோசனை செய்து ஏன் மனத்தைக் கெடுத்துக்கொள்கிறீர்கள்?"

"மனத்தைக் கெடுத்துக் கொள்ளவில்லையே? ஆசை தானே படுகிறேன்!"

விஜயம் சிரித்துக் கொண்டே கணவன் முகத்தைப் பார்த்தாள்.

* * *

விஜயம் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். யுத்தக் கொடுமையால் சாதாரண வருவாயிலுள்ள குடும்பத்தினர் அதிகமாகப் பாதிக்கப்பட்டார்கள். அம்மாதிரிக் குடும்பங்களில் ரகுராமனின் குடும்பமும் ஒன்று.

ஐம்பது ரூபாய் சம்பளத்தில் விலைவாசிகளைச் சமாளிக்க முடியாமல் ரகு கஷ்டப்பட்டான். இந்த நிலையில் விஜயத்தின் மனம் மாறுதல் அடைய ஆரம்பித்தது. கணவன் கை நிறையச் சம்பாதிக்கவில்லையே என்கிற குறை அவள் மனத்தை உறுத்திற்று. ஒவ்வொரு நாளும் புதுப் புது நகைகள்மீதும் ஆசை கொண்டாள். கழுத்தில் நூலில் கோத்த முத்து மாலையைப் பார்க்கும்போதெல்லாம் கணவன் விவாகமான புதிதில் கூறிய மொழிகள் அவள் நினைவுக்கு வந்தன. ரகுராமன் அவற்றை அடியோடு மறந்துவிட்டான். விஜயம் அவனிடமிருந்து திரும்பவும் அந்த வார்த்தைகளைக் கேட்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள். நிலவு பொழியும் இரவு ஒன்றில் பசுமையான தங்கச் சரட்டில் கோத்து மாலையை அவள் கழுத்தில் ரகு அணிவிப்பதாகக் கற்பனை செய்துகொண்டாள். கனவும் கண்டாள்.

ஆனால் ரகுவின் கவலை நிறைந்த மொழிகளைத் தவிர வேறொன்றும் அவனிடம் எதிர்பார்க்க முடியவில்லை. விஜயத்தின் ஆத்திரம் பொங்கிக்கொண்டிருந்தது. அன்று எப்படியாவது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டுவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டாள். வழக்கம்போல் மாலை ஆறு மணிக்கு வரும் ரகு அன்று மணி எட்டாகியும் வரவில்லை. விஜயத்தின் ஆத்திரம் எல்லைமீறிப் போயிற்று. இரவு மணி ஒன்பதரைக்கு ரகு வீடு வந்து சேர்ந்தான். தெருக் கதவைத் திறந்துவிட்டு உள்ளேபோய்ப் படுத்துக் கொண்டாள் விஜயம்.

"சாதம்போட வருகிறாயா?"

விஜயம் தடதட வென்று எழுந்து இலையைப் போட்டுப் பரிமாறினாள். மார்கழி மாதத்துச் சிலு சிலுப்பில் 'ஐஸ்' போலச் சில்லிட்டிருந்தது சாதம். சாதத்தைப் பிசைவதில் ஈடுபட்டிருந்தான் ரகு.

"மோர்தான் வைத்திருக்கிறேன்" என்றாள் விஜயம்.

"ஏன் வேறே ஒன்றும் இல்லையா?" என்று கேட்டான் ரகு.

"இல்லை"

"ஏனும்"

"............"

"இந்த மாதத்தில் இப்படி மோருஞ்சாதம் சாப்பிட்டு உடம்புக்கு ஏதாவது வந்தால் என்ன பண்ணுவதாம்? நீயும் குழந்தையும் இதைத்தானா சாப்பிட்டீர்கள்?"

"ஆமாம், மார்கழி மாசத்துப் பனியில் இரவு பத்து மணி வரைக்கும் ஊர் சுற்றிவிட்டு வந்தால்மட்டும் உடம்புக்கு ஆகுமா?"

ரகு அவளை நிமிர்ந்து பார்த்தான். அந்த முகத்தில் இருந்த கோபமும் துக்கமும் அவனால் சகிக்க முடியவில்லை.

"ஊர் சுற்றுகிறேனா?"

"இல்லை, சினிமாவுக்குப் போயிருப்பீர்கள்."

"எனக்குச் சினிமா ஒன்றுதான் குறைச்சல்! நாலு பேரைப்போல் சந்தோஷமாக இருக்கத்தானே நான் பிறந்திருக்கிறேன்?"

"நானும், குழந்தையும் எங்காவது தொலைந்து போகிறோம். சந்தோஷமாக வேறு பணக்காரப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு இருங்களேன். உங்கள் அப்பாவும் அதற்காகத்தானே காலனை ஒத்தாசை செய்யாமல் இருக்கிறார்?"

"போதும், வாயை மூடிக்கொள். இலையில் சாதத்தைப் போட்டுவிட்டு..............."

"வரவர உங்களுக்கு என் மேல் பிரியமே இல்லை. பிரமாதமாகச் செய்துவிடப்போவதாக ஜம்பம் அடித்துக்கொண்டீர்களே?"

"ஆமாம், ஜம்பம் அடித்துக்கொண்டேன்; செய்ய முடியவில்லை."

"பத்துச் சிநேகிதர்களோடு சேர்ந்துகொண்டு ஊர் சுற்றமட்டும் முடிகிறதா?"

"வாயை மூடு, விஜயம்!" என்று இரைந்தான் ரகு.

"மூடிக்கொள்கிறேன். முத்துமாலை செய்து போட்டுக் கழுத்தில் பளபளவென்று மின்னுகிறதோ, இல்லையோ?"

"என்னால் முடியாது, விஜயம்! அவ்வளவுதான். நீயும் உன் முத்துமாலையும்......"

விஜயம் சரசரவென்று உள்ளே சென்றாள். முத்து மாலையைக் கழற்றிப் பெட்டியில் வைத்தாள். அது கழுத்தில் இருப்பதால்தானே கணவனுடன் சண்டை போடும்படி ஆசையைத் தூண்டுகிறது? சனியன்! கண் மறைவாகக் கிடக்கட்டும்!

அதற்குப்பிறகு விஜயத்தின் மனத்தில் ஆழ்ந்த கிலேசம் குடிகொண்டது. ரகுவை மணப்பதால் உலகில் மற்றப் பணக்காரப் பெண்களுடன் சரிசமமாக உலாவலாம் என்று அவள் கண்ட கனவு தேய்ந்து போயிற்று. ரகு விஜயத்தை மணப்பதால் சீர்திருத்தவாதிகளில் முதன்மை ஸ்தானம் வகிக்கலாம் என்று எண்ணியதும் வீணாயிற்று. இருவருடைய ஒன்றுபட்ட மனங்களுக்கும் இடையே திரை ஒன்று விழுந்தது. ரகு விஜயத்துடன் அதிகம் பேசுவதில்லை. விஜயமும் ரகுவுடன் பேசுவதில்லை. மனத்தில் ஏற்பட்ட வருத்தத்தைத் தாங்கச் சக்தியில்லாமல் விஜயம் நோய்வாய்ப்பட்டாள். ரகுவின் கண்களுக்குத் திடீரென்று ஒரு நாள் விஜயத்தின் மெலிந்த உடலும், குழி விழுந்த கண்களும் தெரிந்தன "விஜயம்! நீ ஏன் இளைத்துப் போகிறாய்? உன் உடம்புக்கு என்ன?"

"உடம்பு சரியாகத்தான் இல்லை."

"டாக்டரிடம் காட்டலாமா?"

"வேண்டாம், பார்த்துக் கொள்ளலாம்" என்றாள் விஜயம்.

நாளுக்கு நாள் விஜயத்தின் உடம்பு இளைத்துத் துரும்பாகி விட்டது; படுத்த படுக்கையாகப் படுத்து விட்டாள். விஜயம் வியாதிக்காரியாக மாறிய பிறகுதான் தன் தப்பை உணர்ந்தாள்.

"வைத்தியச் செலவுக்குப் பணத்துக்கு என்ன பண்ணுவீர்கள்? என் முத்துமாலையையாவது விற்றுச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்களேன்!" என்றாள்.

"கூடாது விஜயம். உனக்கு உடம்பு தேறிய பிறகு அதைத் தங்கத்தில் கட்டிப் போட்டுப் பார்க்கப் போகிறேன்."

விஜயம் லேசாகச் சிரித்துக்கொண்டாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

விஜயம் பேசவில்லை. ரகு அவள் முகத்தை வருடினான். உதடுகள் நீலமாக ஜில்லிட்டிருந்தன.

"விஜயம், விஜம்!"

கணவனின் ஆசையை அறிந்துகொண்டதும் லேசான புன்சிரிப்புடன் இந்த உலகத்தையே விட்டு விடுதலை அடைந்துவிட்டாள் விஜயம்.

"அப்பா! தூங்கறயா?" என்று மூன்று வயதுக் குழந்தை அவனை எழுப்பினாள். கண்ணை மூடிப் பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்த ரகு கண் விழித்துப் பார்த்தான். எதிரில் அவனுடைய மூன்று வயதுப் பெண் நின்றுகொண்டிருந்தாள்.

"காபி சாப்பிட்டாயா, அம்மா? இங்கே என் அருகில் வா!" என்று குழந்தையைக் கூப்பிட்டு அணைத்துக் கொண்டான் ரகு.

விஜயத்தைப்போலவே நீண்ட கண்களும் களை நிறைந்த முகமும் அவனுக்கு விஜயத்தின் உருவத்தை நினைவு படுத்தின. கையில் இருந்த முத்துமாலையைக் குழந்தையின் கழுத்தில் போட்டுவிட்டுக் கண்ணீர் உகுத்தான் ரகு. குழந்தை மிகவும் பரிதாபமாக அவன் முகத்தைப் பார்த்தாள்.

# 15

## பாகீரதி

இந்த வருஷம் மார்கழி மாதத்தில் மற்ற வருஷங்களைப்போல் பனிச்சாரல் அதிகமில்லை. கொல்லைக் கிணற்றடியில், பாகீரதி உதயராகத்தில் திருப்பாவை பாடிக்கொண்டே ஸ்நானம் செய்துகொண்டிருந்தாள். அவள் மெல்லிய குரல் விடியற்கால நிசப்தத்தில் கலந்து மனத்திற்கு அமைதியை அளித்தது.

பாகீரதி, மார்கழி மாதத்தில்மட்டும் பிராதக்கால ஸ்நானம் செய்கிற வழக்கம் என்று இல்லை. வருஷம் பூராவும் அவளுக்கு மார்கழிதான். அவளுடைய பதினைந்தாவது வயதிலிருந்து குளிருக்கும் வெயிலுக்கும் அவள் தேகம் ஈடுகொடுத்து, உரம் பெற்றுவிட்டது.

பாகீரதியின் வீட்டார் எங்கள் வீட்டுக்கு வந்து ஏழெட்டு மாதங்கள் ஆகியிருக்கும். நம் சமூகத்தில் ஆயிரக் கணக்காக இருக்கும் பால்ய விதவைகளில் அவளும் ஒருத்தி என்றுதான் முதலில் நினைத்துக்கொண்டிருந்தேன். நாளடைவில் அவளுடைய ஜீவியத்தில் ஏதோ மறக்கமுடியாத சம்பவம் நடந்திருக்கிறது என்பதுமட்டும் தெரிந்தது. மனத்துக்குள் குமுறிக் கொண்டிருக்கும் துக்கத்தைக் கிளறுவதில் எனக்கு அவ்வளவாக இஷ்டமில்லாததால் அதை அறியப் பிரயத்தனப்படவில்லை. அன்று பாகீரதியின் குரலைக் கிணற்றடியில் கேட்டவுடன் அவளுடைய பரிதாபமான முகம் என் மனத்தை என்னவோ செய்தது. வேதனை மிகுதியால் நித்திரை கலைந்துவிடவே எழுந்திருந்து கொல்லைப்பக்கம் போனேன். இன்னும் பால் வடியும் முகம்; வைதவ்வியத்தால் களையை இழந்துவிட்டாலும், லக்ஷணமாகத்தான் இருந்தது. ஸ்நானம் செய்துவிட்டு, குடத்தில் ஜலத்துடன் என் எதிரில வந்தாள் பாகீரதி.

"என்ன மாமி? ஸ்நானம் ஆகிவிட்டதா?" என்று கேட்டேன். "ஆகிவிட்டது அம்மா; இன்று என்ன இவ்வளவு சீக்கிரம் எழுந்துவிட்டாய்" என்றாள்.

"தூக்கம் பிடிக்கவில்லை. அதோடு உங்கள் பாட்டு நன்றாக இருந்தது; இன்னும் கொஞ்சம் பாடுவீர்கள், கேட்கலாம் என்று வந்தேன்" என்றேன்.

பாகீரதி ஒரு மாதிரியாகச் சிரித்துக்கொண்டாள்.

"ஐயோடி! என் பாட்டும் நானும்" என்று வெறுப்புடன் சொல்லிவிட்டு, "போகிறேன்! பூஜை செய்துவிட்டு அடுப்பு மூட்டினால் சரியாக இருக்கும்" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டாள்.

வக்கீல் நாகநாதையருக்கு மனைவி இல்லை. ஒரு பெண்ணையும், பிள்ளையையும் வைத்துவிட்டு அவள் இறந்துவிட்டாள். அப்போது அவருக்கு வயது நாற்பதுக்குள் இருக்கும். பாகீரதி அவருக்கு மைத்துனி ஆக வேண்டும். தங்கை இறந்து போனபோது வந்தவளைக் குழந்தைகளைக் கவனிப்பதற்காகத் தம் வீட்டிலேயே வற்புறுத்தி வைத்துக்கொண்டார் அவர்.

பாகீரதியை விடியற்காலம் ஐந்து மணிக்குள் கிணற்றடியில் பார்த்தால் உண்டு. இல்லையென்றால் சமையல் அறைக்குள் தான் பார்க்கமுடியும். ஒருவர் எதிரிலும் அவள் வருவதில்லை. வீட்டில் மற்ற வேலைகளைச் செய்வது, வருகிறவர்களை விசாரிப்பது முதலியவற்றை வக்கீலுடைய பெண் லக்ஷ்மிதான் கவனித்துவந்தாள். பாகீரதியின் குரல்கூட அதிகமாகக் கேட்காது. உதயத்திலிருந்து அஸ்தமனம்வரையில் சலியாத உழைப்பு. கண்ணன் கீதையில் சொல்லியிருக்கும் கடமையை நன்கு உணர்ந்தவள் பாகீரதி என்று சொல்லலாம். தங்கை குழந்தைகள் பெரியம்மாள் வார்த்தைக்கு மறுத்துப் பேசமாட்டார்கள்.

பாகீரதி உள்ளே போனபிறகுகூட அவள் குரல் இனிமை என் காதிலே ஒலித்துக்கொண்டிருந்தது. அவர்கள் குடிவந்த நாளாய்ப் பாகீரதியைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்கிற ஆவல் ஏற்பட்டதில்லை. அன்று காலை அவள் பாட்டைக் கேட்டபிறகு ஏதோ ஒருவித

அனுதாபம் அவளிடம் தோன்றி என் மனத்தை வதைக்க ஆரம்பித்தது.

நாகநாதையருடைய பெண் லக்ஷ்மி தோட்டத்தில் வாழை இலை நறுக்க வந்தாள்.

"உன் பெரியம்மா என்ன செய்கிறாள்?" என்று அர்த்தமில்லாமல் கேட்டுவைத்தேன்.

"அப்பாவுக்கு இரண்டாந்தரம் டிபன் செய்து கொண்டிருக்கிறாள் மாமி. ஏன் மாமி, ஏதாவது வேண்டுமா உங்களுக்கு?"

"வேலையில்லாமல் ஒழிவாய் இருக்கிறாளாக்கும் என்று பார்த்தேன்" என்றேன்.

சாயங்காலம் பாகீரதி கிணற்றடியில் ஏதோ வேலையாய் இருந்தாள். என்னைக் கண்டதும், "காலையில் என்னைக் கேட்டாயாமே, லக்ஷ்மி சொன்னாள். என்ன விசேஷம்" என்று விசாரித்தாள்.

"விசேஷம் ஒன்றும் இல்லை. உங்களிடம் இரண்டு தமிழ்ப் பாட்டுக்கள் கற்றுக் கொள்ளலாம் என்கிற உத்தேசம். உங்களுக்கு ஒழிந்த வேளையில் சொல்லிக் கொடுத்தால் போதும்."

"ஒழிவு என்று எனக்கு ஒரு வேளை இருப்பதைப் பார்த்திருக்கிறாயா அம்மா" என்று சொல்லிவிட்டுப் பாகீரதி கண்கலங்க நின்றாள்.

அவள் மனத்தைப் புண்படுத்தி விட்டோமே என்று எனக்கு வருத்தமாகப் போய்விட்டது. அவள் சிறிது சமாளித்துக் கொண்டு, "விடியற்காலம் ஸ்நானம் செய்யும்போது கொஞ்ச நேரம் பகவத் பஜனை செய்கிறேனே, அதைத் தவிர மற்றப் பொழுதில் பகவானை நினைக்க எனக்குப் போது ஏது" என்றாள்.

வாஸ்தவந்தான். அவளை வெளியில் பார்ப்பதே அபூர்வமாக இருக்கும்போது எனக்குப் பாட்டும், கதையும் சொல்லித்தர முடியுமா அவளால்? ஆனால், உண்மையில் அவள் வரலாற்றை அறிந்துகொள்ள ஆசைப்பட்டேனே தவிர, பாட்டுக் கற்றுக்கொள்ள அல்ல.

"என்ன அம்மா யோசிக்கிறாய்?" என்றாள் பாகீரதி.

"ஒன்றும் இல்லை மாமி! என்னைப்பற்றித் தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் வரலாற்றைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று என் மனம் துடிக்கிறது. நான் இன்னொருவர் விஷயத்தில் அதிகமாகத் தலையிட மாட்டேன்" என்று தயங்கிக் கொண்டே சொன்னேன்.

"என் கதையைக் கேட்பதால் புண்ணியமா ஏற்படப் போகிறது? அதைக் கேட்டால் கதை எழுதுகிறவர்கள் ஒரு நல்ல கதை எழுதி விடலாம், நாளைக்கு விடியற் காலம் கபில தீர்த்தத்துக்கு ஸ்நானம் செய்யப் போகி றேன். கூட வந்தாயானால் என் புண்ணிய கதையைச் சொல்கிறேன்!" என்றாள்.

"ஆகட்டும்" என்று ஒப்புக்கொண்டேன்.

விடியற்காலம் மணி ஐந்துக்குக் குறைவாக இருக்க லாம். பனிக்காற்று, சிலுசிலு வென்று அடித்துக் கொண் டிருந்தது. ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண் டிருந்தன. நாகநாதையருடைய பிள்ளை பாலு எங்களுக்கு முன்பு போய்க்கொண் டிருந் தான். ஊருக்கு வெளியே போகும்வரையில் பாகீரதி தன் வழக்கப்படி மெதுவாகப் பாடிக்கொண்டே வந்தாள். அந்தக் குளிர்ந்த வேளையில், 'கார்மேனிச் செங்கண், கதிர் மதியம் போல்முகத்தான்' என்று அவள் பாடியபோது வானத்தில் சிற்சில இடங்களில் கன்னங் கரேலென்று பரவி இருந்த மேகக்கூட்டமும், கீழ்த்திசையில் ரவியின் வருகையை அறிவிக்கப் பரவியிருந்த ஒளியும் கண்ண னுடைய உருவத்தையே நினைவூட்டின.

"இந்தக் குளிரில் எப்படித்தான் ஸ்நானம் செய்யப் போகிறேனோ?" என்று பேச்சை ஆரம்பித்தேன்.

"எல்லாம் இரண்டு நாளைக்குச் செய்தால் வழக்க மாகி விடுகிறது. பாலுவின் அம்மா இருந்தாளே, அவள் என்னைப் பார்த்து இப்படித்தான் கேட்பாள்: 'என்ன அக்கா, இரவு பதினொரு மணிவரையில் உழைத்துவிட் டுத் திரும்பவும் விடியற்காலம் நாலு மணிக்கே எழுந்து விடுகிறாயே' என்பாள். என் கதையைக் கேட்கவேண்டும் என்கிறாயே" என்று பாகீரதி ஆரம்பித்தாள்.

"நாகநாதன் - என் தங்கையைக் கல்யாணம் செய்து கொண்டதால் ஏற்பட்ட புது உறவு அல்ல. அவனுக்குப் பால்யத்திலேயே தாயார் தகப்பனர் இரண்டு பேரும் போய்விட்டார்கள். கொஞ்சம் சொத்து உள்ள குடும்பம் என்று பெயர். அத்தைக் கிழவி ஒருத்தி இருந்தாள். கண் தெரியாது. அவள் இருந்தவரைக்கும், பிள்ளை ஏதோ சாப்பாட்டுக்குக் கஷ்டப்படாமல் இருந்தான். அவளும் போனபிறகு பண்டிகை பருவங்களுக்கு எங்களகத்தில் சாப்பிட வருவான். அப்பொழுது அவனுக்கு வயது பதி னெட்டு, பத்தொன்பது இருக்கலாம். அவன் வீட்டுக்கு வரப் போக ஆரம்பித்தபோது எனக்குப் பதினன்கு வயது; கல்யாணம் ஆகிவிட்டது. என் கணவருக்குக கல்யாண மான ஆறு மாதத்துக் கெல்லாம் பாரிசவாய்வு வந்து காலை இழுத்துவிடவே, வைத்தியம் செய்வதற்காக எங்கள் வீட்டிலேயே வைத்துக்கொண் டிருந்தோம். கூடத்தில் ஒரு பெஞ்சியில் படுத்துக்கொண்டிருப்பார். சிசுருஷைகளெல்லாம் என் தாயாரும் நானும்தான் செய்துவந்தோம்.

"நாகநாதனை இரண்டு மூன்று மாதங்கள் வரை யில் நான் நன்ருகக் கவனித்ததில்லை. ஒரு நாள் அம்மா அப்பாவிடம் அவனைப்பற்றிச் சொல்லிக்கொண் டிருந்தாள்: 'பிள்ளை மூக்கும் முழியும் ராஜா மாதிரி இருக்கிருன். நம்ம சுந்துவையாவது நல்ல இடத்தில் கொடுக்கலாம். பெரிய மாப்பிள்ளையின் குடும்பம் எப்படி என்று தெரிந்தே பாகீரதியைக் கொடுத்துத் தலையில் கல்லைப் போட்டுக்கொண் டாயிற்று.'

"அன்று இரவு ஏதோ வேலையாக வந்த நாகநாதனை முதல் முதலாகச் சரியாகக் கவனித்தேன். என் மனத்தை என்னவோ செய்தது. 'நம்மைவிடச் சுந்து அழகில் சிறந்த வள் இல்லை. பள்ளிக்கூடம் போக அழுது, அவளுக்கு இரண்டு எழுத்துக்கூட வாசிக்கத் தெரியாது. அவள் அதிர்ஷ்டத்தைப் பார்த்தாயா?' என்று வேதனைப் பட் டேன்.

"அவன் வந்தபோது அப்பா சாப்பிட்டுக்கொண் டிருந்தார். கூடத்தில் இவரும் நன்ருகத் தூங்கிக் கொண்

டிருக்கவே, 'அப்பா இல்லையா? என்று கேட்ட நாகநாதனைப் பார்த்து, 'உட்காருங்கள் சாப்பிடுகிறார்' என்று அன்றைத் தினமே முதல் முதலாகப் பேசினேன். அவன் சிறிது நேரம் என்னையும் என் கணவரையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, 'உடம்பு இப்போது தேவலையா?' என்று கேட்டான்.

'தேவலை என்று எப்படிச் சொல்ல முடியும்?' என்று மெதுவாகக் கூறினேன்.

"நாகநாதன் வருத்தம் நிறைந்த முகத்துடன் என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். நான் வெட்கத்துடன் சமையல் அறைக்குள் போய் விட்டேன்.

"அன்றைய தினத்திலிருந்து அவனுடன் பேசுவது சகஜமாகப் போய்விட்டது. அப்பாவிடம் அவன் அடிக்கடி என்னைப் பார்க்கும் போதெல்லாம், 'கல்யாண விஷயத்தில் மட்டும் யோசித்துச் செய்யவேண்டும்' என்பான். என்னைப்பற்றி நாகநாதன் அக்கறையாக விசாரிக்கவே அவனிடம் எனக்கு அன்பு ஏற்பட்டது. வீட்டில் ஏதாவது செய்தால், அவனுக்காக எடுத்து வைத்திருப்பேன். 'தங்கைக்கு ஆத்துக்காரராக வரப்போகிறானோ இல்லையோ?' என்று அம்மா சந்தோஷத்துடன் சொல்லிக்கொண்டிருப்பாள்.

"கையில் இருக்கும் நல்ல வரனை விட்டுவிடக் கூடாது என்று அந்த வருஷமே சுந்துவுக்கும் நாகநாதனுக்கும் கல்யாணம் நடந்தது. சுந்து தனக்கு அழகிய கணவன் வாய்த்ததைப் பற்றிப் பெருமையோ, கர்வமோ கொள்ளவில்லை. அவள் வழக்கம்போல் தன் தோழிகளுடன் விளையாடப் போய்விடுவாள். 'இந்த மாதிரி அகத்துக்காரர் கிடைத்தால், நாள் பூராவும் அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்கலாமே' என்று நான் எண்ணிக்கொண்டேன்.

"தங்கைக்குக் கல்யாணம் என்ற சந்தோஷமே எனக்கு ஏற்படவில்லை. கல்யாணச் சந்தடியெல்லாம் ஓய்ந்து ஒரு வாரத்துக்குமேல் ஆகிவிட்டது. நாகநாதன் வழக்கம்போல் வந்து போய்க்கொண்டிருந்தான். சுந்து அவனைக் கவனிப்பவளாகவே தோன்றவில்லை."

அதுவரையில் சொல்லிவிட்டுப் பாகீரதி பெருமூச்சு விட்டாள். நான் கதையைச் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டு வந்தவள், திடுக்கிட்டு அவள் முகத்தைக் கவனித்தேன். காலை ஒளியில் அவள் முகம் வெளுத்திருந்தது. கண்கள் ஏதோ வெறி பிடித்தவைபோல் மிரண்டு பார்த்துக்கொண்டிருந்தன. பிறகு சிறிது நேரம் கழித்து மறுபடியும் பாகீரதி ஆரம்பித்தாள்.

"சுந்துவின் அதிர்ஷ்டம் ஆரம்பமானவுடன், என் வாழ்க்கை இருளடைய ஆரம்பித்தது. என் கணவருக்கு நாளுக்கு நாள் உடம்பு அதிகமாகவே, நாங்கள் எல்லோரும் கவலைப்பட ஆரம்பித்தோம். என் மனத்தை அறுத்து வந்த துக்கத்தை யாரிடமாவது சொல்லி, அழவேண்டும் போல் தோன்றியது.

"வீட்டில் வைத்தியரை அடிக்கடி அழைத்துவர யாராவது வேண்டியிருக்கிறது என்று சொல்லி நாகநாதனை வீட்டிலேயே இருக்கச் சொல்லியிருந்தோம். நான் மறைவாகப்போய்க் கண்ணீர் வடிக்கும்போதெல்லாம். அவன் ஏதாவது தேறுதல் வார்த்தைகள் சொல்லுவான். என் வாழ்க்கை எப்படி ஆகுமோ என்று இதுவரையில் எல்லோர் மனத்திலும் போராட்டத்தை உண்டுபண்ணி வந்த புதிர் விடுபட்டது. திடீரென்று என் கணவர் இறந்து விட்டார். நாகநாதன் என்னை ஒரு நாள் சந்தித்தபோது, 'நான் முதல்முதல் பார்த்த பால்வடியும் முகம் பாழடைந்து போய் விட்டதே!' என்று அழுதேவிட்டான்.

"'ஐயோ! இதென்ன இப்படி அழுகிறீர்களே?' என்று நானும் நடுங்கிப்போனேன்.

"'உன் காலத்தை எப்படிக் கழிப்பாய்?' என்றான்.

"'நான் தேம்பித் தேம்பி அழுதேன். அசடன்! 'சுந்துவை நான் கல்யாணம் செய்துகொண்டிராவிடில்' என்று அவன் சிறிது நடுக்கத்துடன் கூறிச் சட்டென்று நிறுத்திக் கொண்டான். என் தேகம் பூராவும் நடுங்கியது.

"'உங்கள் மனத்தை நான் அவ்வளவு கெடுத்துவிட்டேனா?' என்றேன்.

"'சீ, கெடுக்கிறதாவது.'

"சுந்துவின் கள்ளங் கபடற்ற முகம் என்னைக் கேலி செய்வதுபோல் தோன்றியது.

"'இனி மேல் சத்தியமாக உங்கள் எதிரில் வரமாட்டேன்' என்றேன்.

"'என்ன என்ன?' என்று அவன் பதற்றத்துடன் கேட்டுக் கொண்டு இருக்கும்போதே, அந்த இடத்தை விட்டு வந்துவிட்டேன். அதிலிருந்து அவன் எதிரில் இன்னும் நான் போகவில்லை. சுந்து இருந்தவரையில் இந்த வீட்டில் காலடி வைத்ததில்லை. அவள் இறப்பதற்கு முன்பு, 'அக்கா உன்னைத் தவிர என் குழந்தைகளுக்கு வேறு கதி இல்லை' என்று அழுதுவிட்டுப் போனாள். லக்ஷ்மி புக்ககம் போய் விட்டால், நான் ஊருக்குப் போய்ப் பகவத் பஜனையில் காலத்தைக் கடத்துவேன் அம்மா!" என்று பாகீரதி சொல்லி முடித்தாள்.

கபில தீர்த்தம், அதன் சுற்றுப்புறம் எல்லாம் பாகீரதியின் கதையைக் கவனித்துக் கேட்பதுபோல் அமைதியாக இருந்தன. 'மாயனை மன்னு வடமதுரை மைந்தனை' என்று பாகீரதி குளத்தில் ஸ்நானம் செய்ய ஆரம்பித்தாள்.

நானும் குளிருக்குப் பயந்து நடுங்கிக் கொண்டே மெதுவாகத் தண்ணீரில் காலை வைத்தேன்.

# 16

# சிலாபோகம்

ஊருக்கு ஏற்ற கோவில்; கோவிலுக்கு ஏற்ற குருக்கள். மூன்று வருஷத்துக்கு முன் நான் தஞ்சாவூர் போயிருந்தபோது சின்னமி குருக்களைச் சந்திக்க நேர்ந்தது. மாலை ஆறு மணிக்கு நன்னிலத்திலிருந்து மாட்டு வண்டியில் ஸ்ரீவாஞ்சியம் போய்விட்டு வருகையில் திடீரென்று மழை பிடித்துக்கொண்டது. மழையென்றால் மழையா? கன்னத்தில் அறைவதுபோல் இருந்தது, ஒவ்வொரு தூறலும். மாடோ மிரண்டு அடி எடுத்து வைக்க மறுத்தது. வண்டிக்காரன் உயிருக்குப் பயந்து வண்டிக்குள் பதுங்கிக்கொண்டான். மையிருட்டு! நடு நடுவே தோன்றும் மின்னலால் ஓடும் ஆற்றின் பிரவாகம் தெரிந்தது.

"பக்கத்தில் ஊர் ஒன்றும் இல்லையா, அப்பா?" என்று கேட்டேன் நான்.

"இருக்குங்க; இன்னும் அரை மைல் போவணுமே! மாடு எழுந்திருச்சாத்தானே?" என்றான் வண்டிக்காரன்.

"மெதுவாகக் கிளப்பிப் பாரப்பா!" என்றார் வண்டியிலிருந்த என் மாமா. வண்டிக்காரனின் ஹிம்ஸை தாள முடியாமல் மாடு தள்ளாடிக்கொண்டு கிளம்பிற்று.

ஊர் என்று சொன்னானே தவிர, வீடு, வாசல் ஒன்றையும் காணோம். இடிந்து சரிந்த வீடு ஒன்றின் பக்கம் வண்டியைக் கொண்டுபோய் நிறுத்தினான் வண்டிக்காரன். வீட்டில் சந்தடியே இல்லை. வண்டிக்காரன் வாசற்படியண்டை போய்ப் பல முறை கூப்பிட்டபின் நடுங்கும் குரலில், "எந்த அபஸ்மாரம் எழவு கொடுக்கறது!" என்று சொல்லிக்கொண்டே கிழவர் ஒருவர் வெளியே வந்தார்.

வந்தவர் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "மழைக்குத் தங்க வந்தாயா? இல்லை, வீட்டில் இருக்கிற ஓட்டைச் செம்பைச் சுருட்டிக்கொண்டு போக வந்தாயா?" என்று கேட்டார்.

அவன் பதில் சொல்வதற்குள், "ஸ்வாமி! ஸ்ரீவாஞ்சிய தரிசனம் எங்களை நடுத்தெருவில் நிற்க வைத்துவிட்டது. மழையைப் பார்த்தால் ஊர் போய்ச் சேரமுடியும் என்று தோன்றவில்லை. இராப் பொழுதை இங்கே கழிப்பதற்கு உதவி செய்யவேண்டும்" என்றார் மாமா. அவர் இவ்வளவு விநயமாகப் பேசியது இதுதான் முதல் தடவை. கிழவர் பேசாமல் எங்களை உள்ளே அழைத்துக் கொண்டு போனார். கூடத்தில் எரிந்துகொண் டிருந்த கரியேறிய விளக்கைத் தூண்டிவிட்டு, "மழையாவது மழை! என் ஆயுளில் இதுதான் இரண்டாவது தடவை இப்படி மழை கொட்டுகிறது. என்ன, தெரிந்ததா? எனக்கு இருபத்தைந்து வயசிலே இந்த மாதிரி ஒரு தரம் மழை பெய்தது. பாவம், சிறிசோடு தனியாக அகப்பட்டுக்கொண்டீர்களே?" என்று அநுதாபப்பட்டார்.

வானம் டமடமவென்று இடித்தது.

நான் காது இரண்டையும் பொத்திக்கொண்டேன்.

இடியென்றால் எனக்கு மகா பயம். என்னைப் பார்த்துக் கிழவர் தம் பொக்கை வாயைத் திறந்து சிரித்துவிட்டு, "சிறிசு, பயப்படுகிறது. ஏனம்மா, பயமாயிருக்கா?" என்று விசாரித்தார்.

"இடியென்றால் யாருக்குத்தான் பயமாயிருக்காது?" என்றேன் நான்.

"உனக்குப் பயம் தோணாமல் இருக்க ஒரு கதை சொல்லட்டுமா?" என்றார் கிழவர்.

இது மாமாவுக்குப் பிடிக்கவில்லை.

"நீ என்ன ராத்திரி பூராவும் கதை கேட்டுக்கொண்டிருக்கப் போறயா?" என்று கேட்டார்.

"ஆமாம், உங்களுக்குத் தூக்கம் வந்தால் தூங்குங்கள். இந்த இடியிலும் மின்னலிலும் நான் தூங்கவே

மாட்டேன்" என்றேன். மாமா துண்டை விரித்துக் கொண்டு படுத்தார். அதற்குள் எப்படித் தூங்கினாரோ? அதுதான் ஆச்சரியம்.

"உன் பேர் என்னம்மா?" என்றார் கிழவர்.

பெயரைச் சொன்னேன்.

"ஆகா! லட்சணமாக இருக்கிறது" என்று சொல்லவிட்டு, நான் கேட்பதற்குள், "என் பேர் சின்ன ஸ்வாமி குருக்கள். இந்த ஊர் மங்களேசுவரனும், மங்களாம்பிகையுந்தான் எனக்குத் துணை. கதை சொல்லட்டுமா?" என்றார் குருக்கள்.

"ஊம்" என்றேன் நான்.

"இந்த ஊரின் பேர் தெரியுமா உனக்கு?"

"தெரியாதே! தஞ்சை ஜில்லாவுக்கே நான் புதிது" என்றேன்.

"ஓகோ, அப்படியா? இலந்தங்குடி என்று பெயர். ஒரு காலத்தில் நன்றாயிருந்த ஊர் இப்போது குட்டிச் சுவரும், கொல்லை வெளியுமாகக் கிடக்கிறது. நூறு வருஷத்துக்கு முன்னே யாரோ ஒரு புலவர் இங்கே வந்தாராம். அகோர வெயில். ஒரு பிராமணர் வீட்டில் போய்ச் சாப்பாடு கேட்டாராம். அந்தப் பிராமணன் கொடுக்காததனால் அறம் பாடிவிட்டுப் போய்விட்டாராம். என்ன தெரிந்ததா? பகவான் மாத்திரம் என்ன பண்ணுவார்? புலவர் வாக்கில் வந்தது வந்ததுதானே? நாளைக்கு அழைத்துக்கொண்டுபோய்க் காட்டுகிறேன். கோவில் என்னவோ ஜீரண தசையை அடைந்து வருகிறது. உள்ளே கால் வைக்க இடமில்லாமல் மேடும் பள்ளமுந்தான். ஆனால், ஈசுவரன் மாத்திரம் தேஜஸ் குறையவில்லை. யாராவது தர்மப் பிரபு வந்து கும்பாபிஷேகம் செய்து வைத்தால் தேவலே. இந்தக் காலத்தில் யார் அந்தக் கைங்கரியமெல்லாம் செய்கிறார்கள்? அந்தப் பணத்தைப் போட்டு நாலு மில்மாக் கொட்டகைகள் கட்டலாமே! என்னவோ, 'நரா போகம், சிலா போகம்' என்று சொன்ன மாதிரி பகவானுக்கு இஷ்டம் வரபோது யார் மனசிலாவது

புகுந்து நடத்திக் கொள்ளட்டுமே. என்ன நான் சொல்வது?'' என்றார் கிழவர்.

''வாஸ்தவம்'' என்றேன் நான்.

கிழவர் மேலும் ஆரம்பித்தார்:

''கிராமத்தில் குடிவளம் இல்லை. முப்பது வருஷத்துக்கு முன்னே குடியானத் தெருவில் தன் முறைப் பெண்ணை வேறொருத்தன் கல்யாணம் செய்துகொண்டான் என்று ஒரு கலகம் ஆரம்பித்தது. கோர்ட்டு வரைக்கும் போய், எல்லாரும் ஆஸ்தியைத் தோற்றுவிட்டுத் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு பட்டணம் பக்கம் போய்விட்டான்கள். குடிவளம் இல்லாத ஊரில் நிலத்தை யார் வாங்குகிறார்கள்? பாதிக்குமேல் கரம்பாய்க் கிடக்கிறது. எனக்குக் கோவில் மான்யம் முக்கால் காணி நிலம். தோட்டக்காரன் ஒருத்தன் பழைய விசுவாசத்தை வைத்துக்கொண்டு பயிரிடுகிறான். அவன் பார்த்துக் கொடுத்தது. ஊரில் பதினைந்து வீடுகளுக்குமேல் உருப்படியாய் இல்லை'' என்றார் கிழவர்.

''உங்களுக்குப் பந்துக்கள் யாரும் இல்லையா?'' என்றேன்.

''முதலிலேயேதான் சொன்னேனே! ஈசுவரனும் அம்பிகையும் தவிர வேறு யாரும் இல்லை. தங்கை பிள்ளை திருச்சிப் பள்ளியில் வேலையா யிருக்கிறான் 'என்னவோ அப்பா, என் கட்டை கீழே விழுந்தால் ஆனதைச் செய்து விடு' என்று கூறியிருக்கிறேன். என் சம்சாரம் போய் இருபது வருஷம் ஆகிறது. அவள் வீட்டை மெழுகிக் கோலம் போட்டால் கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோவிலுக்குக் கோலம் போடுவாள். ஊர் ஜனங்கள் அத்தனை பேரும் மெச்சுவதைக் கேட்டு எனக்கே பெருமை தாங்காது. பிரதி வெள்ளிக்கிழமையும் ஒரு ரூபாய் போல் சில்லறையும் தேங்காய் பழம் முதலியவைகளும் கிடைக்கும். அந்த ஈசுவரனுக்குத் தான் என்ன மனசோ தெரியவில்லை. அந்த மகாலக்ஷ்மி போய்விட்டாள். யாரைச் சொல்லுகிறேன் தெரிந்ததா? என் சம்சாரத்தைத்தான். அப்புறம் ஊருக்கே பிடித்தது சனியன்'' என்றார்.

"யாரோ அறம் பாடினர் இப்படி ஆய்விட்டது என்றீர்களே!"

"அதோடு இதுவுந்தான் என்று வைத்துக்கொள்ளேன்" என்றார் கிழவர்.

"ஏதோ கதை சொல்லுவதாகச் சொன்னீர்களே" என்றேன் நான்.

"கதையா? இப்பச் சொன்னேனே அது கதை மாதிரி இல்லையா?" என்றார் கிழவர்.

"சரிதான்."

"உதயத்துக்கு இன்னும் நாலு நாழிகை இருக்கு. கொஞ்சம் தூங்கு. விடிந்ததும் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டுக் கிளம்பலாம்."

எனக்குத் தூக்கமே வரவில்லை. 'உலகில் உற்றார் உறவினர் தூங்கும்போதே ஒரு கஷ்டம் வந்துவிட்டால் நாம் பிரமாதப்படுத்துகிறோமே. இந்தக் கிழவருக்கு யார் இருக்கிறார்கள்? கள்ளங் கபடற்ற இந்த ஆத்மா ஈசுவர கைங்கரியம் ஒன்றுக்காகவே உயிர் வாழ்கிறது அல்லவா?' என்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

* * *

விடியற்காலம் வீசும் குளிர்ந்த காற்றினால் நான் கண்ணயர்ந்தபோது குருக்கள் ஸ்நானம் செய்துவிட்டு ஈர வேஷ்டியோடு, "அம்மா, எழுந்திருக்கவில்லையா? உதயமாய் விட்டதே" என்று எழுப்பினார். காலையில் வீட்டுக்கு வெளியே வந்து அவ்வூரைச் சுற்றிப் பார்த்ததில் குட்டிச் சுவர்களும், சரிந்த கூரைகளும், சப்பாத்திப் புதர்களும் நிறைந்திருந்தன.

குருக்கள் வீட்டுக்கு மேலண்டையில் கோவில்.

"இதுவா மங்களேசுவரன் கோவில்? நமக்குக் கஷ்டம் ஏற்படும் காலத்தில் நம்மை அறியாமல், 'ஸ்வாமி தலையில் கோவில் இடிந்து விழ' என்று சாபம் கொடுக்கிறோமே, அது சில சமயம் பலித்துவிடும்போல் இருக்கிறதே?" என்றேன்.

"அதுதான் சொல்லிவிட்டேனே, நராயோகம் சிலா போகம்" என்ருர் குருக்கள்.

'மூலக் கிருகத்தில் இந்தத் தள்ளாத கிழவர் எப்படி நுழையப் போகிருர்?' என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது கிழவர் விடு விடு என்று உள்ளே போய், "வாருங்கள்" என்று அழைத்தார். பகவானுக்கு அபிஷேகம் செய்யவேண்டிய வேலையே இல்லை. ஆவுடையாரில் ஜலம் தேங்கியிருந்தது. ஷட் காலமும் அபிஷேகப் பிரியனான மகேசுவரன் ஜலத்தில் மிதந்துகொண்டிருந்தார்!

பக்கத்திலிருந்த விளக்கைத் துடைத்து ஏற்றிவிட்டுப் பூஜை செய்தார் கிழவர். "மங்களேசுவரனை நன்ருகத் தரிசனம் பண்ணுங்கள்" என்ருர்.

அப்படியே நன்ருகத் தரிசனமும் கிடைத்தது. அங்கே போட்டியாக வர யார் இருக்கிருர்கள்?

அம்பிகையின் சந்நிதிக்குப் போகும் வழியிலிருந்த மாமரத்தைப் பார்த்து, "இதில் காய்க்கும் காய்களை என்ன செய்கிறீர்கள்?" என்றேன்.

"பொறுக்கினுற்போல் இருபது காய்களுக்குமேல் இருக்காது. ஊறுகாய் போட்டு வைத்துக் கொள்ளுவேன். ஸ்வாமி பிரசாதத்தைக் காலனுத் தயிரோடு இந்த ஊறுகாயால் உள்ளே செலுத்த முடிகிறது" என்ருர் கிழவர்.

மங்களாம்பிகை மங்களமாகவே இருந்தாள். காவியேறிய சிற்ருடை தரித்திருக்கும் அவள் இடையைக் கண்டு நான் வியந்தேன். 'இதே சில பெரிய தேவஸ்தானங்களில் இருந்தால் எவ்வளவு உயர்வோடு பிரகாசிக்கும்! அதுதான் குருக்கள் சொல்லிவிடுகிருரே, நராயோகம் சிலா போகம் என்று!'

"இந்த ஊரே கதி என்று கிடக்கிறீர்களே? பெரிய பட்டணங்களைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசை இல்லையா?" என்று கேட்டேன்.

குருக்கள் சிரித்தார்.

"என்னை ரக்ஷிக்கும் ஈசுவரனைப் பட்டினியாகப் போட்டுவிட்டா கிளம்புவேன்? மாட்டேன் அம்மா! என் ஆத்மா போகும்வரையில் என் கைங்கரியத்தை விடாமல் செய்துவிடுகிறேன். பிறகு, அவன் இஷ்டம்" என்றார்.

அவருடைய மனப்போக்கை இன்று நினைத்தாலும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

காலை ஒன்பது மணிக்கு அவரை விட்டுக் கிளம்பி நன்னிலம் அடைந்தோம்.

"என்னை மறந்துவிடாதே, அம்மா! இலந்தங்குடியை நினைவில் வைத்துக்கொள்" என்று கிழவர் சொன்னார்.

* * *

அந்த ஊரை விட்டு வந்து மூன்று வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது. இரண்டு மாதங்களுக்கு முன் என் மாமா வந்திருந்தார். ஏதோ பேச்சுப் பராக்கில், "இலந்தங்குடி ஞாபகம் இருக்கிறதா?" என்றார்.

"இல்லாமல் என்ன?" என்றேன்.

"அந்த ஊர்க் கோவிலுக்குச் சமீபத்தில் கும்பாபிஷேகம் நடந்தது. போயிருந்தேன்" என்றார்.

"அப்படியா? யார் செய்து வைத்தார்கள்?"

"யாரோ ஒரு தனவான் இலந்தங்குடியிலுள்ள நிலம் முழுவதையும் வாங்கினாராம். சின்னசாமி குருக்கள் தாம் பேச்சில் கை தேர்ந்த பேர்வழியாயிற்றே! அந்தத் தனிகரிடம் போய், 'ஸ்வாமி! இந்த ஊருக்கே சொந்தக்காரர் ஆகிவிட்டீர். மங்களேசுவரர் - மங்களாம்பிகை கோவிலையும் நீங்களே ஒப்புக்கொள்ள வேண்டியது' என்றாராம். அவ்வளவுதான், ஸ்வாமிக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது. பழைய கோவிலை இடித்துப் புதிய கோவில் கட்டிக் கும்பாபிஷேகமும் நடந்தது. அன்று அம்பிகையின் சிலையின் அழகை வியந்தாயே? ஆஹா! இப்போது அம்பிகையின் சௌந்தரியத்தை என்ன சொல்லப் போகிறேன்!" என்று ஆனந்தத்தால் கண்ணை மூடிக்கொண்டார் மாமா.

"குருக்களைப் பார்த்தீர்களா? என்ன சொன்னார்?" என்றேன் நான்.

"உன்னைப் பற்றி ரொம்ப விசாரித்தார். 'குழந்தை சௌக்கியமாயிருக்கிறாளா? கோவில் நிர்மாணம் ஆய் விட்டதென்று சொல்லுங்கள்' என்றார்."

*　　　*　　　*

சென்ற மாதத்தில் மாமாவுடன் தஞ்சாவூர் போயி ருந்தபோது இலந்தங்குடிக்கும்போயிருந்தேன். கோவிலை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. சின்னசாமி குருக்கள் உண்டிப் பெட்டியின் அருகில் உட்கார்ந்து கொண்டு சில்லறையை எண்ணிக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், "ஸ்வாமி தரிசனம் ஆச்சா?" என்று விசாரித்தார்.

கோவிலின் சிலைக்குத்தான் யோகம் வந்ததென்றால் குருக்களுக்கும் யோகந்தான்! இல்லாவிட்டால் அவர் கையின் கீழ் மூன்று நான்குபேர் வேலை செய்த நாள் உண்டா? 'நரா யோகம், சிலாபோகம்' என்று அவர் அடிக்கடி சொன்னது எவ்வளவு உண்மை?

# 17

## அவர் வந்தார்!

அடுக்கடுக்கான மலைத் தொடருக்குப் பக்கத்தில் வேப்பங் காட்டில் மூன்று நான்கு பிரம்மாண்டமான கட்டிடங்களில், உலகத்துச் சுகங்களை அநுபவிக்க நமக்கு உரிமை உண்டா என்று ஏங்கும் உள்ளங்களுடன் தவங்கிடந்தனர் அநேக க்ஷய ரோகிகள். கூப்பிடு தூரத்தில் தடதடவென்று ஓடும் ரெயிலின் ஓசையைத் தவிர 'லோஷன்' நாற்றம், டாக்டர்களின் நடமாட்டம் இவைகளைத்தாம் அறிந்திருந்தார்கள் அவர்கள்.

பூத்துக் குலுங்கும் ஒரு வேப்ப மர நிழலில் செல்லம் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். காலை நேரம்; மணி ஆறு இருக்கும். குளுகுளுவென்று காற்று இனிமையாக வீசிக்கொண்டிருந்தது. வேப்பமரத்துக்கு அடுத்த குண்டு மல்லிகைச் செடி ஒன்றில் ஏழெட்டு மலர்கள் பூத்திருந்தன. செல்லம் கண்ணைத் திறந்து பார்த்தாள். அவைகளைப் போல் தானும் ஒரு காலத்தில் யௌவனத்தோடும் அழகோடும் சோபித்தது அவள் மனத்தில் கனவைப் போல் தோன்றியது.

டக் டக்கென்று பூட்ஸின் சத்தம் கேட்டது. டாக்டர் ஸரளா அவள் பக்கத்தில் வந்து நின்றாள். மல்லிகையையும் தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டிருந்த செல்லத்தின் கடைவிழிகளில் நீர் முத்துப்போல் தேங்கி வழிய ஆரம்பித்திருந்தது.

"அம்மா, செல்லம்!" என்று கூப்பிட்டாள் ஸரளா. பரிவுடன் தன்னை அழைக்கும் குரலுக்குப் பதில் கொடுப்பவள்போல் செல்லம் நன்றாகக் கண்களைத் திறந்தாள்.

அழகே உருவாய், பரிபூரண ஆரோக்கியத்துடன் தன்னைக் காப்பாற்ற நிற்கும் ஸரளாவைப் பார்த்துச்

சிரிக்க முயன்றாள் செல்லம். ஆனால் சிரிப்பு ஏனோ வர வில்லை.

"உடம்பு எப்படி இருக்கிறது, செல்லம்? ஏன் இப் படி அயர்ந்து படுத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட் டுக்கொண்டே ஸரளா அருகிலிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்துகொண்டாள்.

'உடம்பு எப்படி இருக்கிறது என்று சொல்ல? இந்த நோய் என்னை அரிக்கிற மாதிரி நாட்களையும் கால சக்கரம் அரித்துக்கொண்டே போகிறது' என்று மனத் துக்குள் நினைத்துக்கொண்டாள்.

"மருந்து சாப்பிட்டாயா அம்மா? வாய்க்கு ஆகா ரம் பிடிக்கிறதா?" என்று விசாரித்தாள் ஸரளா.

"சாப்பிட்டேன் டாக்டர்! ஒரு குணமும் இல்லை" என்று சொல்லிவிட்டு, "'அவரி'டமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா?" என்று விசாரித்தாள் செல்லம்.

'அவர்' என்றதும், ஸரளா தன் பர்ஸிலிருந்து ஒரு கடிதத்தை வெளியே எடுத்தாள். செல்லத்தின் முகம் ஆவலால் நிறைந்திருந்தது. ஆங்கிலத்தில் எழுதியிருந்த அந்தக் கடிதத்தை ஸரளா தனக்குள்ளாகவே இரண்டு தடவை படித்துவிட்டு, "உடம்பைப்பற்றித்தான் விசா ரித்திருக்கிறார். சீக்கிரம் குணமாகி அவருக்குச் சந்தோ ஷத்தைத் தர வேண்டாமா?" என்று கேட்டாள் ஸரளா.

"ஆமாம், நான் குணமடைந்து திரும்பி வரவேண் டும் என்று அவருக்கு ரொம்ப அக்கறையோ? இந்த மாதத்துக்குச் சேர வேண்டிய பணத்தையே இன்னும் அனுப்பவில்லையே. நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள், டாக்டர்! எங்கே, கடிதத்தைக் காண்பியுங்கள், பார்க்க லாம்!" என்று பதற்றத்துடன் கட்டிலை விட்டு எழுந்தாள் செல்லம்.

"செல்லம், படுத்துக்கொள் அம்மா!" என்று சொல்லி விட்டுச் சட்டென்று ஸரளா மற்ற நோயாளிகளைப் பார்க்கச் சென்றாள்.

*   *   *

நோயாளிகளைக் கவனித்துவிட்டு அலுப்புடன் நாற்காலியில் சாய்ந்துகொண்டே பத்திரிகை படிக்க ஆரம்பித்தாள் ஸரளா. பத்திரிகையில் வரும் கல்யாண விளம்பரங்களைப் பிறரிடம் சொல்லிச் சிரித்துக்கொண்டே பொழுது போக்குவது அவள் வழக்கம். அன்றும் ஒரு விளம்பரம் வந்திருந்தது. பிள்ளையின் ஊர் திருச்சி. சம்பளம் ரூபாய் இருநூறு. முதல் விவாகமாகி மனைவி நோயாளியாக இருக்கிறாள். உத்தியோகம் செய்யும் பெண்ணாகவோ, படித்த பெண்ணாகவோ இருந்தால் தேவலையாம். பிள்ளையின் பெயர் குமாரஸ்வாமி என்று இருந்தது.

ஸரளாவின் இருதயம் வேதனையால் துடித்தது. 'அவரிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா?' என்று செல்லம் கேட்டுக்கொண்டிருக்கும்போது அவள் புருஷன் இரண்டாம் மனைவி தேடுவது அவளை வருத்தியது.

செல்லம் இந்த ஆஸ்பத்திரிக்கு வந்து ஒரு வருஷம் ஆகிறது. வந்த அன்று அவளுடன் அவள் கணவனும் வந்திருந்தான். செல்லத்தின் வயசான தாயார் மௌனப் பதுமையாய் ஸரளாவைப் பார்த்துக்கொண்டே நின்றாள். கணவனும் டாக்டரும் மணிக் கணக்கில் இங்கிலீஷில் பேசினார்கள். இவர்களுடைய அரட்டைப் பேச்சுக்களைக் கேட்கத் தாயுள்ளம் அவ்வளவு பொறுமை உடையதாய் இல்லை.

"அம்மா! என் குழந்தை பிழைப்பாளா?" என்று இடையிடையே மாப்பிள்ளை இருப்பதையும் பொருட்படுத்தாமல் கேட்டாள்.

"பிழைக்காமல் என்ன அம்மா! என்னால் முடிந்த வரையில் பார்க்கிறேன்" என்று ஸரளா சொன்னதும் அவள் மனத்தில் இருந்த பளுவை யாரோ சற்று இறக்கிய மாதிரி இருந்தது.

"உங்கள் மனைவியின் வியாதி குணமாக வருஷக் கணக்கில் ஆகலாம்" என்று செல்லத்தின் கணவனிடம் முடிவாகத் தெரிவித்தாள் ஸரளா. அதைக் குறித்து அவன் எள்ளளவும் வருத்தப்படுபவனாகத் தோன்றவில்லை.

"ஆகுமா, ஆகாதா?" என்று இரண்டில் ஒன்றையே அவன் அறிய விரும்பினான். செல்லத்தை ஸரளாவிடம் அடைக்கலமாக விட்டுவிட்டு அவன் போய்விட்டான்.

செல்லத்தை முதல் முதல் பார்த்ததிலிருந்தே ஸரளாவுக்கு அவளிடத்தில் ஒருவிதப் பாசம் ஏற்பட்டுவிட்டது. அந்தப் பேதையின் கதையை அறிந்துகொள்ள அவள் ஆசைப்பட்டாள்.

அதற்காக ஸரளா செல்லத்தைத் தேடிப் போன போது அவள், "டாக்டர்! அவரிடமிருந்து கடிதம் வந்ததா?" என்று கேட்டாள்.

"வந்தது அம்மா, நீ அதையெல்லாம் நினைத்துக் கவலைப்படக் கூடாது. நான் ஒன்று கேட்கிறேன்: இந்த வியாதி ஆரம்பித்து எத்தனை மாதங்கள் ஆயின?"

"வியாதியா? முதல் பிரசவத்திலிருந்து இருக்கிறது. உடம்பு அப்பொழுதே துரும்பாய் இளைத்துவிட்டது. அவர் கவனிக்கவில்லை. அவருக்கு என்னைப் பிடிக்கவில்லையாம். நான் 'பாஷனாய்,' படித்தவளாய் இல்லையாம்."

"ஹூம்" என்றாள் ஸரளா.

"எனக்கு விவரம் தெரியாத வயசில் கல்யாணம் ஆயிற்று. பணத்துக்காக அவர் என்னைக் கல்யாணம் செய்துகொண்டார். பிறகு அவருக்கு என்னைக் கண்டால் வெறுப்பு ஏற்பட்டது. மாமியாரிடம் நான் பட்ட தொந்தரவுகளைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் எல்லாவற்றையும் நான் பொறுத்துக்கொண்டிருந்தேன். பிறகு ஒரு பிள்ளைக்குத் தாயானேன். அது பிரசவத்தின்போதே இறந்துவிட்டது. அதுமுதல் என் உடம்பு கேவலமாகிவிட்டது. அம்மா வந்தாள், என்னை அழைத்துப் போக. அம்மாவுடன் ஊருக்குப் போனேன்.

"பிறகு பிறந்தகத்திலிருந்து என்னை அழைத்துக் கொள்ளவில்லை. கஷ்டம் விடியாமல் வளர்ந்துகொண்டே வந்தது. ஆனால் புருஷன் என்ற பாத்தியதையுடன் அவர் வீட்டை அடைந்தேன். அங்கே அநுபவித்த அளவுக்கு மீறிய கஷ்டங்களால் வியாதியும் தானாக வளர்ந்து வந்

தது. ஒரு மாதத்துக்கு முன்புதான் என் உடம்பு இளைத்திருப்பது அவர்களுக்குத் தெரிந்தது. இங்கே கொண்டு வந்து சேர்த்தார்கள். எப்படியாவது அவர் சௌக்கியமாக இருந்தால் போதும்'' என்று கூறி முடித்தாள் செல்லம்.

ஸரளா அங்கிருந்து பெருமூச்சுடன் எழுந்து சென்றாள்.

* * *

இந்தப் பழைய கதையெல்லாம் டாக்டர் ஸரளாவுக்கு ஞாபகத்துக்கு வந்தது. செல்லம் அடைந்த ஏமாற்றத்தை இன்னும் எத்தனை பெண்கள் அடைந்திருக்கிறார்களோ, அடையப் போகிறார்களோ என்று அவள் நினைத்துப் பரிதவித்தாள். செல்லம் வியாதி நீங்கிச் சுகம் அடைந்தவுடன் அவள் கணவன் வந்தால், தான் சொல்லக் கூடிய புத்திமதிகளைச் சொல்லவேண்டும் என்று ஸரளா எண்ணினாள்.

அந்த விளம்பரத்தை மறுபடி அவள் படித்துக் கொண்டிருந்தபோது தபாலில் ஒரு கடிதம் வந்தது. ஸரளாவின் தகப்பனார் அவளுக்காக ஒரு வரன் பார்த்து எழுதியிருந்தார். பிள்ளைவீட்டார் அவளைப் பார்க்க நேராக அவள் இருக்கும் இடத்துக்கே வரப் போவதாக அவர் தெரிவித்தார்.

"அப்பாவுக்கு இது ஒரு பெரிய கவலை. கல்யாணம், கல்யாணம் என்று பறக்கிறார். எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை'' என்று இஞ்ஜக்ஷன் குழாயில் மருந்தை ஏற்றிக்கொண்டே சொன்னாள் ஸரளா.

"உங்களுக்குக் கல்யாணமா? நல்ல வரனாய்த்தான் இருக்கும். பிள்ளையோடு பேசி, அவன் மனத்தை அறிந்துகொண்டு செய்துகொள்ளுங்கள், டாக்டர்! நாளுக்கு நாள் எனக்குப் பலஹீனம் அதிகரித்துக்கொண்டே வருகிறதே?'' என்றாள் செல்லம்.

"பலஹீனமாய்த்தான் இருக்கிறாய் அம்மா. ஆனால், நீ சதா, 'அவர் அவர்' என்று உருகுகிறாய். நான் சொல்

கிறேன் என்று கோபித்துக்கொள்ளாதே செல்லம். உன் உடம்பு குணமானால், அவர் எங்கேயும் போகமாட்டார்'' என்று கூறிப் போய்விட்டாள்.

செல்லத்தின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது.

* * *

பக்கத்தில் இருந்த தன் வீட்டு வராந்தாவில் உட்கார்ந்து, தன்னைப் பார்க்க வருபவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள் ஸரளா.

"அம்மா, செல்லத்திற்கு உடம்பு சரியில்லை'' என்று அப்பொழுது ஒரு நர்ஸ் வந்து சொல்லிவிட்டுப் போனாள்.

"போ, வருகிறேன்'' என்றாள் ஸரளா.

"உடம்பு என்னவோ செய்கிறதாம். கணவனைப் பார்க்கவேண்டுமென்று ஆசையாக இருக்கிறதாம். தந்தி கொடுக்க வேண்டுமாம். உங்களை...''

ஸரளா அவசரத்துடன் வாயிற்படி இறங்கினாள். புதிதாக யாரோ சிலர் அவளை நோக்கி வந்தார்கள். செல்லத்தின் கணவனும் அவர்களுடன் இருந்தான்.

"அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்குமே?'' என்று கேட்டாள் முதலில் வந்த வயசான ஸ்திரீ.

"வந்தது. அவசரக் கேஸ் ஒன்று. ரொம்ப 'டேஞ்சராய்' இருக்கிறது'' என்று சொல்லி ஸரளா செல்லத்தின் கணவனைப் பார்த்தாள்.

"இவன்தான்'' என்று பிள்ளையை அறிமுகப்படுத்தத் தொடங்கினாள் அந்த ஸ்திரீ.

ஸரளா திடுக்கிட்டாள்.

"நீங்களா?''

'ஆம்' என்பதுபோல் அவன் தலையசைத்தான். "உங்கள் அப்பா விவரமாய் எழுதவில்லையோ?'' என்றான்.

ஸரளாவின் காதில் இதெல்லாம் விழவில்லை.

"இருங்கள், வந்துவிட்டேன்" என்று கூறிச் செல்லத்தைப் பார்க்கப் போனாள்.

செல்லம் வெருண்ட கண்களுடன் திரு திரு என்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

"செல்லம், என்ன அம்மா உடம்புக்கு?" என்று கேட்டாள் ஸரளா.

"அவருக்குத் தந்தி கொடுத்துவிட்டீர்களா? அவரைப் பார்க்கவேண்டும்போல் இருக்கிறது."

"ஆகட்டும்."

"உடனே கொடுங்கள் டாக்டர்."

"கொடுக்கிறேன், அம்மா! அவரைப் பார்த்தால் உடம்பு குணமாகும் என்று நினைக்கிறாயா?"

"குணமாகாவிட்டாலும் திருப்தியுடன் பிராணனை விடுவேன்."

செல்லம் மறுபடி கண்ணை மூடிக்கொண்டாள். அப்பொழுது அங்கே 'அவர்' வந்தார்.

"செல்லம்!" என்று ஒரு தரந்தான் கூப்பிட்டார்.

"வந்துவிட்டீர்களா?" என்று கேட்டுக்கொண்டே கண்ணைத் திறந்தவள், "உடம்பு துரும்பாய் இளைத்து விட்டதே?" என்று அவரை ஊடுருவிப் பார்த்தாள்.

கண் இமைகள் தாமாகவே மூடிக்கொண்டன. 'அவர், அவர்' என்று ஏங்கித் தவித்த ஆத்மா நிம்மதி அடைந்தது.

ஸரளாவின் உதடுகள் துக்கத்தால் துடித்தன. செல்லத்தின் கணவனை மறுபடி நிமிர்ந்துகூடப் பார்க்காமல் அவள் அங்கிருந்து போய்விட்டாள்.

# 18

## ஓடக்காரி

திருச்சியில் மேலச் சிந்தாமணியில் ஒரு சுப்பிரமணிய ஸ்வாமியின் கோவில். அது அந்தப் பக்கத்துக்கே மிகுந்த சோபையைக் கொடுத்து வந்தது. கோவில் சிறியது தான். ஆனால் அதில் இருந்த மூர்த்தி மட்டும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று சொன்னார்கள். கோவிலைச் சுற்றி அழகிய தோட்டம். அதில் ரோஜா, மல்லிகை மொக்குகள் மலர்ந்து கண்ணைச் சிமிட்டி மின்னின. அமைதியாகப் பவனி வந்த காவேரி ஆறும், கம்பீரக் கோவிலும் பார்க்கத் தெவிட்டாத காட்சியாக அமைந்தன.

காலையில் ஸ்திரீகள் காவேரி நதியில் ஸ்நானம் செய்துவிட்டுக் கோவிலில் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டுப் போவார்கள். உஷக் காலத்தில் மலைக் கோட்டையிலிருந்து இன்ப மூட்டும் நாகஸ்வர கீதம் மெல்லிய காற்றில் தவழ்ந்து வரும்.

ஆனால், அதைவிட மேலான தெய்விகமான செவியின்பத்தை அங்கே அநுபவித்து வந்தேன். உஷக் காலத்திலும், அந்தி வேளையிலும் ஆற்றங்கரையில் உட்கார்ந்து கவனித்தால், ஒரு பெண்குரல் பாடுவது கேட்டு வந்தது.

"பல்லினைக் காட்டி வெண்முத்தைப்
பழித்திடும் வள்ளியை - ஒரு
பார்ப்பனக் கோலந் தரித்துக்
கரந் தொட்ட வேலவா!"

அந்தக் குரல் இசைத்த மதுர கானம் இதுதான்.

சில காலம் வரையில் அந்தக் குரல் யாருடையது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு நாள் காவிரிக் கரையில் இருந்த பெரிய பூவரச மர நிழலில் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். மாலை நேரம். தொலைவில்

ஸ்ரீரங்கத்துப் படித்துறையிலிருந்து ஒரு படகு மெல்ல மெல்ல இக்கரையை நோக்கி நகர்ந்து வந்துகொண்டிருந்தது.

படகு நெருங்க நெருங்க மேலே சொன்ன பாட்டு, கணீரென்று கேட்க ஆரம்பித்தது. படகு கரையை அடைந்ததும் அதில் அழகிய பெண் ஒருத்தி துடுப்பைக் கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். படகை இழுத்துப் பிடித்து மரத்தோடு கட்டிவிட்டு அவள் படியேறினாள். அவளை ஆவலுடன் உற்று நோக்கினேன். அவளும் என்னைப் பார்த்துவிட்டு, "ஏன் அம்மா, எங்கே போகணும்?" என்று கேட்டாள்.

"எங்கும் போக வேண்டாம். இத்தனை நேரம் நீதான் பாடினுயா?" என்று கேட்டேன்.

"ஆமாம், அந்தப் பாட்டை நீங்களும் கேட்டாய் விட்டதா? அப்படி நான் என்ன அம்மா நன்ருய்ப் பாடுகிறேன்?" என்று ஆச்சரியம் கலந்த சிரிப்புடன் கேட்டாள்.

"நன்ருய்த்தான் இருக்கிறது. இந்தப் பாட்டு உனக்கு எப்படித் தெரிந்தது?"

"எப்படியோ தெரிந்தது. அந்தப் பாட்டுத்தான் எனக்கு ரொம்பப் பிடித்தது. எவ்வளவு தடவை பாடினுலும் அலுக்கவில்லை."

"உன் பெயர் என்ன?"

"குஞ்சரி."

"அழகான பெயர்" என்றேன் நான்.

"பெயரில் என்ன இருக்கிறது அம்மா? முத்து, புஷ்பா என்று வைத்தால் நிறைந்து போய்விடுமா? அதிருஷ்டம் வேண்டாமா?" என்று பெருமூச்சு விட்டாள். அவள் மனத்தில் இருப்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்தது. அநுதாபத்துடன் நான் சில வார்த்தை பேசியதும் அவள் ஆரம்பித்தாள்.

*　　　*　　　*

"நான்கு வருஷங்களுக்கு முன் கடைசியாக ஷண்முகம் இந்தப் பாட்டைப் பாடிவிட்டுப் போனார். திரும்பவும் வரவே இல்லை. தவறு என்னவோ எங்கள் பேரில் தான். இந்தப் பாட்டு என் குழந்தைப் பருவத்திலேயே மனத்தில் பதிந்து போயிற்று. சிறு வயதில் இந்த மரத்தடியில் நானும் அவரும் இந்தப் பாட்டைப் பல தடவை பாடியிருக்கிறோம். நானும் அவரும் எப்பொழுதும் சேர்ந்தே விளையாடுவோம். இதனால் என் பேரில் அப்பாவுக்குக் கோபங்கூட வருவது உண்டு. 'அந்தப் பயலுடன் ஊர் சுற்றுகிறாயா?' என்று அடிப்பார். அது ஷண்முகத்துக்குத் தெரிந்துவிட்டால், இந்த அரச மரத்தடியிலிருந்து இரண்டு தடவை விஸில் அடிப்பார்; நான் ஓடிப் போய் விடுவேன்.

"படிப்பு என்னவோ அவர் அதிகம் படிக்கவில்லை என்றுதான் சொன்னார்கள். இருந்தாலும், ஏதாவது பாடிக்கொண்டே இருப்பார். தனியாகப் பாடும்போது அவருக்கு உத்ஸாகம் அதிகம் இருப்பதில்லை. நானும் கூடச் சேர்ந்து பாட ஆரம்பித்தால் உத்ஸாகம் கரை புரண்டுவிடும். படகைத் தள்ளிக்கொண்டே பாட்டைப் பாடிக்கொண்டு இந்த மாதிரி இரவுகளில் எத்தனையோ தடவை போயிருக்கிறோம். அதெல்லாம் இப்பொழுது கதையாகப் போய்விட்டது.

"அம்மா, ஷண்முகத்தைக் கண்டால் என் அப்பாவுக்குப் பிடிக்காது என்பதில்லை. ஒரு சிறிய தவறு அவர் மனத்தைக் கல்லாக்கிவிட்டது.

"ஸ்ரீரங்கத்தில் அன்று என்னவோ உத்ஸவம். நல்ல நிலவு. ஆற்றில் ஏராளமான கூட்டம். அப்பாவுக்கு என்னை அனுப்ப இஷ்டமில்லை. முதல் நாளே அவருக்குத் தெரியாமல் போவது என்று நானும் ஷண்முகமும் ஏற்பாடு செய்திருந்தோம். ஆற்றில் ஜலம் கொண்டுவரப் போவதாகச் சொல்லிப் படகில் இருவரும் கிளம்பிவிட்டோம். ஷண்முகந்தான் படகைத் தள்ளிக்கொண்டு வந்தார். என் மனம் நிலவு பொழியும் நதியைக் கண்டு களிவெறி கொண்டது.

"ஸ்ரீரங்கத்திலிருந்து நாகஸ்வரம் காற்றில் தவழ்ந்து வந்தது. ஷண்முகம் பாட ஆரம்பித்தார். முதல் இரண்டு அடியைப் பாடிவிட்டு என்னைப் பார்த்தார். பிறகு, 'ஏன் குஞ்சரி, பாடமாட்டேன் என்கிறாய்?' என்று கேட்டார். நான் பதில் பேசவில்லை. 'சிரிக்கக்கூட மாட்டாயோ? வெண்முத்துப் போன்ற பல் வெளியில் தெரிந்தால் மோசம் போய்விடுமோ?' என்றார் அவர். நான் சிரித்துவிட்டேன்.

"அவர் என் கையைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டார். கையை மெதுவாக இழுத்துக்கொண்டேன். சிறிது நேரம் என்னையே மௌனமாக உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தவர் பாட்டின் மற்ற அடிகளையும் பாடிவிட்டு, 'என்னைப் பார்க்க வெட்கமாக இருக்கிறதா? எப்படித் திடீரென்று இந்த வெட்கம் வந்துவிட்டது, குஞ்சரி?' என்றார். நான் ஒன்றும் புரியாமல் திகைத்தேன்.

"'ஒன்றும் புரியவில்லையா உனக்கு? உன்னை ஒன்று கேட்கிறேன். வெட்கப்படாமல் பதில் சொல்லுவாயா?' என்று கேட்டார்.

"'ஹூம்' என்று தலையை ஆட்டினேன்.

'"என்னைக் கல்யாணம் செய்துகொள்ளுகிறாயா?' என்று கேட்டார். இவ்வளவு நேரம் தலையைக் குனிந்துகொண்டிருந்த நான் அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவர் முகத்தில் உண்மையும் அன்பும் பிரகாசித்தன.

" நான் தலை குனிந்தேன்."

* * *

"எங்கள் இருவர் மனமும் ஒன்றுபட்டதே தவிர அப்பாவின் மனம் சம்மதிக்கவில்லை. இவ்வளவு நாள் அவருடன் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்த அப்பாவுக்குத் திடீரென்று வெறுப்பு உண்டாகிவிட்டது. அப்பா உத்தரவை மீறி நான் அவருடன் உத்ஸவத்திற்குப் போனதும், அவர் என்னைத் தெரியாமல் அழைத்துக்கொண்டு போனதுமே காரணங்கள்.

"'குஞ்சரி, அப்பாவைக் கேட்டாயா?' என்று கேட்பார். நான் பேசாமல் நின்றுகொண்டிருப்பேன்.

"'அவரைக் கேட்க வெட்கப்படுகிறாயா? நான் வந்து கேட்கட்டுமா?'

"'ஐயோ, வேண்டாம்!' என்றேன்.

"'ஏன்?'

"'ஏனா? நீங்கள் வந்து கேட்க வேண்டாம்.'

"இப்படியே பல மாதங்கள் போய்விட்டன. இதே மரத்தடியில் நான்கு வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை பாடிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அந்தக் குரலில் துன்பம் கலந்திருந்தது.

"'கடைசியாகக் கேட்கிறேன் குஞ்சரி. அப்பா சம்மதித்தாரா இல்லையா?' என்று கேட்டார்.

"'இந்த ஜன்மத்தில் நான் புண்ணியம் செய்யவில்லை. முருகனின் சித்தம் அவ்வளவுதான்' என்றேன்.

"'இதுதானா உன் முடிவு?'

"'எனக்காக இன்னும் கொஞ்ச காலம் காத்திருக்கக் கூடாதா?' என்றேன்.

"'ஆமாம்; என் நன்மையில் அக்கறை கொண்ட பெரியவர்களின் மனம் புண்படும்படி இவ்வளவு காலம் இருந்தது போதும். நான் முட்டாள். மனத்தைக் கண்டபடி அலைய விட்டுவிட்டேன். உன் அப்பாவுக்குப் பிடித்தவனைப் பார்த்துப் பண்ணிக்கொள். நான் போய் வருகிறேன்.'

" அன்று போனவரை இதுவரையில் நான் பார்க்கவே இல்லை."

இவ்வாறு கூறி முடித்த குஞ்சரியின் கண்களில் ஜலம் வழிந்தது.

* * *

நான்கு வருஷங்களுக்குமுன் நடந்த மேற்படி சம்பவம் அநேகமாக என் மனத்தைவிட்டு அகன்றே போய் விட்டது. திடீரென்று ஏற்பட்ட யுத்த அபாயத்தால் திருச்சிக்குப் போனோம். பழைய கரை, முருகன் கோவில்,

பூந்தோட்டம் எல்லாம் அப்படியே இருந்தன. அந்த மரத்தடியை அடைந்த பிறகு திடீரென்று குஞ்சரியின் நினைவு வந்தது. ஐயோ! அவள் என்ன ஆனாள்? அப்பொழுது அவள் அந்தச் சோகக் கதையைச் சொன்னாளே, அந்த அபலை. கடைசியில்.........ஐயோ! அப்படியும் இருக்குமா...............?

திருச்சியை அடைந்த பத்துத் தினங்களுக்கு அப்புறம் ஒரு தினம் உஷக் காலத்தில் கோவிலிலிருந்து மேளச் சத்தம் கேட்டது. பிராதக் கால பூஜையாய் இருக்கும் என்று எண்ணிக்கொண்டேன். ஆனால், சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு கல்யாண ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. கல்யாணப் பெண் குஞ்சரியேதான்! அவள் பார்வை தற்செயலாக என்பேரில் விழுந்தது.

அன்று மாலை காவேரிக் கரையில் எதிர்பாராத விதமாகக் குஞ்சரியைச் சந்தித்ததுபற்றி வியப்பில் மூழ்கியிருந்தேன்.

"அம்மா!" என்று கூப்பிட்டாள் குஞ்சரி. பக்கத்தில் அவள் கணவன் நின்றுகொண்டிருந்தான்.

"கல்யாணம் ஆயிற்று? ரொம்ப சந்தோஷம்" என்றேன்.

"யாரைக் கல்யாணம் செய்துகொண்டேன் தெரியுமா? ரொம்ப வருஷங்களுக்கு முன் என்னைத் தவிக்க விட்டுவிட்டு ஓடிப் போனாரே, அவரையேதான்" என்றாள் குதூகலத்துடன். பிறகு, "இலங்கை இருக்கிறது பாருங்கள்! அங்கே உத்தியோகம் சம்பாதிக்கப் போனாராம். உத்தியோகம் மாத்திரம் சம்பாதிக்கவில்லை. இன்னொரு காதலியையும் சம்பாதித்துக் கொண்டார். இன்றைத் தினம் முகூர்த்தம் வைத்திருந்தார்களாம். ஜப்பான்காரன் முதல் குண்டைப் போட்டதும் உயிர் இருந்தால் கல்யாணம் செய்துகொள்ளலாம் என்று ஓடி வந்துவிட்டார். அந்த முகூர்த்தத்திலேயே இங்கே கல்யாணம் ஆகிவிட்டது. முழிக்கிறதைப் பாருங்கள். முருகனுக்குப் பொறுக்க வேண்டாமா?" என்றாள், கண்முகத்தைப் பார்த்தவாறு. அவன் தலையைக் குனிந்துகொண்டே இருந்தான்.

"சண்டையெல்லாம் போதும் குஞ்சரி. இனிமேல் ஒற்றுமையாக இருங்கள்" என்று சொல்லிவிட்டு எழுந்தேன்.

"அம்மா, படகில் ஸ்ரீரங்கம் போகலாம் வருகிறீர்களா?" என்று கூப்பிட்டாள்.

"வேண்டாம், நீங்கள் போய்விட்டு வாருங்கள்" என்றேன்.

அந்தி வானம் ஸ்வர்ணமயமாய் இருந்தது. அந்த அபூர்வ ஒளியில் காவேரி, ஸ்ரீரங்கநாதர் கோபுரம், அதற்கு அப்பாலுள்ள தோப்புகள், குஞ்சரியும், ஷண்முகமும் செல்லும் படகு—எல்லாம் மூழ்கிக் குளித்தன.

மலைக் கோட்டையிலிருந்து தவழ்ந்து வரும் அந்த நாகஸ்வர கீதத்துடன்,

"புல்லினைக் காட்டி வெண் முத்தைப்
பழித்திடும் வள்ளியை—"

என்ற பாட்டும் நதி நடுவிலிருந்து ஒலித்துக்கொண்டிருந்தது.

# 19

## நிறைந்த காதல்

கிழக்கே பளீரென்று எழும் உதய சூரியன். மேற்கே ஒளியிழந்த நிலவு. சலசலவென்று மெல்லொலி பரப்பிச் செல்லும் வைகை நதி தூரத்தில். மீனாக்ஷி கோவிலில் ஒலிக்கும் மணியின் சப்தம் இளந்தென்றலில் மிதந்து வந்தது. நீரில் இடுப்பளவில் நின்றுகொண்டு கதிரவனுக்கு அர்க்கியம் விடும் அந்தணர்கள் வேதங்களை உச்சரித்த வண்ணம் கரையேறினர். மங்கையர் அங்கயற் கண்ணியின் புகழைப் பாடிக்கொண்டு கூந்தலிலிருந்து நீர் சொட்ட ஊருக்குள் திரும்பினர். இந்தச் சௌந்தரியக் காட்சியை அநுபவித்துக்கொண்டே சத்திய விரதன் ஆலயத்தை நோக்கி நடந்தான். தூண்களில் உயிர் கொண்டு பேசும் அற்புதச் சிற்பங்கள் 'எந்தச் சிரேஷ்டனுடைய கரங்கள் இதை வடிக்கப் புண்ணியம் செய்தனவோ?' என்று நினைக்கும்படி இருந்தன. 'குதிரைகள் சவாரிக்குத் தயாராக இருக்கின்றனவே! அடடா! அந்தக் கல் யானைகள் உயிரோடு இருக்கின்றனவா? அதோ அந்த மங்கை மீனாக்ஷியை உள்ளம் குழைய வேண்டுகிறாளே! இவையெல்லாம் கற்களால் செய்தவையா?' என்று திகைத்துப் போனான் சத்தியவிரதன். அவன் திகைப்பு அடங்குவதற்கு முன் உள்ளம் குழைந்து அருள் வேண்டும் ஓர் வனிதையைக் கண்டான். 'என்ன! சற்று முன் பார்த்த சிற்பமா உயிர்கொண்டு தரையில் இறங்கி விட்டது? மின்னல் கொடி போல் துவளுகின்ற இடை. இதழ்க் கடையில் தவழுகின்ற நகை.' அந்த அபூர்வ நாட்டியம் எங்கே நின்றுவிடுமோ என்று ஒவ்வொரு நிமிஷமும் பயந்தான். ஸ்நானம் செய்து துவட்டாத கூந்தல் முதுகில் புரள ஈசுவரிக்குத் தன் கலையை அவள் அர்ப்பணம் செய்துகொண்டிருந்தாள்.

'கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல' ஆடிக்கொண்டிருந்த அவளுடைய நயனங்களிலிருந்து

முத்துப்போல் நீர் சொரிந்தது. ஆலயத்திலிருந்த இரண்டோர் அர்ச்சகர்களுக்கு இது புதிதல்ல. யாத்திரிகர்கள் அவளை முறைத்துப் பார்த்துவிட்டுப் போனார்கள். அர்ச்சகர்களுக்குள், 'இவ்வளவு அழகு செறிந்துள்ள இந்தப் பெண்ணுக்கு இப்படியா பைத்தியம் பிடிக்க வேண்டும்? எத்தனையோ பிரபுக்கள் பணத்தைக் கொட்டி இவள் இதழ்க் கடையின் அசைவைப் பெறக் காத்திருக்கையில் தலையெழுத்தா இவளுக்கு?' என்று பேசும் பேச்சுக்கள் நேற்று இன்றைய அநுபவமல்ல. மந்தாகினியின் மனம் ஒரே வைராக்கியத்தில் நின்றுவிட்டது. பிறந்தது தாசிக் குலமானாலும் உன்னத லக்ஷியங்கள் அவள் உள்ளத்தில் குடிகொண்டன.

"என் அழகையும் இளமையையும் விரும்புகின்றனரே தவிர, தம் இருதயத்தை எனக்கு அர்ப்பணமாக்க ஒருவராவது முன் வருவார்களா? காதல், அன்பு என்பதை அறியக் கூடாத பிறவியா இது? வேண்டாம். என் அழகு, கலை எல்லாம் அம்பிகைக்கே அர்ப்பணமாகட்டும்" என்கிற திட சங்கல்பம். அவள் தாயின் பிதற்றல்தான் எஞ்சி நின்றது.

மந்தாகினி கோவிலைப் பிரதக்ஷிணம் செய்துகொண்டு சிந்தனை தேங்கிய முகத்துடன் வெளியே சென்றாள். சத்தியவிரதனின் மனத்தில் எண்ணங்கள் சிதறின: 'பாவம்! அவள் மனத்தில் குமுறும் எண்ணந்தான் என்னவோ? மலரைவிட மெல்லியதான அந்த மனம் ஏன் அப்படித் துடிக்கவேண்டும்? கலையெல்லாம் ஒரே இடத்தில் பொழிந்துவிட்டதா? இந்த அபூர்வ நாட்டியத்தை ரஸிக்க இவ்வூரில் யாரும் இல்லையா? எல்லோரும் முகத்தைத் திருப்பிக்கொண்டு போகிறார்களே.'

ஸந்நிதியில் ஒருவன் விளக்குகளுக்கு எண்ணெய் விட்டுக்கொண்டிருந்தான்.

"இப்பொழுது ஆடிவிட்டுப் போனாளே, அந்தப் பெண் யாரப்பா?" என்றான் சத்தியவிரதன்.

"அவளா?" என்று அலக்ஷ்யமாகச் சொல்லிவிட்டு, "தாசி மீனலோசனியின் பெண். சித்தப் பிரமை......

பைத்தியம். அதை ஏன் சொல்ல?'' என்று பெருமூச்சு விட்டான்.

''பித்தப் பிரமையா? வெறும் புரட்டு. உள்ளத்தில் பொங்கும் பக்தி கண்களில் ஜ்வலிக்கிறது. நல்ல தெளிவான முகம். பரத நாட்டியத்தின் ஆழ்ந்த முத்திரைகளை வெலேசமும் பிசகாமல் ஆடும் திறன். உள் மர்மங்களை அறியாமல் பிதற்றும் குப்பைச் சமூகம்...... இதற்கு வாழ்வாம்... அந்தஸ்தாம்!'' என்று முணுமுணுத்தான் சத்திய விரதன்.

எண்ணெய்க்காரன் தன் ஜோலியை முடித்துக் கொண்டு, எண்ணெய்த் தாழியைக் கந்தையால் துடைத்துக்கொண்டிருந்தான்.

''அவள் வீடு?'' என்றான் சத்தியவிரதன் தயங்கிய வண்ணம்.

அவன் வியப்போடு நிமிர்ந்து, ''இதில் என்ன ஐயா அக்கறை? வடக்கு மாசி வீதியில் இருக்கிறாள். பிரபுக்களையே சட்டை பண்ணாத கர்வக்காரி! உம்மை......'' என்று நிறுத்தினான்.

சத்தியவிரதன் தலையைக் குனிந்துகொண்டான்.

'இதற்குள்ளேயா சமூகம் என்னைச் சந்தேகிக்க வேண்டும்?'

எண்ணெய்த் தாழியை எடுத்துக்கொண்டு வெளியே நடந்தான் எண்ணெய்க்காரன்.

வானில் ரவி தன் நீண்ட யாத்திரையைத் தொடங்கி விட்டான். சுளீரென்று பாயும் கிரணங்கள் பொற்றாமரையில் படிந்து விளங்கின.

*　　*　　*　　*

தென்றல் வீசும் மாலை. மதுரையம்பதி சோபையுடன் திகழ்ந்தது. மங்கையர்கள் வீதி வழியே அரம்பையர்கள்போல் அன்னையின் ஆலயத்துக்குச் சென்றுகொண்டிருந்தனர். வடக்கு மாசி வீதியில் ஒரு கிருகத்தில் சோகத்தையெல்லாம் திரட்டிக் கானமூலமாய் வெளியிட்

டது ஒரு தீங்குரல். ஜய், ஜய் என்று சாரணி அநுசாரணி யுடன் சப்திக்கும் தம்பூர். கிருஷ்ணலீலா தரங்கிணியை யும், சதாசிவப் பிரம்மேந்திரர் கீர்த்தனைகளையும், நடு நடுவே தேனைப்போல் இரண்டொரு தமிழ்க் கிருதிகளையும் பொழிந்துகொண்டிருந்தாள் மந்தாகினி. வாசற்படியில் கற்சிலைபோல் நின்று ஓர் உருவம் இதைக் கவனித்தது. கண்களில் நீர் மல்கியது. உள்ளே அடி எடுத்து வைப்ப தற்குப் பயம், தயக்கம். உள்ளிருந்து வரும் கானம் அவன் மனத்தில் காலையில் மூண்ட தாபத்தைத் தணித்து விட்டது. மெதுவாக உள்ளே போய்விட்டான். எப்படி என்பது அவனுக்கே தெரியாது.

கூடத்தில் மெத்தென்ற ரத்தின கம்பளம். சுவரில் அழகாகத் தீட்டப்பட்ட தேவியின் படம். அதை வெண் மையான மல்லிகை மாலை அலங்கரித்தது. நெளிந்து சுருண்டு கிடக்கும் கூந்தல் பின்னப்பட்டு முதுகில் வளைந்து கிடந்தது. கடைந்த தந்தம் போன்ற கரங்களில் தம்பூர். வாய் ஈசுவரியின் புகழைப் பாடிக்கொண்டிருந் தது.

சத்தியவிரதனைக் கண்டதும் மந்தாகினி துணுக் குற்று எழுந்தாள். ஒரு முறை அவன் நெஞ்சமும் திக் கென்று அடித்துக்கொண்டது.

"காலையில் தங்களை..." என்றான். தேய்ந்த குரலில், "கோவிலில் பார்த்திருப்பீர்கள்" என்று முடித்தாள் மந்தாகினி.

"தங்களுடைய அபூர்வ நாட்டியம் என்னை இவ்வளவு தூரம் அழைத்து வந்தது."

"அதில் ஒன்றும் வியப்பில்லையே? கலைக்கு அடிமை யாகாத இருதயம் இருக்கிறதா?"

"இந்த ஊரில் தாங்கள் கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரன் போல் இருக்கிறீர்கள். தங்களுக்குக் கௌரவம் அளிக்கும் திறமை இந்த மூடர்களுக்கு இல்லை."

"வாஸ்தவம். மதுரைவாசிகளின் மனம் என்னைப் பைத்தியம் என்று கொண்டிருக்கிறது. அதுவரையில் க்ஷேமமே."

"இன்னும் இரண்டு பாட்டுப் பாடத் தடங்கல் இல்லையே?"

"தடங்கல் எதுவும் இல்லை. ஆனால், கையில் மலர் ஹாரம் இருக்கிறதே. தேவியின் தரிசனத்திற்குப் பங்கம் ஏற்படுமோ என்று அஞ்சுகிறேன."

"பரவாயில்லை. அன்னையின் மார்பில் துலங்குவதற்கு வாங்கிய மாலையை என் பரிசாகத் தாங்கள் தாம் ஏற்றுக் கொள்ளுங்களேன். ஈசுவரிக்கு அது சம்மதமாக இருக்கலாம்" என்று மாலையை நீட்டினான்.

மந்தாகினி தயங்கியபடியே அதை வாங்கிச் சுவரிலிருந்த படத்திற்கு அணிவித்தாள். அதிலிருந்து உதிர்ந்த ரோஜா மலர் ஒன்றைத் தன் குழலில் செருகிக் கொண்டு பாட ஆரம்பித்தாள்.

'காலையில் தெய்வ ஸந்நிதியில் ஏற்பட்ட மனச் சாந்திக்கு அறிகுறியாக இருக்குமோ இது? கலையின் பரிசாக மலர்மாலையைக் கொடுத்த இவர் மனம் தூய்மையுடையதா? நான் தாசி என்பதை அறியார் போலும்! தெரிந்தால் அன்பைப் பகிர்ந்து கொடுப்பாரா? கொடுத்தால்?.........அதுவும் உண்டா?' என்று அவள் மனம் ஏங்கிற்று.

சத்தியவிரதன் அவள் கண்களில் மின்னும் வேதனையைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

தம்பூரை உறையில் வைத்துவிட்டு நிமிர்ந்தாள் மந்தாகினி.

"நாட்டியம் சதஸில் ஆடுவதற்குத் தாங்கள் அப்பியசிக்கவில்லையோ?" என்றான் சத்தியவிரதன்.

"அப்பியாசம் உண்டு. ஆனால் மனம் இல்லை."

"என்ன அபசாரம் இது? கலையைப் பலருடைய ரசனைக்குப் பகிர்ந்து கொடுப்பதுதான் உத்தமம்."

"முழு மனத்துடன் ஏற்க யாரும் இல்லை. அதனால்..." என்றாள் மந்தாகினி.

"இல்லை என்கிற தீர்மானத்துக்குத் தாங்களே வந்துவிட்டீர்களாக்கும்!" என்றான், பரிகாசம் கலந்த சிரிப்போடு.

மந்தாகினியின் கன்னங்களில் குபீரென்று ரத்தம் பாய்ந்தது. தலையைக் கவிழ்ந்துகொண்டாள்.

சத்தியவிரதனின் மனத்தில் அவ்வுருவம் வேகமாகச் சென்று ஒளிந்துகொண்டது.

"தாங்கள் இவ்வூரைச் சேர்ந்தவரா?" என்றாள் மந்தாகினி.

"இல்லை, தென்னாட்டுப் பிரயாணத்தை ஆரம்பித்து ஒரு மாதம் ஆகிறது பல்லவரின் கலைத்திறனை மாமல்லபுரத்தில் கண்டுவிட்டுத் தெற்கே ஒரு காலத்தில் பஃறுளியாறும், குமரியாறும் சேர்ந்து வளப்படுத்திய தமிழகம் துயிலும் குமரிபுனையைக் கண்டுவிட்டுப் போக விருப்பம். வழியில் பாண்டியனின் பதியை வெறுத்துச் செல்ல முடியவில்லை."

"இந்த ஊரில் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?" என்றாள் ஆவலுடன்.

"தங்குவதற்கு இடம் வேண்டுமா என்ன? காலையில் தங்கள் நாட்டியத்தைக் கண்டபிறகு ஆலயம் முழுவதும் சுற்றினேன். இடம் ஒன்றும் ஏற்படவில்லை."

"இந்த ஊரில் இருக்கிறவரையில் இவ்வில்லத்தில் தங்கத் தடங்கல் இல்லையே? நான் கேட்பதுகூடக் குற்றமோ?" என்றாள் கையிலிருந்த மலரின் இதழ்களை உதிர்த்துக்கொண்டே.

"நான் நினைத்ததற்குமேல் கிடைத்துவிட்டது" என்றான் முறுவலுடன்.

வெளியே நீல வானிடை மின்னும் தாரகைகள்; அவைகளின் நடுவே பூரித்து எழும் அம்புலி. சற்றுத் தொலைவில் கோபுர கலசங்கள் அவ்வொளியில் பளபளவென்று மின்னின.

மந்தாகினி படத்தருகில் சென்று கனன்றுகொண்டிருந்த அனலில் அகிறபொடிகளைத் தூவிவிட்டு வந்தாள்.

* * * *

"என்ன அழகு! என்ன செளந்தரியம்! அம்பிகையின் லாவண்யம் கண்களைப் பரவசப்படுத்திவிட்டது" என்றாள் மந்தாகினி.

"அதைவிட உன் லாவண்யம் என்னைப் பித்தனாக்கி விட்டதே. அதைப்பற்றி உன்னைத் தண்டிக்க யாரும் இல்லையா?" என்றான் சத்தியவிரதன்.

'தாங்கள்' போன்ற மரியாதைப் பதங்கள் மறைந்து விட்டன. மந்தாகினி இப்பொழுது அவன் உடைமை.

"என்ன பரிகாசம் இது?" என்று பிணங்கினாள்.

"பரிகாசம் இல்லை.........என் மனத்தை உனக்கே அர்ப்பணமாக்கிவிட்டேன்" என்று அவள் தளிர்க் கரங்களைப் பற்றினான்.

சுற்றிலும் அமைதியான தோட்டம். விருக்ஷங்களும் மலர்க் கொடிகளும் இவ் வார்த்தையை அசையாமல் கேட்டுக்கொண் டிருந்தன.

யுகக் கணக்காய் நீலக் கடலைப் பார்த்துச் சலியாமல் தவக்கோலம் பூண்டிருக்கும் கன்யா குமரியைப்பற்றிச் சத்தியவிரதன் மறந்துவிட்டான். அவன் பிரயாணம் மதுரையோடு முடிவடைந்தது. காசியில் இருந்த வயது சென்ற தந்தையையும், தொழிலையும் புறக்கணித்தது அவன் மனம். மாதந் தவறாமல் தந்தை பணம் அனுப்பி வந்தார். தம் தனயனின் நடத்தையில் அணுப் பிரமாணங் கூட அவருக்குச் சந்தேகமில்லை. தம் குமாரன் கலைப் பித்துக் கொண்டவன்; ஏதாவது ஆராய்ச்சியில் இறங்கி விட்டால் நாள் கழிவதுகூடத் தெரியாது என்பதை அவர் அறியாதவரா என்ன? இருந்தாலும் அவர் மனம் வேதனையில் ஆழ்ந்தது. "மதுரையில் மாதக் கணக்கில் தங்குவானேன்? மற்றப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு சீக்கிரம் வந்துவிடு. தினம் வித்தியார்த்திகள் வந்து அலைந்து விட்டுப் போகிறார்கள். நீ இருக்கும்போது சுலபமாக இருந்த ஆரியம் இப்பொழுது அவர்களுக்குக் கடினமாகப் போய்விட்டது. அவர்களுக்குப் போதிக்கத் தகுந்த சராசக்தி எனக்கு இல்லை" என்று கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டார்.

இந்தக் கடிதங்களைப் படிக்கும்போது அவன் மனம் இருண்டுவிடும். மேகத் திரளால் மறைக்கப்பட்ட வானம் போல் இருள் சூழ்ந்துவிடும் அந்த மனத்தில். அந்த இடத்தைத் துருவிக்கொண்டு வரும் கதிரவனைப்போல் மந்தாகினி உதயமாவாள். அப்படியும் குழப்பம் அடங்காவிடில் இருக்கவே இருக்கிறது அவள் அபூர்வ நாட்டியம்! சத்தியவிரதன் யோசனையில் ஆழ்ந்திருந்தான். நேற்றுக் காசியிலிருந்து வந்த கடிதத்தில், "என் உடம்பு மிகவும் பலஹீனமாயிருக்கிறது. சத்தியா! உன் கலை ஆராய்ச்சி போதும். சாவதற்கு முன் உன் முகத்தைக் காட்டப்பா" என்று எழுதியிருந்தார் தந்தை.

ஒரு புறம் தந்தையின் பாசம். மற்றொரு புறம் மந்தாகினியிடம் வைத்த பிரேமை. துக்கம் நிரம்பிய மனத்தோடேயே அந்தப் பகற்பொழுது கழிந்தது.

எப்படியாவது மந்தாகினியிடம் சொல்லிக்கொண்டு இரவு கிளம்பவேண்டுமென்று சங்கற்பித்துக்கொண்டான். இரவும் அந்தப் பிரிவை எண்ணி வருந்துவது போல் மெதுவாக வந்தது.

நீள் விசும்பில் மங்கிக் கிடக்கும் மூளிச் சந்திரன். தீவுகள்போல் வெண்மேகங்கள் அங்கும் இங்கும் அலைந்தன. எதிரில் மாமரத்தில் பிரிவை ஏங்கிக் கதறும் பூவை. எங்கும் நிச்சப்தம். பிரிவின் ஏக்கம்.

மந்தாகினி நீர் மல்கிய விழிகளுடன் அவனை ஏறிட்டு நோக்கினாள்.

"அன்பே! இந்தப் பிரிவை உன்னால் சகிக்க முடியாதா? தவணை அவ்வளவு நீண்டதல்லவே. இரண்டு மாதங்களில் வந்துவிடுவேன்."

"என்னையும் உங்கள் ஊருக்கு அழைத்துப் போகலாமே" என்றாள்.

"ஐயோ! இதென்ன கேள்வி? தந்தையின் காலத்திற்குப் பிறகு என் மனம் போனபடி செய்யலாம். அவருடைய ஆசாரசீலத்திற்கு அது முடியுமா?" என்று உருகிற்று அவன் உள்ளம்.

தாங்க முடியாத சோகத்தால் மந்தாகினியின் அதரங்கள் துடித்தன.

சத்தியவிரதன் அவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"இதென்ன பதட்டம்? உன்னை மறந்துவிடுவேனா? பைத்தியமே!"

"மறக்க மாட்டீர்களா? சீக்கிரம் திரும்ப வேண்டும்."

"இன்று என்ன கிருஷ்ண பக்ஷத்துப் பஞ்சமி அல்லவா? இன்றைக்கு அறுபதாம் நாள் பஞ்சமி அன்று உன் கிருகத்தில இருப்பேன்."

"உண்மைதானா? ஆனால்,......" என்று அவள் மார்பு விம்மிற்று.

மாசி வீதியில் கடகடவென்று வண்டியின் சப்தம். இரண்டு கயல் விழிகள் அதன் உருவம் மறையும் மட்டும் பார்த்துக்கொண்டு நின்றன.

சாம்பிய மனத்துடன் அம்பிகையின் பாதத்தில் மலர்களைத் தூவி நமஸ்கரித்தாள் மந்தாகினி. அச் செய்கை அவளுக்கு ஆறுதல் அளித்தது.

* * *

கிருஷ்ண பக்ஷங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று கழிந்தன. 'வருவார்' என்ற நம்பிக்கைச் சுடர் மங்க ஆரம்பித்தது. விகிதம் வந்துகூட ஒரு மாதம் ஆகிவிட்டது. ஒருவேளை தந்தைக்கு ஏதாவது உடம்போ? "பிரேமையின் ஆழத்தை நான் அறியமாட்டேனா? கிடைத்தற்கரிய பொருள் கிடைத்தது. அதை ஒளித்துவிடுவாயோ ஈசுவரி?" என்று சாம்பினாள்.

மந்தாகினியின் வதனம் நகையிழந்தது. சத்தியவிரதனை அடைவதற்கு முன் வைகறையில் தேவியின் கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்தவள் இப்பொழுது வீட்டை விட்டு வெளிவருவதில்லை. மதுரைவாசிகள் மந்தாகினியைப் பார்த்து மாதக்கணக்கில் ஆகிவிட்டது.

ஒரு நாள் மாலை திடீரென்று ஆலயத்தில் 'சரசர' வென்று எதையோ எழுதிக் கோவில் அதிகாரியிடம் கொடுத்து விட்டுச் சென்றாள் மந்தாகினி. பிறந்தது முதல் பிரிந்தறியாத மதுரையைப் பிரிந்து இரவில் வைகையைக் கடந்து ரெயிலில் சென்றுவிட்டாள். 'காசியில் சத்தியவிரதனைக் கண்டு அவனிடம் அடைக்கலம் புகுவது; அல்லது இருக்கவே இருக்கிறாள் கங்கை அடைக்கலம் அளிக்க' என்ற எண்ணம்.

சத்தியவிரதன் மதுரையிலிருந்து திரும்புவதற்குள் அவன் தந்தை பெண் பார்த்து வைத்திருந்தார். குமாரனின் கல்வியைப் பற்றி நன்றாய் அறிந்த அவர், மங்கை மைந்தனுக்கு ஒத்தவளாக இருக்க வேண்டுமே என்கிற கவலையுடன் இருந்தார். பெண் கவிதா சக்தி நிரம்பியவள். உள்ளத்தின் கம்பீரம் முகத்திலும் பிரதிபலித்தது. மந்தாகினியைப் போல் பேதை அல்ல. மந்தாகினி வியாகரணம், இலக்கியம், வேதாந்தம் முதலியவைகளைப் படிக்கவில்லை. குறைவில்லாத பிரேமையை வேண்டியவள்.

சத்தியவிரதன் ஊருக்குத் திரும்பியதும், "என்ன சத்தியா! மதுரை உன்னைக் கவர்ந்துவிட்டதா? என்னைக் கூட அடியோடு மறந்துவிட்டாயே. நான் கண்ணை மூடின பிறகு எங்கேயாவது போகலாம்" என்றார் பிதா.

"இல்லை அப்பா! மதுரையில் வேலை இருக்கிறது" என்று சிந்தனையுடன் கூறினான்.

"உனக்குக் காசியில்தான் வேலை. மதுரையில் இல்லை' என்று மொழிந்தார் முதியவர்.

"மந்தாகினியை மறந்துவிடுவதா? அந்தப் பேதை நெஞ்சம் எப்படி வாடுகிறதோ? அவளையே மணந்து கொண்டால் என்ன? தந்தையின் நியமம்! அவர் ஒரு நாளும் ஒப்பமாட்டார். காதல் கருகிவிடுமே. தந்தையின் பாசம் அறுந்துவிடுமோ? அவருக்கு என்னைக் கிருகஸ்தனுக்கும் விருப்பம் தினம் அதிகரித்தே வருகிறதே. மந்தாகினி! நீ ஏன் தாசிகுலத்தில் பிறந்தாய்?"

இந்தக் குழப்பத்துடன் மணம் நடந்தது.

மனைவி விற்பன்னை கங்கையில் நீந்திச் செல்லும் படகுகளையும், உதய சூரியனையும் அஸ்தமன ஜோதியையும், மலரின் மந்தஹாஸத்தையும் கவிதையின் மூலம் படம் பிடித்துக் காட்டினாள். கவிதைகள் நல்ல கற்பனையில் தோய்ந்தவை. சத்தியவிரதனின் மனம் மந்தாகினியை மெதுவாக மறந்துவிட்டது.

*   *   *   *

காசியில் சத்தியவிரதனின் மனையைக் கண்டு பிடிப்பது சிரமம் அல்ல. ஊர் அரவம் அடங்கிவிட்டது. இரண்டொரு பண்டாக்கள் சாலையோரமாகப் போய்க் கொண்டிருந்தனர். பளபளவென்று மின்னும் கற்களால் ஆன மாளிகை. அதைச் சுற்றி நாலுபுறமும் விருக்ஷங்கள் சூழ்ந்திருந்தன. மலர் செறிந்த வகுளமரம். அதனடியில் சத்தியவிரதன். அவன் பக்கலில் ஓர் அரம்பை; ஆகாயத்தில் தேய்ந்த நிலவு. சத்தியவிரதன் அவளுடன் சல்லாபித்துக்கொண்டிருந்தான். திடீரென்று அவள் பிணங்கி ஒதுங்கி, "நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன்" என்றாள்.

"என்ன விஷயமோ?"

"தென்னாட்டில் மதுரையில் ஓர் பரத்தையின் நேசம் உங்களுக்கு உண்டோ?"

அவன் நெஞ்சம் துணுக்குற்றது.

"யார் சொன்னது? வீண் வம்பு. அவள் நாட்டியத்தில் தேர்ந்தவள். அதன் நுட்பங்களை அறிய அங்கே தங்கியிருந்தேன். வேறு நேசம் ஒன்றும் இல்லையே" என்று திடமாக மொழிந்தான்.

"அப்படியா? நான் கேட்டவுடன் பயந்து போனீர்களே?" என்று தன் மெல்லிய விரல்களால் அவன் கன்னத்தில் தட்டினாள்.

மந்தாகினியின் நம்பிக்கை சிதறிப்போயிற்று. காசியில் எங்கே போவது? 'என் மனத்தை அவருக்கு அர்ப்பணமாக்கினேன். அதை வரவேற்க அவர் தயாராக இல்லை.' பளிச்சென்று ஓர் எண்ணம்.

கங்கைக் கரை நிர்மானுஷ்யமாய் விளங்கிற்று. ஸ்படிகம்போல் சென்றுகொண்டிருந்தாள் கங்காதேவி. முகத்தில் என்றும் இல்லாத குதூகலம் நிரம்பி வழிய இடுப்பளவு நீரில் நின்றுகொண்டிருந்தாள் மந்தாகினி. தொலைவில் பாண்டியனின் மதுரை. அதனுள் குறுகிச் சுருண்டு செல்லும் வைகை, மீனாக்ஷி ஆலயம் முதலியன கண் எதிரில் மிதந்து வந்தன.

வானில் மூளிச் சந்திரன்.

"உன்னை மறந்துவிடுவேனா? பைத்தியமே!" என்ற அமுதமொழிகள்.

குபுக்கென்று நீரில் அமிழ்ந்தாள் மந்தாகினி.

நிர்மானுஷ்யமான அந்த இடத்தில் ஒரு ஜீவன், துடிக்கும் தன் உள்ளத்தின் வார்த்தைகளை நதியிடம் முறையிட்டது. அதுவும் மறைந்துவிட்டது அந்த நதியிலே.

# 20

## கல்யாணி

எனக்குச் சிறுவயதிலேயே கல்யாணம் ஆகிவிட்டது. புக்ககத்தில் நிறைய மனிதர்கள். அவர்கள் என்னைக் கல்யாணத்தில் படுத்தி வைத்த பாட்டை நினைத்தால் பயமாகத்தான் இருக்கிறது!

என் கணவருக்கு அந்தக் குடும்பத்தில் தனி மதிப்பு இருந்தது. தமிழ்ப் பத்திரிகைகளுக்குக் கதை எழுதுவார். இதையெல்லாம் நினைத்தபோது எனக்குப் பெருமை அளவு கடந்து பொங்கிக்கொண்டிருந்தது. கல்யாணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு மாடித் தாழ்வாரத்தில் திறந்த வெளியில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். என் மனம் அவரைப்பற்றித்தான் கனவு கண்டுகொண்டிருந்தது. அசைவில் பார்த்த அழகிய உருண்டை முகம்; விசாலமான நெற்றி; அதில் விழுந்து புரளும் கூந்தல்; கண்களின் குறும்புத்தனத்தை மறைக்கும் கண்ணாடி. கதர் ஜிப்பா. 'நீ அதிருஷ்டசாலி!' என்று என் மனமே எனக்கு நற்சாட்சிப் பத்திரம் அளித்தது.

இப்படி மெய்மறந்து இருந்தபோது என் கண்களைப் பின்புறமாக இரு கரங்கள் வந்து பொத்தி உணர்வு பெறச் செய்தன. குழந்தையின் கரங்கள்தாம்! வளை அணிந்த கரம். நீண்ட அழகிய விரல்கள். கைகளை விடுவித்துக்கொண்டு திரும்பிப் பார்த்தேன். அவருடைய சாயலாகவே சிறுமி ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள். அந்தப் பெண் ஆச்சரியத்தால் வாயைத் திறந்தவண்ணம் என்னைப் பார்த்துவிட்டு, "மன்னி, பாபு இதை உன்னிடம் கொடுக்கச் சொன்னான்" என்றாள் ஒரு கடிதத்தை நீட்டியபடியே.

அவளைப் பிடித்து இழுத்து என் மடியில் உட்கார வைத்துக்கொண்டேன்.

"ஆமாண்டி கண்ணே! உன் பெயர் என்ன?" என்று கேட்டேன். "கல்யாணி" என்று கொஞ்சிக்கொண்டே சொல்லிற்று அந்தப் பெண்.

"அண்ணாவிடமிருந்து கடிதம் கொண்டு வந்தாயே, நான் இங்கே இருப்பது உனக்கு எப்படித் தெரிந்தது?"

கல்யாணி மோவாய்க்கட்டையில் கையை வைத்துக் கொண்டாள்.

"இது தெரியாதா மன்னி? பாபுதான் பார்த்துச் சொன்னான். அதோ மொட்டை மாடியில் எங்காத்தி லிருந்து பார்த்தால் தெரியலையா மன்னி?"

அவள் பேச்சும் குலுக்கும் என் மனத்தை மகிழ்வித் தன.

"அண்ணாவைப் போய்ப் பெயரிட்டுக் கூப்பிடுகிறாயே. கூப்பிடக் கூடாதடி கண்ணே!" என்றேன்.

"பாபுவை அப்படித்தான் கூப்பிடுவேன். உன்னை வேண்டுமானால் மன்னி என்று கூப்பிடுகிறேன்" என்று பளிச்சென்று பதில் சொன்னாள்.

அவர் அனுப்பிய கடிதத்தைப் படிக்கக்கூட மனம் வராமல் அந்தப் போக்கிரிப் பெண்ணோடு பேசுவதிலேயே காலம் போய்விட்டது. அவள் கையில் இரண்டு லட்டுக ளைக் கொடுத்து என்னை மீட்டுக்கொண்டேன்; என் உள் ளத்தை அல்ல.

* * * *

பரிவுடன் கூடிய அவர் முகமும் கல்யாணியின் களங்கமற்ற முகமும் என்னைப் பிறந்தகத்தில் இன்பத் தில் ஆழ்த்தி வந்தன. கதை எழுதுகிறவர் அல்லவா? கடி தமும் கற்பனை ரசத்தில் தோய்த்தே எழுதப்பட்டிருக்கும். பாதி படிப்பதற்குள் ஒவ்வொரு சமயம் தலையை வலிக்க ஆரம்பித்துவிடும். கவரில் கொட்டை கொட்டையான எழுத்தில், "சின்ன மன்னிக்கு நமஸ்காரம்" என்ற வரிகள் என் கண்ணில் பட்டுவிட்டால், அவர் கடிதத்தை வைத்துவிட்டு, அந்த இளம் இருதயத்தின் நிர்மலமான வாக்கியங்களைப் படிக்க ஆரம்பித்துவிடுவேன்.

"மன்னி, நீ சீக்கிரம் வந்துவிடு. நீயும் நானும் விளையாடுவதற்காகப் பாவைத் தொந்தரவு செய்து கேரம் வாங்கி வைத்திருக்கிறேன். என் சிநேகிதிகளிடமெல்லாம் உன்னைப்பற்றியே சொல்லியிருக்கிறேன்" என்கிற வரிகளைப் படிக்கும்போது கண்கள் மளமளவென்று நீரைப் பெருக்க ஆரம்பித்துவிடும். "பாவை அப்படித்தான் கூட்டிடுவேன்" என்று அவள் உறுதியாகச் சொன்ன வார்த்தைகள் என் காதில் ஒலித்தன.

வருஷப் பிறப்பன்று அவருடன் அவள் வருவாள் என்று எதிர்பார்த்தேன். எதிர்பார்த்ததற்கு மாறாக என் தாயார் இறந்து போய்விட்டாள். அந்தப் பெரிய துயரில் மாப்பிள்ளை அழைப்பை மறக்கத்தான் வேண்டியிருந்தது. என் மனம் மட்டும் கல்யாணியைக் கற்பனை செய்து பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது ஒன்பது, பத்து வயதாய் இருந்தவள் கொஞ்சம் உயரமாய் வளர்ந்திருப்பாள் என்று எனக்குள் எண்ணி மகிழ்ந்தேன். கல்யாணமாகி மூன்று வருஷங்கள் கழித்து அவர் என்னை அழைத்துப் போக வந்தார். அவர் வருவதற்கு முன்பே பல கடிதங்களில் கல்யாணியை அழைத்து வரச் சொல்லி எழுதியிருந்தேன். வாசலில் 'டாக்ஸி' வந்ததும் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தபோது அவர் மட்டும் இறங்குவதைக் கண்டேன். மனம் சஞ்சலப்பட்டது.

"கல்யாணியை ஏன் அழைத்து வரவில்லை? எழுதியிருந்தேனே" என்று கேட்டேன்.

"என்னைவிடக் கல்யாணிதான் உனக்கு முக்கியமா?" என்றார் அந்த எழுத்தாளர்.

"இல்லை.........அவளைப் பார்க்கவேண்டும்போல் இருக்கிறது."

"ஊருக்குப் போனால் பார்க்கத்தானே போகிறாய். அவள் நடுவில் வந்துவிட்டால் என்னைக்கூடக் கவனிக்க மாட்டாய் நீ" என்றார் சிரித்துக்கொண்டே.

உண்மைதான். அவர் வீட்டில் காலடி வைத்தவுடன் ஆரத்தித் தட்டுடன் அவளே எதிரில் வந்தாள். பருவத்

தின் மலர்ச்சியோடு ஒருவித வெட்கமும் அவள் முகத்தில் பரவியிருந்தது. அவள் இடுப்பைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்த மேலாக்கு காற்றில் பின்புறம் பறக்க, "மன்னி!" என்று புன்முறுவலுடன் என்னைப் பார்த்தாள்.

"கல்யாணி!" என்று அவர் கையை விட்டுவிட்டு அவள் கரத்தைப் பிடித்தேன்.

"மன்னி, உன்னைப் பார்க்காமல் எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா?" என்று என் தோளில் சாய்ந்து கண்ணில் நீர் துளும்பச் சொன்னாள் கல்யாணி!

"எனக்கும் அப்படித்தான் இருக்கிறது கல்யாணி! அண்ணாவோடு நீ ஏன் வரவில்லை?"

"பாபுவா அழைத்துக் கொண்டு போகிறவன்? அடே அப்பா! மன்னிகளெல்லாம் நல்லவர்கள் தாம். இந்த அண்ணாமார்கள் தாம் சுவர்க்கத்தைக் கண்டமாதிரி மயங்கிப் போகிறார்கள்" என்று கையை விரித்துத் தலையை ஆட்டினாள்.

*　　　　*　　　　*　　　　*

கதைகளையெல்லாம் 'காப்பி' செய்து அனுப்பும் வேலை என் தலையில் விழுந்தது. என் பின்புறம் மறைந்து வரும் கல்யாணியை நிர்த்தாக்ஷிண்யமாய் வெளியிலேயே நிறுத்திக் கதவைத் தாழிட்டுக்கொள்வார் அவர்.

"ஆமாம்; என்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டாயே, கல்யாணியோடு விளையாடத்தானே?" என்று கேட்டார்.

"அவள் குழந்தைதானே?"

"நீயும் குழந்தைதான்! குழந்தையைப் போய்க் கல்யாணம் பண்ணிக்கொண்டேனே. என்னைத்தான் சொல்ல வேண்டும்."

"இதோ பாருங்கள். உங்களிடம் எனக்கு அன்பு இல்லையா? என்னிடம் அளவுக்கு மீறி அன்பைச் செலுத்தும் அந்தப் பெண்ணை உதாசீனம் செய்ய என்னால் முடியவில்லை. அவள் உங்கள் தங்கைதானே?"

"என் தங்கையைப் பற்றி எனக்குந் தெரியும். இந்த இரண்டு கதைகளையும் 'காப்பி' செய்து அனுப்ப வேண்டும். தெரிந்ததா? நடுவில் நேரம் ஆடப் போனால் அது வெந்நீர் அடுப்புக்குப் போய்விடும்."

புருஷர்களின் ஆக்ஞை பிரமாதமானது அல்லவா? 'பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதை' யாகக் கதைகளை எழுத ஆரம்பித்தேன். கல்யாணி நாளடைவில் என்னைப்பற்றித் தவறாக நினைக்க ஆரம்பித்தாள்.

"பாபுவின் அறையிலேயே ஐக்கியமாகிவிடுகிறாயே மன்னி! நீ முதலில் இருந்த மாதிரி இல்லை" என்பாள்.

கல்யாணி அன்று மலர்ந்த புஷ்பம்போல் விளங்கினாள். குதிப்பும் சிரிப்பும் போய் லஜ்ஜைப்பட ஆரம்பித்தாள். அவள் அண்ணா எதிரில் வரக்கூட அவளுக்குப் பிரமாதமான வெட்கம். "கல்யாணிக்கு வயதாகி விட்டது பாபு. உன் ஆபீஸில் நல்ல வரனாகப் பாரேன்" என்று அம்மா தொந்தரவு செய்ய ஆரம்பித்தாள். கடைசியில் கல்கத்தாவில் வேலையாக இருந்த பிள்ளை ஒருவன் என் பொல்லாத கல்யாணியை ஏற்றுக்கொண்டான். மாப்பிள்ளை தீபாவளிக்கு வந்தபோது கல்யாணியை வெளியிலேயே பார்க்க முடியவில்லை.

"பார்த்தாயா அவளை? உன்னை என்னோடு தனியாகப் பேச விடமாட்டேன் என்றவள் அகத்துக்காரரைத் தனியாக விடமாட்டேன் என்கிறாள்" என்றார் இவர்.

தீபாவளி கழித்து மாப்பிள்ளை கல்யாணியைக் கூடவே அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தார். ஊருக்குப் போகும் தினம் வந்தது. சிறுமியாய் என்னுடன் விளையாடிய கல்யாணி தலை குனிந்து என் அறைக்குள் நுழைந்தாள்.

"மன்னி, பாபு இல்லையா இங்கே? பாபுவுடன் பேசவிடாமல் உன்னை என்ன பாடு படுத்தி வைத்தேன்? இப்பொழுதுதான் தெரிகிறது மன்னி; பாபுவுக்கு ஆசை எவ்வளவு இருந்திருக்கும் என்று. அதற்காக உன் பேரில் கூடக் கோபித்துக்கொண் டிருந்தேன். அதையெல்லாம்

மனத்தில் வைத்துக்கொள்ளாதே மன்னி" என்று கண்ணீர் வழியக் கூறினாள்.

"அசடே! அப்பொழுது நீ சிறிசு. உன் பேரில் கோபங்கூட வருமா கண்ணே?" என்றேன்.

"கல்யாணி!" என்று மாப்பிள்ளை கூப்பிட்டார். வெட்கத்தால் கல்யாணியின் முகம் சிவந்தது.

"மன்னியோடு விளையாடுகிறாளா?" என்றவாறு மாப்பிள்ளை வாசற்படி அருகில் வந்து நின்றார்.

"மன்னியோடு பேசுவது இன்னும் சில மணி நேரந்தான். உங்கள் தங்கையைக் கொஞ்சம் அடக்கி வையுங்கள். இல்லாவிட்டால் உங்கள் பாடு திண்டாட்டந்தான்" என்றேன்.

"போ மன்னி!" என்று என் வாயை இறுகப் பொத்தினாள்.

# 21

# பிரதி பலன்

வாசுதேவன் ஆபீஸிலிருந்து வந்ததும் முக்கியமாகக் கவனிப்பது ரோஜாச் செடியையும், அதில் எத்தனை அரும்புகள் இருக்கின்றன என்பதையுந்தான். தெருக் கோடியை அடையும்போதே செழித்து வளர்ந்திருக்கும் அந்தச் செடியைக் கண்டு ஆனந்தப்பட்டுக் கொண்டே வருவான். அவன் இவ்வளவு அரும்பாடு பட்டு வளர்த்த செடி தன் போக்காகப் பக்கத்து வீட்டு இரும்புக் கிராதிமீது படர்ந்து செழித்திருந்தது. அந்த வீட்டில் வெகு காலமாக யாரும் குடி இல்லை. வழக்கும் வியாஜ்யமுமாய் அந்த வீடு கவனிப்பாரற்றுக் கிடந்தது. வாசுதேவனின் ரோஜாச் செடியும் தன் யதேச்சாதிகாரத்தைச் செலுத்துவதற்கு இது உதவியாக இருந்தது.

காலையில் செடியில் மலர்ந்திருந்த புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு, மறுதினம் மலரப் போகும் அரும்புகளை எண்ணி வைத்துவிட்டு ஆபீஸுக்குப் போயிருந்தான். மாலையில் திரும்பி வந்தபோது பக்கத்து வீடு திறந்து கிடந்தது. அதை அவ்வளவாகக் கவனியாமல் பாதி மலர்ந்து நகைபுரியும் ரோஜா மொட்டுக்களைப் பார்ப்பதில் ஈடுபட்டிருந்தான் அவன். சிவந்த ரோஜா மொட்டுக்களின் நடுவே வெள்ளை வெளேரென்று இன்னொரு ஜாதிப் புஷ்பங்கள் தெரிவது என்ன அதிசயம்? கவனித்துப் பார்த்தபோது இளங் கொடிகளில் அப்பொழுதுதான் மலர்ந்த முல்லை மலர்கள் காணப்பட்டன. அந்தப் பொல்லாத முல்லைச் செடி இவ்வளவு சடுதியில் அவன் அருமைச் செடியைத் தழுவிக் கொள்ள ஆரம்பித்து விட்டது!

முல்லைச் செடி மதில் சுவருக்கு அப்பால் வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய பூந்தொட்டியிலிருந்து முளைத்திருந்தது. இரும்புக் கம்பி வழியாக வாசுதேவன் அந்தத்

தொட்டியைக் கவனித்துச் சிந்தனையில் ஆழ்ந்தான். ரோஜாச் செடியைச் சுற்றிக் கொண்டு அதை வளர விடாமல் தடுக்க முல்லைச் செடித் தொட்டியை யாரோ வைத்திருக்கிறார்கள் என்று நினைத்தான். கையில் பாதி மலர்ந்த புஷ்பம் ஒன்றைப் பறித்து எடுத்துக்கொண்டு உள்ளே போய், அதைப் பூ ஜாடியில் வைத்துவிட்டு, ஈஸி சேரில் சாய்ந்தபடியே யோசனையில் ஆழ்ந்தான் அவன்.

* * * *

பக்கத்து வீட்டு அறையிலிருந்து ஒரு பெண் உருவம் குதித்து ஓடி வந்தது. ஓகோ! அடுத்த வீட்டில் யாரோ குடி வந்திருக்கிறார்கள்போல் இருக்கிறது என்று நினைத்தான் வாசு. குறும்பு தவழச் சிரித்துக்கொண்டே முல்லைப் புஷ்பங்களைப் பறிக்க அந்தப் பெண் ஓடி வந்தாள். அவள் புஷ்பங்களைப் பறிக்கும்போது சிவப்பு ரோஜா அவள் திருஷ்டியைக் கவர்ந்தது. சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே அதை இலையோடு திருகி எடுத்துத் தலையில் செருகிக்கொண்டாள். கருங் கூந்தலுக்கு அந்தச் சிவப்பு நிறம் பொருத்தமாய் இருந்தது. வாசுதேவன் இதையெல்லாம் பார்த்துப் பல்லைக் கடித்துக் கொண்டான். முன் பின் தெரியாத இடத்திலிருந்து பூவைத் திருகி வைத்துக்கொண்டு போக எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டும்? முல்லைப் புஷ்பங்களை மடியில் வைத்துக்கொண்டு உள்ளே ஓடிப் போய்விட்டாள் அவள். வாசுதேவன் வெளியே வந்து மெதுவாக முல்லைக் கொடிகளை ஜாக்கிரதையாக ரோஜாச் செடியை விட்டுப் பிரித்து எடுத்துத் தொட்டியில் விட்டுவிட்டான். அவள் ஜன்னல் வழியே பார்த்துக்கொண் டிருந்தாள்.

வாசுதேவன் அவள் நிற்பதைக் கவனிக்கவில்லை. அன்றைத் தினத்திலிருந்து அவனைக் கவலை பிடித்துக் கொண்டது. தான் ரோஜாவை வளர்க்கப் பகீரதப் பிரயத்தனம் செய்ததும், அது புஷ்பிக்கப் போகிறதா என்று ஏங்கினதும் அவனுக்கல்லவா தெரியும்? மனத்துக்குப் பிடித்த வஸ்துவை, 'இந்தா எடுத்துக்கொண்டு போ' என்று யார் கொடுத்து விடுகிறார்கள்?

காலையில் எழுந்தவுடன் செடியண்டை போய்ப் பார்த்தான். என்ன ஆச்சரியம்? முல்லைக் கொடிகள் முன்னை விட அதிகமாக ரோஜாவின்மேல் படர்ந்திருந்தன. அவன் ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தான். 'சீ! ஒரு பெண்ணுக்கு இவ்வளவு துணிச்சலா?' திரும்பவும் கொடிகளைத் தொட்டியிலேயே எடுத்து விட்டான். அவள் ஜன்னல் வழியே பார்த்துக்கொண்டே இருந்தாள். அப்பொழுதும் அவன் அவளைக் கவனிக்கவில்லை. பிறகு அவசரமாக ஆபீஸுக்குப் போய்விட்டான்.

* * * *

பத்துத் தினங்கள்வரையில் இவன் முல்லைக் கொடிகளைப் பிரிந்து விடுவதும், அவள் அதை மறுபடியும் படர விடுவதுமாகப் போட்டி போட்டுக்கொண்டிருந்தனர். கேவலம் இதை ஒரு பொருட்டாக எண்ணி அவளுடன் சண்டை போடுவதும் அழகல்ல என்று தோன்றியது அவனுக்கு. பெரியவர்களிடம் சொல்லுவதைவிட அவளுக்கே தனியாய் ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்துக்கொண்டான். ஒரு நாள் ரோஜாச் செடியில் முள் நிறைந்த கிளைகளை முல்லைச் செடியோடு சேர்த்துக் கட்டிவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பொல்லாத பெண் வழக்கம் போல் வாசுதேவனின் புஷ்பங்களைத் திருட வந்தாள். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு அவசர அவசரமாகப் பறிக்க ஆரம்பித்தாள். பாவம்! ஐந்தாறு முட்கள் சேர்ந்தாற்போல் விரல்களில் கீறி விட்டன. ரத்தம் குபுகுபுவென்று வந்தது. அவள் முகம் சிவந்தது. கையிலிருந்த புஷ்பங்களை வீசி எறிந்துவிட்டு விக்கி விக்கி அழுது கொண்டே உள்ளே போனாள். வாசுதேவன் மனத்திற்குள் சொல்லிக்கொண்டான்: "பக்கத்து வீட்டில் பாடுபட்டுச் செடி வளர்க்கிறது ஒருத்தன். இவள் ஆடிக் கொண்டே வந்து பறித்துக்கொண்டு போகிறது! வேண்டும் நன்றாய்" என்று. இப்படி இவன் நினைத்துக்கொண்டு இருந்தபோது அடுத்த வீட்டில் யாரோ இரையும் சப்தம் கேட்டது. "ஆமாம், உனக்கு எத்தனை தடவை சொல்லுகிறதடி ருக்மிணி? யாரோ எவனோ? அங்கெல்லாம்

வம்புக்குப் போகாதே என்று?" என்று அந்தப் பெண்ணின் தாயார் கத்தினாள். இன்னும் கொஞ்ச நேரம் கழித்து, "போடீ! அழுதுகொண்டு நிற்கிறாய்" என்று மேலும் கோபித்துக்கொண்டாள். வாசுதேவன் மனத்தை என்னவோ செய்தது. 'பாவம்! ரொம்பக் காயம் பட்டு விட்டதோ என்னவோ? என்ன முட்டாள் காரியம் செய்தோம்?' என்றெல்லாம் நினைத்துக்கொண்டான்.

* * * *

வாசுதேவன் இயற்கை ரஸிகன். கண்ணுக்கு இனிமை தரும் பசுமையைப் போற்றி வளர்ப்பான். அவன் இருந்த வீடு சிறியதாய் இருந்தாலும் சுற்றிலும் செடிகள் வைத்திருந்தான். ஒழிந்த வேளைகளில் தோட்ட வேலை செய்துகொண்டே இருப்பான். செடியிலிருந்து அநாவசியமாக ஓர் இலையை யாராவது பறித்துவிட்டாலும் கோபம் வந்துவிடும்.

மேஜைமேல் வைத்திருந்த பூஜாடியில் புஷ்பங்கள் குலுங்கின. நாளையிலிருந்து இன்னும் வேண்டிய புஷ்பங்கள் ஜாடியில் குலுங்கும். ருக்மிணி கையில்தான் காயமாயிற்றே. அந்த நினைவில் இருந்தபோது, ருக்மிணி தயங்கியபடியே உள்ளே வந்தாள். அவன் ஆச்சரியத்தால் அவளை உற்றுப் பார்த்தான். அவள் தலையைக் குனிந்துகொண்டே, "இனிமேல் உங்கள் ரோஜாச் செடியின் ஜோலிக்கு நான் வரப்போகிறதில்லை. இத்தனை நாள் செய்த தப்புக்கு என்னை மன்னிக்க வேண்டும்" என்று இரண்டு கைகளையும் கூப்பினாள். கூப்பிய கரம் ஒன்றின் விரல்களில் துணி சுற்றப்பட்டிருந்தது. அதன்மேல் செவேலென்று ரத்தக் கறை படிந்திருந்தது. வாசுதேவன் திடுக்கிட்டான்.

"ஐயையோ! ரொம்பவும் கீறிவிட்டதா என்ன?" என்றான். ருக்மிணி சிரிப்பை வரவழைத்துக்கொண்டாள்.

"இல்லை, இல்லை, நான் செய்த தப்புக்குச் சரியான தண்டனைதான்" என்றாள்.

"நீ என்ன அப்படித் தப்புச் செய்துவிட்டாய்?" என்று அவளை உருக்கத்தோடு கேட்டான்.

"நீங்கள் வேர்வை ஒழுகக் கொத்திப் பயிராக்கிய செடியிலிருந்த புஷ்பங்களை யெல்லாம் பறித்துக்கொண் டேனே, இல்லையோ ?"

"அதனால் என்ன ?"

"அது தவறு என்று நேற்றுத்தான் தெரிந்தது."

"ரொம்ப வலிக்கிறதா ? ரத்தம் கசிந்துகொண்டே இருக்கிறதே."

"வலித்தால் வலித்துவிட்டுப் போகட்டும்; உங்க ளிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுப் போகலாம் என்று வந்தேன்."

"ஐயோ ! நான் அல்லவா உன்னை மன்னிப்புக் கேட்கவேண்டும்? நாளைத் தினமே ரோஜாச் செடியைப் பிடுங்கி எறிந்துவிடுகிறேன்."

ருக்மிணி புன்னகையுடன் தலையை ஆட்டினாள்.

"வேண்டாம், வேண்டாம். அந்தச் சிவப்பு நிறம் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது."

"நீதான் செடிப் பக்கமே வரப்போகிறதில்லை என்கிறாயே? செடி இருந்து என்ன பயன் ?"

"தொலைவில் இருந்து கண்ணால் பார்த்துக் களித்தால் போகிறது. செடியைமட்டும் பிடுங்கி எறிந்துவிடாதீர் கள்" என்று கண்ணைச் சிமிட்டியவாறு ருக்மிணி சொல்லிக்கொண்டே ஓடிப் போய்விட்டாள்.

* * *

சில தினங்களுக்கு அப்புறம் ருக்மிணியின் தகப்பனாரை அந்த ஊரைவிட்டு மாற்றிவிட்டார்கள். வாசுதேவன் ஆபீஸிலிருந்து வருவதற்குள் அவர்கள் போய்விட்டார் கள். ருக்மிணியை அன்றைத் தினத்திற்கு அப்புறம் அவன் காணவே இல்லை. அவனுக்குத் தெரியாமல் மறைவில் இருந்தே ரோஜாவைப் பார்த்துக் களித்தாளா என்பதும் அவனுக்குத் தெரியாது. நாளுக்கு நாள் ரோஜா செழித்து அபரிமிதமாகப் புஷ்பிக்க ஆரம்பித்தது. வாசுதேவனுக்கு அலுத்துவிட்டது. என்னதான் ரஸிகனானாலும் பூவை

என்ன பண்ண முடியும்? புஷ்பங்கள் செடியோடு வாடிப் போவதை அறிந்த அவன் மனம் துக்கப் பட்டது. 'அந்தப் பெண் புஷ்பங்களைப் பறித்தபோது சண்டைக்குத் தயாராக நின்றேமே. இப்பொழுது அவைகள் வீணுகப் போகின்றனவே. மலர்கள் செடியிலேயே இருந்துவிட்டால் என்ன அழகு சொட்டிவிடுகிறது? ருக்மிணி தலையில் செண்டாய் வைத்துக்கொண்டால் எவ்வளவு அழகாக இருக்கும்? அவள்தான் சொல்லாமல் போய்விட்டாளே. திரும்பவும் அவளைப் பார்க்கப் போகிறேமா?'' என்று வருத்தப்பட்டான்.

* * * *

தகப்பனரிடமிருந்து வாசுதேவனுக்கு ஒரு கடிதம் வந்தது. ''மதுராந்தகத்தில் நாராயணையர் அகத்தில் ஒரு பெண் இருக்கிறது. பெண் உன் மனத்துக்குப் பிடித்தால் நான் நேராக வந்து ஏற்பாடு செய்கிறேன்'' என்று எழுதியிருந்தார். வாசுதேவன் மதுராந்தகம் போனன். பெண்ணின் தகப்பனர் அவனுக்குப் புதியவராகத்தான் இருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் பெண் வந்தாள் அவளைப் பார்த்துப் பிரமித்தான் வாசுதேவன். அவளும் அவனைப் பார்த்துத் திகைத்தாள். பெண்ணின் தகப்பனரிடம், 'சர்வ சம்மதம்' என்று சொல்லிவிட்டு, திரும்பவும் தன் தகப்பனருடன் வருவதாகச் சொல்லிவிட்டு வந்தான்.

தகப்பனருடன் திரும்பிப் போனபோது, ரகசியமாய் ரோஜாவும் முல்லையும் கலந்த மாலை ஒன்றை மறக்காமல் எடுத்துக்கொண்டு போனன். தகப்பனர் பெண்ணைப் பார்த்தார். ''அவர்கள் இருவரும் ஏதாவது பேசிக்கொள்வதானல் பேசிக்கொள்ளட்டும். நாம் இன்னேர் அறைக்குப் போவோம்'' என்று அழைத்துக்கொண்டு போய்விட்டார். வாசுதேவன் ருக்மிணியைப் பார்த்தான்.

''இந்தா! ரோஜாமாலை. உனக்கு ரொம்பப் பிடிக்குமே'' என்று அதை அவளிடம் நீட்டினன்.

''இதில்கூட முள் இருக்குமா?'' என்று குறும்பாகக் கேட்டாள் ருக்மிணி.

"சே, சே, வாங்கிக் கொள்!" என்று கெஞ்சினுன் அவன்.

"நீங்கள் அன்று செய்ததை மறந்து போய்விட்டேன் என்று நினைத்துக்கொண்டீர்களா?"

"அதற்குப் பிரதிபலனுக என்னையே உனக்கு அர்ப்பணம் செய்யப் போகிறேனே! கைக்காயம் ஆற அதிக நாள் பிடித்ததா? எங்கே, விரலைக் காட்டு பார்ப்போம்!" என்று வாசுதேவன் அவள் கரத்தைப் பற்றி ரோஜா மாலையைக் கழுத்தில் போட்டான்.

எதற்கு எது பிரதிபலன் என்று யோசித்துக் கொண்டே ருக்மிணி முல்லை நகை பூத்தாள்.

# 22

## நினைப்பும் நடப்பும்

நான்காவது தடவையாக என் கணவர் என்னைக் கேட்டார். "பெண் நன்றாக இருக்கிறாள் என்றா சொல்லுகிறாய்?" என்று. "ஆமாம்" என்று என் அபிப்பிராயத்தை ஊர்ஜிதப்படுத்தினேன். "எந்த விதத்தில்?" என்று மறுபடியும் கேட்டார் அவர். நாங்கள் பெண்ணைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தோம்.

மா நிறம், எடுப்பான மூக்கு, நீண்ட விழிகள். அவைகள் துறுதுறுவென்று பெண்ணின் புத்திசாலித்தனத்தைக் காட்டின. காதில் எல்லோரையும் போல் ஜிமிக்கி சுடர்விட்டது. பெண்ணைப் பார்க்கிறவர்கள் மொத்தத்தில் நன்றாக இருக்கிறாள் என்றுதான் அபிப்பிராயப்படுவார்கள்.

என் மைத்துனருக்கு வந்திருந்த ஜாதகங்களில் இந்தப் பெண்ணின் ஜாதகம் நன்றாகப் பொருந்தி இருப்பதாகவும், எங்கள் இருவரையும் போய்ப் பார்த்துவிட்டு வரும்படியும் என் மைத்துனர் நாகராஜன் எழுதியிருந்தார். நாகராஜன் நல்ல அழகு. அவரை மணப்பவள் அதிருஷ்டசாலி என்றுதான் சொல்லவேண்டும். வீட்டில் நாகராஜன், நான், என் கணவர் எல்லோரும் சேர்ந்து இருக்கும்போது வேடிக்கைக்காக அவர் வாயை நான் கிளறுவது வழக்கம். "உங்களுக்கு மனைவி எப்படிக் கிடைத்தால் தேவலை?" என்று கேட்பேன். உடனே அவர் புன்னகையோடு ஆரம்பிப்பார்.

"சிவப்பாக, அழகாக, படித்த, சங்கீதம் நன்றாகத் தெரிந்த, குடும்பத்துக்கு ஏற்ற பெண்ணைக் கர்வமில்லாமல் நிதான புத்தியோடு........."

"சர்வ லக்ஷணமும் பொருந்திய கன்னிகை என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாமே?" என்பேன்.

ஒவ்வொரு யுவனும் யுவதியும் விவாகத்துக்கு முன்பு இவ்வித மனக்கோட்டைகள்தாம் கட்டுகிறார்கள். எப்படி இருந்தபோதிலும், நாங்கள் அன்று பார்த்த பெண்ணுக்கு இத்தனை லட்சணங்களும் பரிபூரணமாக அமைந்திருந்தன என்று நானும் சொல்லமாட்டேன்.

“நாகராஜன் சொல்லுகிற மாதிரி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லையே?” என்றார் என் கணவர்.

“ஆமாம், எல்லாம் பொருந்தியிருப்பது கொஞ்சம் கஷ்டந்தான். பெண் புத்திசாலிதான். நான்காவது பாரம் படித்திருக்கிறாளாம். ‘என் மைத்துனருக்குப் பாட்டு என்றால் உயிர் நீ நன்றாகப் பாடுவாயா?’ என்று கேட்டேன். ‘ஓகோ என்றெல்லாம் பாடத் தெரியாது. சுமாராகத்தான் பாடுவேன்’ என்று விமலா சொல்லி விட்டாள்” என்றேன்.

“அது யார் விமலா?” என்றார்.

“பெண்ணின் பெயர்?”

“உனக்கும் எனக்குமே அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறதே என்றுதான் பார்க்கிறேன்.”

“நமக்குள் அநேக விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்படுவது வழக்கந்தானே?”

ரிக்ஷாக்காரன் எங்கள் சம்பாஷணையைக் கவனித்துக் கேட்டு வந்திருக்கிறான்போல் இருக்கிறது.

“பொம்பளேங்க மனசுக்கும் நம்ப மனசுக்கும் வித்தியாசம் இருக்குதுங்க சாமி!” என்று பேச்சை ஆரம்பித்தான். நாங்கள் பேச்சை நிறுத்தினோம்.

“ஆமாம், சாமி! அம்மா சொல்றாங்களே அது மெய்தானுங்க” என்றான் ரிக்ஷாக்காரன்.

“பாருங்க, வீட்டிலே எம் பெண்ஜாதி இருக்குதுங்களே, துப்புக் கெட்ட பொம்பளங்கோ. வேர்வையைச் சொட்டி வண்டி இழுத்து ஒரு ரூபா சம்பாதிச்சிக்கிட்டுப் போய்க் கொடுத்தாப் பத்துத் தினுசுக் கண்ணாடி வளையலும், பித்தளே மோதிரமும் வாங்கிப் போட்டுக்கினு வெட்டித் தண்ணிச்சோறு போடுதுங்க. பொம்பளே

என்னவோ அளகாத்தான் இருக்குது. அப்படியே பாத்துக்கினு இருக்கலாம்! ஆனா வவுறு நெறையுங்களா!'' என்றான்.

''அவன் சொல்லுவது உண்மைதான். விமலாவின் தாயாரும் இதையேதான் என்னிடம் கூறினாள்.''

''நாங்கள் சம்சாரிகள், எங்கள் பெண்கள் குடும்பத்துக்கு ஏற்ற மாதிரியில் இருப்பார்கள்'' என்று.

''அவன் கிடக்கிறான். என்னவோ உளறுகிறான். நாகராஜனுக்கு என்ன எழுத?'' என்று கேட்டார் என் கணவர்.

''என்ன எழுதுவது? உங்கள் அபிப்பிராயத்தையும் என் அபிப்பிராயத்தையும் எழுதுங்கள். இந்த விஷயங்களில் நம்மைவிட உங்கள் தம்பியின் சம்மதந்தான் முக்கியம்'' என்றேன்.

என்னைப் பார்க்க வந்தபோதுகூட என் மாமியார் இவரிடம் இப்படித்தான் சொன்னாளாம். ''பெண் என்னவோ சுமாராகத்தான் இருக்கிறாள். படித்திருக்கிறாள்; பாட்டு ஒன்றும் அவ்வளவு சுகமில்லை. உனக்குப் பிடித்தால் சரி.''

''என்ன பிரமாதம்? ஒரு மாதம்; கல்யாணம் ஆனவுடன் நம் வீட்டில் கொண்டுவந்து வைத்துக்கொண்டு எல்லாம் கற்றுக் கொடேன்'' என்று இவர் பதில் சொன்னாராம்.

''என்னை அழகில் சிறந்தவள் என்று பண்ணிக்கொண்டீர்கள்?'' என்று கேட்டேன் நான்.

''சிறந்தவளோ இல்லையோ, என் மனசுக்குப் பிடித்தது. அவ்வளவுதான்'' என்றார்.

''அப்படியானால் உங்கள் தம்பி மனத்துக்கு விமலாவைப் பிடிக்காது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''விமலாவுக்கு நீ வக்காலத்து வாங்கி வந்திருக்கிறாயா என்ன?''

"இல்லை, ஒரே அடியாகப் பெண் நாகராஜன் மனசுக்குத் தகுந்த மாதிரி இல்லை என்று சாதிக்கிறீர்களே?" என்றேன்.

பெண்ணைப் பார்த்துவிட்டு வந்த மறுதினமே நாகராஜனுக்குக் கடிதம் எழுதப்பட்டது. நாகராஜனிடமிருந்து பதில் வரத் தாமதமாகவே பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணையே அழைத்துக்கொண்டு அவனிடம் போய் விட்டார்கள். அவர்கள் கவலை அவர்களுக்கு!

"ஊரிலிருந்து கடுதாசி வந்ததா?" என்று தினம் ஆபீஸிலிருந்து வந்ததும் என்னைக் கேட்பார். எங்களுக்குள் ஒரு பந்தயம்! நாகராஜன் பெண் நன்றாக இருப்பதாக எழுதுவார் என்று நான் சாதித்தேன். பெண் சுமார்தான் என்று மழுப்பிவிடுவான் என்று என் கணவர் சாதித்தார். அதற்காகப் பந்தயம் வேறு போட்டுக்கொண்டோம்!

கடைசியாகக் கடிதம் வந்தது.

"மன்னியின் உத்தேசப்படி பெண்ணைப் பார்த்தால் அழகில்லை என்று சொல்ல முடியாது. உன் வார்த்தைப்படி பார்த்தால் பெண் சுமாராகத்தான் தோன்றுகிறது. பெண்ணை நான் சரியாகக் கவனிக்கவில்லை! இன்னொரு தரம் பார்க்கவேண்டும் என்றால் அவர்களுக்குக் கோபம் வராதா?" என்று கேட்டிருந்தார்.

யார் பந்தயத்தில் தோற்றது என்று எங்களுக்குப் புரியவில்லை.

"என்ன யோசனை எழுதப் போகிறீர்கள்?" என்று கேட்டேன் நான்.

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே?" என்றார் என் கணவர்.

"இன்னொரு தரம் பார்த்துவிடட்டுமே; இதில் என்ன முழுகிப் போகிறது?"

கடைசியில் நாகராஜனுக்கு எப்படியோ விமலாவைப் பிடித்துவிட்டது.

கல்யாணத்தன்று மத்தியான்னங்கூட, "உன் அபிப்பிராயத்துக்கு இணங்கித்தான் நான் கல்யாணம் செய்து

கொண்டேன். இப்பொழுதே இங்கே விட்டு விட்டுப் போனார்களானால் பள்ளிக்கூடத்தில் சேர்த்து மேலே படிக்க வைக்கலாம். பாட்டும் சொல்லித்தரலாம். கேட்டுப் பாரேன், மன்னி" என்றார் பேச்சில் ஸ்வாரஸ்யம் இல்லாமல்.

"இப்பொழுது இப்படித்தான் சொல்லுவீர்கள். பழகப் பழக விமலாவின் பேரில் உயிராக இருக்கப் போகிறீர்கள்" என்றேன்.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. படிப்பும் பாட்டும் இல்லாமல் அவள் பொம்மைமாதிரி இருந்தால் எனக்குப் பிடித்துவிடுமா?" என்றார்.

மூன்று வருஷங்கள் கழித்து மறுபடி என் மைத்துனரையும் விமலாவையும் ஒரு பெண் குழந்தையுடன் பார்க்க நேரிட்டது.

"பள்ளிக்கூடத்தில் சேர்ந்து எத்தனை வகுப்பு வரையில் வாசித்தாய்?" என்று கேட்டேன் விமலாவை.

விமலா கலீரென்று சிரித்துவிட்டு, "வீட்டுக்கு வரும் பத்திரிகைகளையே வாசிக்க ஒழியவில்லையே! பள்ளிக் கூடந்தான் இல்லாமல் குறைவாக இருக்கிறது" என்றாள்.

"அவள் சோம்பேறி, மன்னி" என்றார் நாகராஜன்.

"ஆமாம்; வீட்டு வேலைதான் எனக்குச் சரியாக இருக்கிறதே. உங்கள் துணிமணிகளையாவது சரியாக வைத்துக்கொள்கிறீர்களா?" என்று அவனையே மடக்கினாள் விமலா.

"பாட்டும் அவ்வளவுதானா? போகட்டும், ரஜனிக் காவது பாட்டுச் சொல்லி வையுங்கள்" என்றேன்.

"அவள் எங்கே பாடுகிறது? ரஜனிதான் முகாரி பாட ஆரம்பித்துவிடுகிறாளே?" என்று மனைவிக்காகப் பரிந்து பேசினார் நாகராஜன்.

மற்ற விஷயங்கள் எப்படி இருந்தாலும் பொதுவாக எல்லா நற்குணங்களும் விமலாவிடம் இருந்தன.

இவை போதாவா ஒரு பெண்ணுக்கு?

முற்றும்